
# சக்தி வழிபாடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சக்தி வழிபாடு

ஈசுர, நவராத்திரி விழா

புரட்டாதி 15 - 25, 2028

1997 அக்டோபர், 1-11

கொட்டாஞ்சேனை

**அருள்மிகு வரதராஜ விநாயகர் கோயில்**

105, கொட்டாஞ்சேனை வீதி

கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை பதிவு

முதற்பதிப்பு: 16.10.1993

இரண்டாம் பதிப்பு: 1.10.1997

விலை:

*பதிப்பாசிரியர்:* **சுப. இரத்தினவேல் பாண்டியன்** பி. எஸ்ஸி., மதுரை.

*தயாரிப்பு:* **தெ. ஈஸ்வரன்** பி. காம்., கொழும்பு.

**ஒளி அச்சுக்கோப்பு**: ம. இராஜப்பா பி. எஸ்ஸி., பா. செல்வராஜ் பி.எஸ்ஸி., வா. சாந்தி, ***காந்தளகம்***, சென்னை; **ஓவியர்**: ரா. சிவக்கொழுந்து (எம்.ஏ); **பக்கமாக்கல்**: தி. அருள்; **மெய்ப்பு**: புலவர் வெற்றியழகன், இராதிகா இலட்சுமணன் எம்.ஏ.; **எதிர்மறை**: சக்தி வண்ண ஆய்வகம், சென்னை; **மறுதோன்றி அச்சு**: மணி மறுதோன்றி அச்சகம், திருவல்லிக்கேணி; **தாள்:** 70 கி. சமீ.-மாப்லித்தோ; **வண்ணப்பகுப்பு**: பெர்பெக்ட் கிராபிக்ஸ்; **வண்ணஅச்சு**: மாருதி மறுதோன்றி அச்சகம்; **கட்டு**: வேதகிரி, இராயப்பேட்டை; **அலுவலக உதவி**: சொ. இரமேஷ் (பி.காம்.), செ.ரா.ஷோபனா (பி.எஸ்ஸி), அ. ஜெயராஜசிங்கம்; **தொழில் நுட்ப ஆலோசனை**: அச்சுத் தொழில் நுட்பப் பொறியியலாளர் ச. கயல்விழி; **அச்சிடல் உற்பத்தி**: *காந்தளகம்*, 4, முதல் மாடி, ரகிசா கட்டடம், 834, அண்ணா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி 8534505 மின் அஞ்சல்: sachi@giasmd01.vsnl.net.in.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# காணிக்கை

அருள்மிகு வரதராஜ விநாயகப் பெருமான் அருளாணைக்கு இணங்கவும், திருவருள் கூட்டவும், கொட்டாஞ்சேனை வாழ் விநாயக ரடியவர்கள் பலரின் வேண்டுகோளை ஏற்றும், சக்தி வழிபாட்டில் ஈடுபடுபவர்களின் பின்புலத்தை வளம்படுத்தவும், இந்த அரிய தொகுப்பை நவராத்திரி விழாக் காலத்தில் வெளியிட்டு, பிள்ளையார் திருப்பாதங்களில் காணிக்கையாக்குகிறோம்.

இதில் உள்ளவற்றைப் படிக்க; ஆழ்ந்து படிக்க; நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து படிக்க. உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பு நிறைந்து நிறைந்து, அருள் உளத்தெழுமாறு படிக்க. வம்மின் உலகியலீர் அருள்பெற்று பெருவாழ்வு வாழ்ந்திடலாம் காண்க. புனைந்துரைக்கவில்லை; பொய்புகலவில்லை; சத்தியமாகச் சொல் கிறோம். அருள்பெற்று உய்யுமாறு அனைவரையும் வேண்டுகிறோம்.

இத்தொகுப்பில் உள்ளவை பல்வேறு காலங்களில் பலரால் எழுதப்பெற்றவை. திரு. இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் முயன்று தொகுத்துள்ளார். திரு. ரா. சிவக்கொழுந்து அவர்கள் நோக்கு நெறி அருள் பெறுமாறு அரிய ஓவியங்களை வரைந்து தந்துள்ளார். அவர்கட்கு அருள்மிகு வரதராஜ விநாயகப் பெருமான் அருளும் அடியவர்களின் நன்றியும் என்றும் உண்டு.

த. நீதிராஜா
தெ. ஈஸ்வரன்
பொ. பாலசுந்தரம்
அறங்காவலர்கள்

105, கொட்டாஞ்சேனைத் தெரு
கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளே...**

கட்டுரைகள்,
மீனாட்சியம்மை கலிவெண்பா
அபிராமியம்மை பதிகம்
அபிராமி அந்தாதி
அம்பிகை 108 போற்றி
துர்க்கை அஷ்டகம்
லட்சுமி பிரார்த்தனை
சகலகலாவல்லி மாலை
லலிதாம்பிகை நவரத்தின மாலை
மாரியம்மன் தாலாட்டு
சுப்பிரமணிய பாரதியார் பாக்கள்
இன்னும் பற்பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே அன்னை

அமுது ஊறும் இனிய சொல் அம்மா. அதுவே உயிர்களின் முதற்சொல். உயிர்கட்குத் தாயாக உள்ளவள் அம்மா.

குழந்தை முதலில் அறிவது அன்னையைத்தான். பத்துத் திங்கள் பொறுமையோடு சுமந்து, பெற்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டி, பகலென்றும் இரவென்றும் பாராது கண் விழித்து வளர்ப்பவள் அன்னை.

வளரும் குழந்தையைப் பாதுகாக்கிறாள். தந்தை இவர்தான் எனக்காட்டுகிறாள். சான்றோன் எனக் கேட்டதும் ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கிறாள். தாயன்புக்கு ஈடு இணை இல்லை என்னும்படி அன்பைச் சொரிகிறாள். உயிர்கள் காட்டும் அன்பும் பரிவும் தாயிடம் பூத்த பண்புகள். தாயால் தரப்பட்ட இயல்புகள்.

'தாயாய் முலையைத் தருவானே
தாராதொழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பியினித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாள் அடைந்தேன்
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ'

**(ஆனந்தமாலை — திருவாசகம்)**

*— மாணிக்க வாசகர் சுவாமிகள்*

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்''
''தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை''

*— ஔவையார்*

''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே''

*— சுப்பிரமணிய பாரதியார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக அன்று தொட்டு இன்று வரை தாயைப் போற்றும் மரபு, தாயைத் தெய்வமாகக் காணும் இயல்பு, தாயை வழிபடும் முறைமைகள் இடையீடின்றி வழங்கி வருகின்றன.

முற்றும் துறந்த முனிவர்கள் கூடத் தாயைத் துறந்தனர் அல்லர். அவர்கட்கும் வழிபடு தெய்வமாகவே தாய் அமைந்தாள்.

'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்றவர் பட்டினத்தார். கோடி கோடியாகச் சேர்த்து வைத்த செல்வங்களைத் தெருவில் வாரி இறைத்தவர். மனைவியையும் சுற்றத்தையும் உதறி எறிந்தவர். சுகபோக வாழ்வை நீத்தவர். காடோ, செடியோ, கடற்புறமோ, கனமே மிகுந்த நாடோ, நகர்ப்புறமோ, வீடோ, புறத் திண்ணையோ, வயல்வெளியோ என்று பாராமல் அலைந் தவர். கூத்தபிரான் கழலிணைகளை நினைந்து உருகியவர்.

நினைவு, கனவு, உறக்கம் என்ற உணர்வு நிலைகளைக் கடந்தவர், பொறிபுலன்களைக் கடந்தவர். நாம ரூப வேறு பாடுகளை மறந்தவர். மானம், அவமானம், இன்பம், துன்பம் என்பனவற்றை வேறறக் கொண்டவர். பற்றற்ற நிலையை எய்தியவர்.

அத்தகைய அருளாளனும் தன்னைப் பெற்ற அன்னை இறந்தபொழுது கதறி அழுதார்.

''முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே''

எனத் தாய்க்குத் தீ மூட்டினார். அன்னை ஈந்த உடல் தான் மெய்ஞ்ஞானம் பெற ஊடகமாய் அமைந்தது என உணர்ந்தார். அன்னையைப் போற்றினார். பட்டினத்தடிகளின் வாழ்வும் வரலாறும் பற்றற்ற நிலையிலும் அன்னையை வழிபடும் இயல்புக்கு எடுத்துக்காட்டு.

கேரளம் ஈந்த முனிவர் ஆதிசங்கரர், காலடி அவர் பிறந்த ஊர், நான்காவது வயதில் தந்தையை இழந்தார். அன்னையுடன் வளர்ந்த அவர் தனது பன்னிரண்டாவது வயதில், அன்னையின் அனுமதி பெற்றுத் துறவியானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதிலேயே வேத சாத்திரங்களைக் கற்றுத் தெளிந்தார். ஆன்மீகப்பணி புரியத் தாயின் அனுமதி கிடைத்தவுடன், தாயைப் பார்த்து, ''அம்மா, அனைத்து உறவுகளையும் நான் விட்டேன். துறவியாகிறேன், எனினும் உன்இறுதிக் காலத்தில் உன்னிடம் வந்து சேருவேன். நானே உனது அந்திமக் கடன்களைச் செய்வேன். உனக்குப் பிள்ளை நான்'' எனக் கூறினார்.

இந்தியத் துணைக்கண்டமெங்கும் சென்றார். இந்து சமய விழிப்புணர்ச்சிக்கு வித்திட்டார். விரித்துரைத்தார். நூல்கள் எழுதினார். மடங்கள் நிறுவினார். ஓயாது உழைத்தார்.

துங்கபத்திரை நதிக்கரையில் சிருங்கேரியில் சாரதா பீடம் நிறுவித் தங்கியிருந்த காலை, அவருக்குத் தாயார் பற்றிய செய்தி வந்தது. அன்னையின் அந்திம நாட்கள் நெருங்கியதை அறிந்த அவர் காலடி மீண்டார், அன்னையைக் கண்டார். அன்னையும் மகிழ்ந்தார். ஆன்மீக ஆற்றல் பெற்ற சங்கரர் திருமாலை நோக்கிப் பாமாலை பாடினார், அன்னையின் ஆத்ம முக்தியைக் கண்டார்.

முன்பு வாக்களித்தபடி அன்னையின் உடலுக்குச் சங்கரர் தீமூட்ட முயன்றார். துறவியர் செயல் இதுவல்ல என ஊரவர் பழித்தனர். உற்றவர் இழித்தனர். எனினும் சங்கரர் ஒப்பவில்லை. அன்னையைத் தெய்வம் என வழிபட்டார். தானே உடலைச் சுமந்து சென்றார். சிதையில் இட்டார். தீ மூட்டினார். இறுதிக்கடன்களை முடித்தார். மீண்டும் தன் பணியைத் தொடர்ந்தார்.

பற்று அற்று நின்ற நிலையிலும் அன்னைக்குக் கடன்களை ஆற்றுக, அன்னை மீதுள்ள பற்றுப் பற்றே அல்ல, பாசமே அல்ல, அன்னை வழிபடு தெய்வமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தி வழிபாடு

தாய்வழி பிறப்பன உயிர்கள், பெற்றுத் தருபவள் தாய். உயிர்களை மட்டுமா? நாம் காணும் உலகம், கண்ணுக் கெட்டாதவரை பரந்து விரிந்த அண்டம் யாவையும் பெற்றது யார்? படைத்தது யார்? இவை எப்படித் தோன்றின.

அலைபாயும் கடல், வானுயர் மலை, உயிர்தரும் காற்று, எல்லைகாணா ஆகாயம், சுட்டெரிக்கும் தீ யாவற்றையும் தோற்றுவித்தவர் யார்?

வண்ண வண்ணச் செடிகள்; மயக்கும் மணம் தரும் மலர்கள்; சுவைதரும் பழங்கள்; வனப்புமிகு இயற்கையின் எழில் கொஞ்சும் பறவைகள், வியப்பூட்டும் நீர் வாழ்வன; விந்தைமிகு நிலம் வாழ்வன ;இவற்றை இணைத்துத் தோற்று வித்த சக்தி எது?

சூரியன், சந்திரன், பூமி, கோள்கள் யாவற்றின் தோற்றமும் அசைவும் இயக்கமும் நடைபெற மூலமான சக்தி எது?

உயிர்கட்குத் தாய்போல அண்டத்துக்கும் தாயானவளே சக்தி. நம் சிற்றறிவிற்கு அப்பாற்பட்ட பரம்பொருளின் சக்தியே உலகின் தாய்.

அளவற்ற அன்பு, எல்லையற்ற கருணை, தொடர்ச்சியான இடையீடற்ற இயக்கம் இவைதான் பரம்பொருளின் சக்தி.

இந்த அன்னையின் வழிபாடே சக்திவழிபாடு. அறிவு நிலை சிவன் எனில் இயக்க நிலை சக்தியாம். சிவம் வேறு சக்தி வேறு அல்ல. சொல்லும் பொருளும் போல, தீயும் வெப்பமும் போலச் சிவனும் சக்தியும் வேறறக் கலந்து நிற்பவர்கள்.

'சத்தன் அருள்தரின்
சத்தி அருளுண்டாம்
சத்தி அருள்தரின்
சத்தன் அருளுண்டாம்'

— *திருமூலர், திருமந்திரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் தந்தை எனில் சக்தியே தாய் - இப்படி இணைந்து நோக்கி வழிபடுதலே மரபு.

'ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்'
'தாயானைத் தவமான தன்மையானை'

— அப்பர்

'தாயாகி என்னை வளர்த்தனை போற்றி'

— மாணிக்கவாசகர்

'தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற
எனது தெய்வம்'

— வள்ளலார்

இவ்வாறு பரம்பொருளையும் சக்தியையும் வழிபடும் மரபு தொன்று தொட்டு உள்ளதாகும். உலகின் அன்னையே சக்தி. அவளே அனைத்தின் தோற்றத்துக்கும் காரணி என்ற கொள்கை உலகின் பல பாகங்களிலும் ஏற்றுக்கொள்ளப் பெற்றதாகும்.

சிந்துச் சமவெளியில் அகழ்வாராய்ச்சிகளில் சக்தியின் வடிவங்கள் பெறப்பட்டன. 4000 ஆண்டுகட்கு முற்பட்ட காலத்து மக்கள் அன்னை வழிபாட்டை மேற்கொண்டதற்கு இவை ஆதாரங்கள்.

பண்டைய நாகரீகங்கள் பலவற்றில் சக்தி வழிபாடு இடம் பெற்றுள்ளதை அகழ்வாய்வாளர், வரலாறு புனைவோர் தெளியக் கூறியுள்ளனர். அங்கெல்லாம் சக்தியின் உருவச்சிலைகள் க்ண்டெடுக்கப்பெற்றுள்ளன.

இருக்கு வேதத்தில் பெண் தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் உண்டு, 'தேவி சூக்தம்' என்ற பகுதியில் உஷஸ், இராத்ரி, அதிதி, வாசி, புரங்கி, திசசு, ஈளா, வாருணி ஆகிய பெண் தெய்வங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. இதனால் அறியப்படுவது என்ன? சக்திவழிபாடு வேத காலத்துக்கு முன்பே இருந்தது என்பதாம்.

பக்தர்கள் சக்தியைப் பல்வேறு வடிவங்களில் காண்கின்றனர். மாரியம்மன் வழிபாடு ஒருபுறம்.

காளிஆத்தாள் வழிபாடு ஒருபுறம். கண்ணகி யம்மன் வழிபாடு ஒருபுறம். உலக நாயகி வழிபாடு ஒருபுறம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரமாயிலென், சிற்றூராயிலென், அங்கெல்லாம் அம்மன் கோவில்கள் உள.

அன்னைதான் பராசக்தி, அவளே ஆதிசக்தி. அவள் அருளால் உலகில் நன்மைகள் நிகழ்கின்றன. நோய் தீர்ப் பவள் அவளே. வினை போக்குபவள் அவளே. தனம் தருவாள் தளர்வறியா மனம் தருவாள். நல்லன எல்லாம் தருவாள்.

அறியாமல் செய்த பிழைகள் பொறுப்பாள். பால் நினைந்து ஊட்டும் தாயாகி, பிறந்தோர் எய்தும் பயன் களாகிய அறம், பொருள், இன்பம், வீடு அனைத்தையும் தந்தருள்வாள்.

சக்தி இன்றிச் சிவன் இல்லை எனத் தனது சௌந்தர்ய லகரியில் சக்தியின் மகிமையைக் கூறிய ஆதிசங்கரர், தன்னை உண்மையாக வழிபடுவோருக்குச் சகல செல்வங் களும், யோகங்களும், பெருவாழ்வும் அளிக்கிறாள் அன்னை எனக் கூறியுள்ளார்.

**நர்த்தனம் ஆடிடுவாள்**

சின்னஞ்சிறு பெண் போலே சித்தாடை இடை உடுத்தி
சிவகங்கைக் குளத்தருகே ஸ்ரீதுர்கை சிரித்திருப்பாள்
(சின்)
பெண்ணவளின் கண் அழகைப் பேசி முடியாது
பேரழகுக்கு ஈடாக வேறொன்றும் கிடையாது(சின்)

மின்னலைப்போல் மேனி அன்னை சிவகாமி
இன்பம் எல்லாம் தருவாள் எண்ணம்
எல்லாம் நிறைவாள் பின்னல் ஜடை
போட்டுப் பிச்சிப்பூ சூடிடுவாள்
பித்தனுக்கு இணையாக நர்த்தனம் ஆடிடுவாள்(சின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் அருள்

நினைந்து நினைந்து உருகி, உள்ளம் ஒருமைப்பட்டு, அன்னையை நெஞ்சில் நிறுத்தி வழிபடும் அடியவர்கள் அன்னையின் அருளை அளப்பில பெறுவர்.

அன்னையின் அருள் பெற்று ஆன்ம ஈடேற்றம் பெற்றோர் எண்ணிக்கை அளப்பிலது. எவர் எவர் எதை எதை உள்ளம் நெக்குருகி வழிபட்டுக் கேட்கிறாரோ அவரவர்க்கு அதையெல்லாம் வழங்கி ஆட்கொள்ளும் அன்னையே சக்தியாவாள்.

சீர்காழியில் ஞானசம்பந்தப் பெருமான், 'அம்மா' என்றழைத்த குரல்கேட்டு, சிவபெருமான் உடன் வர வந்த உமாதேவியார் ஞானப்பால் ஊட்டி அருள் வழங்கினார். ஞானப்பால் உண்டு திருஞானசம்பந்தர் சிவஞானம் பெற்றார்.

உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் பெற்ற திருஞானசம்பந்தர், சைவமும், தமிழும் தழைக்க அருள் வாழ்வு வாழ்ந்தார். புறச்சமயவாதிகளை வாதத்தில் வென்றார். தேவாரப் பனுவல்கள் பாடித் தமிழைத் தெய்வ மொழியாக்கினார். உமையின் அருளாலன்றோ அவர் ஊட்டிய ஞானப்பால் பெற்ற திருஞானசம்பந்தர் அருளாள ராக வாழ்ந்து, தமிழரும் சைவமும் வாழ வழிசெய்தார்.

ஆதி சங்கரரின் சௌந்தர்ய லகரியில் 75வது பாடலில், ''பார்வதி அம்மையே! உன் பாலை அருந்திய திராவிடக் குழந்தை பெரும்புலவரிடை எல்லோரும் கவரக் கூடிய கவி ஆகிவிட்டார்'' எனக் கூறுகிறார்,

காஞ்சிபுரத்தில் 1500 ஆண்டுகட்கு முன் சீகர் வாழ்ந்தார். இவர் பிறவியில் ஊமை. சக்தியை வழிபட்டார். அருள் பெற்றார். பேசும் திறமும் பெற்றார். அன்னை காமாட்சியைப் போற்றி 500 பாடல்கள் கொண்ட ''ஸ்ரீமுக பஞ்ச துதி'' பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

300 ஆண்டுகட்கு முன் திருக்கடவூரில் வாழ்ந்தவர் அபிராமிப்பட்டர். அன்னை அபிராமியிடம் ஆழ்ந்த பற்றும், ஈடுபாடும் கொண்டவர். கோயிலில் தியானத்தில் இருந்த பொழுது திதி கேட்டு அங்கு வந்த சரபோஜி மன்னனிடம் அமாவாசை என்பதற்குப் பதிலாகப் பூரணை எனக்கூறினார். மன்னன் சினந்தான். உறிகட்டிக் கீழே தீமூட்ட, உறியில் இருந்தவாறு அபிராமி அந்தாதி பாடத் தொடங்கினார். ''விழிக்கே அருளுண்டு...'' எனத்தொடங்கும் 79வது பாடலைப் பாடும்பொழுது அன்னை தோன்றித் தனது தோட்டினை வானத்தில் வீசிப் பூரணச்சந்திரன் தரும் ஒளியைக் காட்டினாள். மன்னவரும் மற்றையவரும் வியந்தனர். தொடர்ந்து பாடல்களைப் பாடி 100 பாட்டுகளாக அந்தாதியை நிறைவு செய்தார்.

வங்காளத்தில் கடந்த நூற்றாண்டில் பிறந்த இராம கிருஷ்ணர் தட்சிணேஸ்வரம் காளிகோவிலில் பூசாரியாக இருந்தவர். சாத்திரமுறைப்படி சக்திவழிபாடு செய்தவர். யோகமுத்தியும் ஞானசித்தியும் பெற்றவர். நினைத்தவுடன் நிர்விகல்ப சமாதி கைவரப் பெற்ற பெருமான். இன்று உலகம் முழுவதும் பரந்து சமுதாயப்பணி செய்து வரும் இராமகிருஷ்ணமிஷன் இவர் சீடர்களால் அமைக்கப் பெற்றது. கல்விப்பணி, மருத்துவப்பணி, ஆன்மிகப்பணி எனப் பணிபுரியும் இந்த மிஷனின் அருளாளர்கள் சக்தி உபாசகர் இராமகிருஷ்ண பரமகம்சர் வழி வந்தவர்களன்றோ?

தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வாழ்ந்தவர் வீரை கவிராச பண்டிதர். அன்னை மீனாட்சியின் அருள் பெற்றவர். ஆதிசங்கரர் இயற்றிய 'சௌந்தர்ய லகரியை'த் தமிழில் தந்துள்ளார்.

இந்த நூற்றாண்டில் சக்தி வழிபாட்டைப் பரவலாக மக்களிடையே பரப்பி வருபவர் மேல்மருவத்தூர் ஆதிபராசக்திக் கோவிலின் பங்காரு அடிகளார். சக்தி வழிபாடு அனைத்துத் தர மக்களுக்கும் பொதுவானது என்பதைப் பரப்பி வருகிறார். ஆன்மிகப்பணியுடன் சமுதாயப்பணியும் செய்துவருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி வழிபாட்டில் ஈடுபடும் அருளாளர்கள் காலம் தோறும் தோன்றிச் சக்தி வழிபாட்டின் பெருமையை உயர்த்திப் போந்தார்கள்.

நாமும் சக்திவழிபாட்டில் ஈடுபட்டு அருள்பெற்று உயர்வோமாக.

## வெற்றி

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றி மற்றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டி னேனுக் கருளினள் காளி
தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாரு மானுட மாயினு மஃதைப்
படுத்த மாய்ப்ப ளருட்பெருங் காளி
பாரில் வெற்றி யெனக்குறு மாறே. 1

எண்ணு மெண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி யெதனிலும் வெற்றி
கண்ணு மாருயிரு மென நின்றாள்
காளித் தாயிங் கெனக்கருள் செய்தாள்
மண்ணுங் காற்றும் புனலு மனலும்
வானும் வந்து வணங்கி நில்லாவோ?
விண்ணு ளோர்பணிந் தேவல்செய் யாரோ
வெல்க காளி பதங்களென் பார்க்கே? 2

— சுப்பிரமணிய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் வடிவங்கள்

பரம்பொருள் உருவமும் பெயரும் அற்றது. பேரறிவாகவும், எப்பொழுதும் எங்கும் எதிலும் ஊடுருவி நின்று அனைத்தையும் இயக்கும் ஆற்றலாகவும் உளது.

அறிவும் ஆற்றலும் இணைந்ததே பரம்பொருள். அறிவு சிவன். ஆற்றல் சக்தி. அறிவு சதாசிவமாகவும், பரம சிவமாகவும், தந்தையாகவும் ஆற்றல் பராசக்தியாகவும் ஆதிசக்தியாகவும் அன்னையாகவும் சக்தி வழிபடப் பெற்றது.

சௌந்தர்ய லகரியில் ஆதிசங்கரர் பராசக்தியை, உலக அன்னை, பனிமலை அரசன் மகள், பரமசிவன் பத்தினி, உமை, சிவை, ஆதியும் அந்தமும் இல்லாதவள், பவானி, பார்வதி என்றெல்லாம் அழைக்கின்றார்.

அன்னை பராசக்தியே, கன்னியாகுமரியில் குமரியாகவும், காஞ்சிபுரத்தில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சி ஆகவும், மதுரையில் மீனாட்சியாகவும்,நெல்லையில் காந்திமதியாகவும், திருகேதீச்சரத்தில் கௌரியாகவும், மயிலாப்பூரில் கற்பகாம்பாள் ஆகவும் இன்னும் பற்பல ஊர்களில், பற்பல பெயர்களுடனும் காட்சி தருகிறாள்.

பராசக்தி, பார்வதி, துர்க்கை, திருமகள், கலைமகள், காளி, பவானி, புவனேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, லலிதா மகா திரிபுர சுந்தரி எனப் பல்வேறு வடிவங்களில் பல்வேறு பெயர்களுடன் இருப்பவள் அன்னையே.

**லலிதா மகாதிரிபுர சுந்தரி:-** லலிதா எனில் அழகு, திரிபுரம் எனில் அறிபவள், அறியப்படும் பொருள், அறிவு என்ற மூன்றும். சுந்தரி எனில் அழகி.

மாதுளம்பூ நிறத்தாள். கைகள் நான்கு உடையாள். இடது பின் கையில் பாசம், வலது பின் கையில் அங்குசம் கொண்டுளாள். ஆசையை அடக்கப் பாசம்; குரோதத்தை அடக்க அங்குசம். பாசம் இச்சா சக்தி, அங்குசம் ஞானாசக்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் இடது கையில் கரும்பு. முன்வலது கையில் ஐந்து வித மலர்கள். கரும்பு உள்ளத்தையும், மலர்கள் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய ஐந்து புலன்களையும் குறிக்கும். வில் - அம்பு கிரியா சக்தி.

மாணிக்கம், வைரம் புனைந்த முடி - ஞானஒளி; முக்கண்கள்; நறுமணக்கூந்தல்; கஸ்தூரிப்பொட்டு; புன்னகை தவழும் முகம்; பருத்த தனங்கள், செந்நிறப்பட்டாடை, ஒளிதரும் அணிகலன்கள்.

தன்னை வழிபடுவோர் அகத்திருள் போக்குவாள். அறம், பொருள், இன்பம் வீடு நான்கையும் தருவாள்.

**துர்க்கை:**

திருமாலின் சகோதரி துர்க்கை. திருமாலைப் போன்றே சங்கு, சக்கரம், வில், அம்பு ஆகிய ஆயுதங்களைக் கையில் ஏந்தியவள். சிங்கம் துர்க்கையின் வாகனம்.

மணிமுடி சூடிய தலையில் பிறைச் சந்திரன் உண்டு. மன்னர்களும் வீரர்களும் துர்க்கையை வழிபடுவர். தன்னைச் சரணடைந்தவர்களின் இன்னலைத் துடைப்பாள். துன்பங்கள் போக்குவாள்.

நவராத்திரியின் முதன் மூன்று நாள்கள் துர்க்கையை வழிபடும் நாள்களாம்.

**திருமகள்:**

திருமாலின் சக்தி இலக்குமி; செல்வத்தின் தாய் இவளே; ஒப்பற்ற அழகுடையாள்; வெள்ளை முகம், கருத்த தோள்கள், சிவந்த இடை, சிவந்த பாதங்கள் உடையாள்.

காணக்கிடையா மாலைகள், ஆடைகள், அணிகலன்கள் அணிந்தவள். சந்தனப்பூச்சு மேனியள். கவர்ச்சியான தோற்றமும் வனப்புமிக்க இளமையும் செறிந்தவள். தாமரையில் அமர்ந்திருப்பாள். நான்கு யானைகள் எப்பொழுதும் இவளை நீராட்டும். நான்கு கைகளில் பின் இரண்டிலும் தாமரை மலர்கள்; முன் இரண்டில் ஒன்று அபயகரம். மற்றது வரதகரம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன லட்சுமி, தானிய லட்சுமி என எட்டு வகை இலக்குமிகள் அஷ்ட இலக்குமிகள் எனப்படுவர்.

திருமகளை வழிபடுவோர் பெரும் செல்வம் அடைவர். மேன்மையுடன் வாழ்வர்.

நவராத்திரி நாள்களில் நடுமூன்று நாள்கள் திரு மகளுக்கு உரியன.

**கலைமகள்:**

பிரம்மாவின் சக்தி சரஸ்வதி; கல்வியின் தாய் இவளே; வெள்ளை நிறமுடையாள். வெள்ளை ஆடை அணிவாள். வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்.

நான்கு கைகளுள் பின் வலக்கையில் மாலை — கல்வி யைக் குறிக்கும்; பின் இடது கையில் ஏட்டுச் சுவடி — ஞானத்தைக் குறிக்கும்; முன் இரு கைகளிலும் வீணையை ஏந்தியுள்ளாள். வீணையின் இசை ஆனந்தத்தினைத் தரும் — அறிவைக் குறிக்கும்.

பக்தியோடு கலைமகளை வழிபட்டு, அனைத்தையும் அறியும் அறிவைப் பெறுவர்.

நவராத்திரி நாள்களின் இறுதி மூன்று நாள்களும் கலை மகளுக்குரிய நாள்கள்.

**மகாகாளி:**

பத்துத் தலைகள், பத்துக் கைகள், பத்துத் தோள்கள், ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள்.

கரிய நிறமேனி, வாயில் தெற்றிப் பற்கள்; தொங்கும் நாக்கு, கத்தி, அம்பு, கதை, சூலம், சக்கரம், பாசம், புசுண்டி, பரிகம், வில், இரத்தம் தோய்ந்த தலை இவற்றைப் பத்துக் கைகளில் கொண்டவள். செத்த உடல்களால் பின்னிய ஆடை, கபாலத் தலை அணி அணிந்திருப்பாள்.

உலகின் அழிவுச் சக்தி இவளே. போர், கிளர்ச்சி என்பனவும் இயற்கை அழிவுக் காரணிகளான புயல், பூகம்பம், எரிமலை, வெள்ளம், தொற்றுநோய் போன்ற அனைத்து அழிவுக்கும் இவளே இறைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை வழிபடுவோருக்கு அனைத்து உலகையும் வசமாக்குவாள். இராமகிருஷ்ண பரமஹம்சர் அன்னை காளியை வழிபட்டு உய்ந்தார்.

**அன்னபூரணி:**

பொன்வண்ண மேனி பொன் அணிகலன்கள் அணிந்தவள். பூமாலை சூடியவள் வலது கையில் பொன் அகப்பை, இடது கையில் பொற்கலசத்தில் பாற்சோறு.

உயிர்கள் அனைத்துக்கும் உணவு வழங்கும் அன்னை அவள். காசியில் கோவில் கொண்டருளி இருப்பவள் அன்னபூரணித்தாய்.

**மகிடாசுரமர்த்தினி:**

கொற்றவை என்ற அன்னையே மகிடாசுரமர்த்தினி, சங்ககால நூல்களிலும், சங்கம் மருவிய காலத்ததான சிலப்பதிகாரத்திலும் கொற்றவை பற்றி குறிப்புகள் உண்டு.

புலித்தோல் ஆடை, யானைத்தோல் போர்வை, காட்டெருமைத் தலைமேல் நிற்றல், சிங்கம் வாகனம். சிவனின் ஒரு பாதியே கொற்றவை.

மகிடன் என்னும் அசுரனைக் கொன்றதால் இப்பெயர் வந்தது.

**சந்தோஷிமாதா:**

விநாயகப் பெருமானின் திருமகள் சந்தோஷிமாதா. மலைமகள், திருமகள், கலைமகள் மூவரின் சக்திகளையும், சிறப்புகளையும் பெற்றவர்.

வெள்ளிக்கிழமைகளில் சந்தோஷிமாதா விரதம் தொடங்கலாம். அடுத்த வெள்ளிவரை விரதமிருக்க வேண்டும்.

நாள்தோறும் சந்தோஷிமாதா படத்திற்குப் பூசை செய்யவேண்டும். வறுத்த கடலையும், வெல்லமும் அவளுக்கு உகந்த நைவேத்தியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரத நாள்களில் சந்தோஷிமாதா கதையைப் படிக்க வேண்டும். அந்த நாள்களில் புளியோ, புளிசேர்ந்த உணவோ உண்ணக்கூடாது.

சந்தோஷிமாதாவை வழிபடுபவர்கள் எல்லாச் செல்வமும் பெற்றுச் சந்தோஷமாக வாழ்வர். சந்தோஷத்தை அளிப்பதால் சந்தோஷிமாதா எனப் பெயர் பெற்றாள்.

## கேட்பன

**நொண்டிச் சிந்து**

நல்லதொர் வீணைசெய்தே — அதை
நலங்கெடப் புழுதியி லெறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி — எனைச்
சுடர்மிகு மறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி — நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவஃயோ? 1

விசையுறு பந்தினைப்போல் — உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்
நசையறு மனங் கேட்டேன் — நித்தம்
நவமெனச் சுடர்தரு முயிர் கேட்டேன்
தசையினைத் தீ சுடினும் — சிவ
சக்தியைப் பாடுநல் லகங் கேட்டேன்
அசைவறு மதி கேட்டேன் — இவை
அருள்வதி லுனக்கெதுந் தடையுளதோ? 2

— சுப்பிரமணிய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாட்டு முறைகள்

ஒரு பிறப்பில் செய்யும் நல்வினை, தீவினைகளின் பயனை அனுபவிக்க ஆன்மா மீண்டும் பிறவி எடுக்கின்றது. பிறப்பு, இறப்பு எனும் சுழற்சியில் சிக்குகிறது. இன்பதுன்ப வலையில் பட்டழுந்தித் தவிக்கிறது. பிறவிப் பெருங்கடலை நீந்த வழியறியாமல் அலமந்து நிற்கிறது.

அஞ்ஞானம் மறைக்கிறது. மெய்ஞ்ஞானம் தெரிவதில்லை. எனினும் ஒரு பிறவியில் செய்யும் நல்வினைகள் ஆன்மாவுக்கு இறையுணர்வைத் தோற்றுவிக்கின்றன. ஆன்மா வழிபட்டு முயற்சியில் ஈடுபடுகிறது.

இறைவழிபாடு ஆன்மாவுக்கு அஞ்ஞான இருளை அகற்றும், மெய்ஞ்ஞான அறிவைக் கொடுக்கும், முக்திபெறும் வழியைக் காட்டும்.

ஆன்மாவை வழிப்படுத்துதல் — ஆன்மாவை இறைவன் பால் வழிப்படுத்துதல் — அதுவே வழிபாடு.

பரம்பொருளின் கூறுதானே ஆன்மா. சச்சிதானந்த வடிவம் ஆன்மா. உடலையும், உலகத்தையும் போகங்களையும் பெரிதென மயங்கும் ஆன்மாவுக்கு, அஞ்ஞானத்தைப் போக்கி, மெய்ஞ்ஞானத்தைக் காட்டி, இறைவன் மீண்டும் சச்சிதானந்த நிலையை அருளுகிறார்.

பிறவிப் பெருங்கடலில் நீந்துவோர்க்கு, அஞ்ஞானம் மறைக்க, கரை தெரியாமல் அலமந்து நிற்போர்க்குக் கலங்கரை விளக்காக ஒளிதந்து வழிகாட்டுபவள் அன்னை.

ஞானாம்பிகையான அன்னைபராசக்தி அஞ்ஞானத்துள் அமிழ்ந்த ஆத்துமாவை விடுவிக்கிறாள். மெய்ஞ்ஞானத்தை உணர்த்துகிறாள். முக்தி எனும் கரை சேர்க்கிறாள். இறைவன் திருவடி மெய்ஞ்ஞானமே. பிறவிப் பெருங்கடலை நீந்துவதே அத்திருவடியை அடையத்தான் என்பார் திருவள்ளுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையை வழிபடவேண்டும் என்ற எண்ணமே முன் செய்த நல்வினைப் பயனாம். அன்னையை வழிபடும் முறைகள் பல பக்தி வலையில் படுமாறு வழிபடுதலே சிறந்த முறையாகும். சரியை நெறி, கிரியை நெறி, யோக நெறி, ஞான நெறி என்ற நான்கு நெறிகள் மூலம் அன்னை வழிபாட்டை நிகழ்த்தலாம்.

## சரியை வழிபாடு:-

பொழுது புலர்வதன்முன் கோவில் சென்று அலகிட்டு, கோவில் தரையை மெழுகி, விளக்கேற்றி, பூஞ்சோலை பூக்கொய்து மாலையாக்கிச் சூட்டி, தேங்காய், பால், பழம், வெற்றிலை, பாக்கு, திருவமுது இவை படைத்து, அன்னை யின் புகழ்பாடி, உளம் நெக்கு உருக, பக்திக் களிப்பால் உடல் கூத்தாடத் துதித்து வழிபடுதல் சரியை நெறியாம். நிலையான முக்திப் பேற்றைப் பெறும் வழி இதுவேயாம்.

உடல் அரும்பி விதிர்விதிர்த்து, கைகள் தலைமேல் குவிந்து கண்களில் நீர் சொரிந்து, உள்ளம் குழைந்து, வெதும்பி, அன்னையைப் புகழ்ந்து போற்றிப் பாடுதல் சரியை நெறி.

இவ்வழிபாட்டினால் மெய்ஞ்ஞானம் கைகூடும். அன்னை அருகில் இருப்பது போன்ற உணர்வு பதியும். அன்னையைத் தலைவியாகவும் அன்னையின் அடிமையாக ஆன்மாவையும் எண்ணி வழிபடும் வழியே இவ்வழி இதுவே சாலோக பதவி.

## கிரியை வழிபாடு:-

அருச்சனை, மந்திரம், யந்திரம், தந்திரம், தியானம் ஆகியன இடம்பெறுவது கிரியை வழிபாட்டிலாம்.

தனக்கு விருப்பமான சக்தியின் திருவுருவத்தை மண்ணி னால், மரத்தினால், செம்பினால், பொன்னால் செய்தோ, செய்வித்தோ வைத்திருக்கலாம். அன்றி, அன்னையின் மந்திரங்களை எழுதிய யந்திரத் தகட்டை வைத்திருக்கலாம்.

இளநீர், பால், தயிர், பழச்சாறு ஆகியவற்றால் அபி டேகம் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடை அணிகலன்கள் அணிவித்தல்.

புனுகு, சவ்வாது, கஸ்தூரி, சந்தனம் ஆகிய வாசனைப் பொருட்களைச் சாற்றுதல்.

திருவிளக்கேற்றுதல்

நல் மணமுள்ள மலர்கள் ஒவ்வொன்றாக எடுத்து, அன்னையின் புகழ்கூறிப் போற்றி அருச்சனை செய்தல்.

பழவர்க்கங்கள் படைத்தல், திருவமுது படைத்தல், வெற்றிலை, பாக்கு, தேங்காய் படைத்தல்.

தூபம் காட்டல், தீபம் காட்டல், சாமரம் வீசல், கொடி, குடை ஆலவட்டம் பிடித்தல்.

அருச்சனை முடிவில் தான் தனது குரு மூலம் பெற்ற உபசேத மந்திரத்தைச் செபித்தல்.

அன்னையின் வடிவத்தை இதயத்தில் நிறுத்துதல், மனதை அதிற் பதிய வைத்தல், உரிய மந்திரத்தைக் குறிப் பிட்ட எண்ணிக்கையில் செபித்தல்.

இவை கிரியைகள். மிக எளிமையாக எவரும் ஈடு பட்டுச் செய்யக்கூடிய கிரியைகள்.

நிலைத்த மன உறுதி, உண்மையான அறிவு, அன்னைக்கு மிக அருகிலேயே இருப்பது போன்ற உணர்வு என்பன கிரியை நெறியைப் பின்பற்றுவோர் பெறுவர்.

நாள்தோறும் நாம் செய்யும் செயல்கள், பேசும் சொற் கள், எண்ணும் எண்ணங்கள் யாவற்றிலும் அன்னையின் வழிபாட்டைக் கொள்வது, தந்திரமாகும்.

வெள்ளி, செவ்வாய் நாள்களில் உண்ணாநோன்பும் மௌனமும் நற்பயன் தரும். முழுநிலா நாள், வெள்ளிக் கிழமை ஆகிய நாட்கள் தேவி பூசை செய்ய ஏற்ற நாட்கள். நவராத்திரி நாள்களில் முதல் மூன்று நாள்கள் துர்க்கை அம்பாளுக்கும், அடுத்த மூன்று நாள்கள் திருமகளுக்கும், இறுதி மூன்று நாள்கள் கலைமகளுக்கும் வழிபாடியியற்ற ஏற்ற நாள்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டுக்குச் சிறந்த நேரம் நாள்தோறும் அதி காலை 4 மணி தொடக்கம் 6 மணிவரையும், மாலை 6 மணி தொடக்கம் 8 மணி வரையுமாம். இவை பிரம்ம முகூர்த்தம் எனப்படும்.

**யோக வழிபாடு:-**

தன்னையே அன்னை பராசக்தியாகக் காண்பதே யோக நெறி. இதற்குக் குருவின் வழிகாட்டல், ஆசி, உதவி என்பன தேவை.

மனிதன் எதை நினைக்கிறானோ அதுவாக ஆகின்றான். யோகநெறிக்குச் சகமார்க்கம் என்றும் பெயர். தோழமை மார்க்கம் என்றும் பெயர்.

**ஞான வழிபாடு:-**

தனக்குள்ளேயே மறைபொருளாகப் பாவனையால் செய்யும் ஹோமம். ஞானி தன்னையே அன்னையின் சொரூபமாகப் பாவித்து அவ்வுருவைப் பதவியாகப் பெறுகிறார்.

ஞானத்தின் மிக்க அறிவுநெறி நாட்டிலில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நூல்கள்
ஞானத்தின் மிக்கார் நாடுள் மிக்காரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்திக் கோவில்கள்

| | ஊர் | அன்னையின் பெயர் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | காமாட்சி |
| 2. | மதுரை | மீனாட்சி |
| 3. | திருவானைக்கா | அகிலாண்டேசுவரி |
| 4. | திருவாரூர் | கமலாம்பிகை |
| 5. | திருக்குற்றாலம் | பராசக்தி |
| 6. | கன்னியாகுமரி | கன்னி, பகவதி குமரித்தெய்வம் |
| 7. | அம்பத்தூர் | வைணவி |
| 8. | காசி | விசாலாட்சி |
| 9. | சிதம்பரம் | சிவகாமி |
| 10. | நெல்லை | காந்திமதி |
| 11. | திருவண்ணாமலை | அபீதகுசாம்பிகை |
| 12. | திருக்கடவூர் | அபிராமி |
| 13. | பாபநாசம் | உலகம்மை |
| 14. | வேதாரண்யம் | சுந்தரி |
| 15. | நாகபட்டினம் | நீலாயதாட்சி |
| 16. | ஆமாத்தூர் | வட்டப் பாறையம்மன் |
| 17. | அம்பகரத்தூர் | பத்திரகாளி |
| 18. | கருகாவூர் | கர்ப்பரட்சகாம்பிகை |
| 19. | குலசேகரப்பட்டினம் | அறம் வளர்த்த நாயகி |
| 20. | சமயபுரம் | மகமாயி |
| 21. | கொல்லூர் (கன்னடம்) | மூகாம்பிகை |
| 22. | கோவை | கோனியம்மன் |
| 23. | திருவேற்காடு | கருமாரி |
| 24. | மயிலாப்பூர் | கற்பகாம்பிகை |
| 25. | திருவொற்றியூர் | வடிவுடையம்மை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 26. | சென்னை | காளிகாம்பாள் |
| 27. | சேலம் | கோட்டை மாரி |
| 28. | சோற்றானிக்கரை (கேரளம்) | பகவதி |
| 29. | செங்கன்னூர் (கேரளம்) | பகவதி |
| 30. | மாங்காடு | காமாட்சி |
| 31. | மண்டைக்காடு (கேரளம்) | பகவதி |
| 32. | மேல் மருவத்தூர் | ஆதி பராசக்தி |
| 33. | திருமுல்லை வாயில் | கொடியுடை நாயகி |
| 34. | புதுக்கோட்டை | புவனேசுவரி |
| 35. | ஒரிகுண்டா (ஆந்திரா) | ஜ்வாலாமுகி |
| 36. | உப்பிலிப் பாளையம் | தண்டு மாரியம்மன் |
| 37. | திருச்செந்தூர் | வெயிலுகந்தம்மன் |
| 38. | பூரி (ஒரிசா) | விமலை |
| 39. | ஸ்ரீ சைலம் | பிரமராம்பாள் |
| 40. | சிருங்கேரி | சாரதா |
| 41. | மானசரோவர் (இமயமலை) | தாட்சாயிணி |
| 42. | கல்கத்தா | காளி |
| 43. | காமரூபம் (அசாம்) | காமாக்யா |
| 44. | ஜலந்தரா (இமயமலை) | ஜ்வாலாமுகி |
| 45. | கேதாரம் | சன்மார்க்கதாயினி |
| 46. | உஜ்ஜயினி | மங்கள சண்டி |
| 47. | திருக்கேதீச்சரம் | கௌரியம்பாள் |

(தெரிவு செய்யப்பட்ட கோவில்களின் பட்டியலே மேலே தரப்பட்டுள்ளது. ஏனைய கோவில்களைப் பற்றிய விபரங்களை வாசகர் சேர்த்துக் கொள்வாராக.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சக்ரம்

சக்தி வழிபாட்டிற்குரிய யந்திரங்கள் பல உண்டு. அவற்றுள் சக்ரராஜம் எனக் குறிக்கப்படும் ஸ்ரீ சக்ரமே உயர்வானது. ஸ்ரீ லலிதா மகாதிரிபுர சுந்தரி, ஸ்ரீ சக்ரத்தையே தன் இருப்பிடமாகக் கொண்டவள்.

**விளக்கம்:-** இது மேல் நோக்கிய நான்கு முக்கோணங் களையும், கீழ் நோக்கிய ஐந்து முக்கோணங்களையும் கொண்டது. கீழ் நோக்கிய நடுமுக்கோணத்தின் மத்தியில் பிந்து உள்ளது. இவற்றைச் சுற்றி வட்டமாக எழுதிய எட்டிதழ், தளமும், அதைச் சுற்றி வட்டமாக எழுதிய பதினாறு இதழ் தளமும், அதைச் சுற்றி மூன்று - மேகலை யாகிய வட்டங்களும் உள்ளன. அதைச் சுற்றிலும் சதுரமாக அமைந்த மூன்று ரேகைகளும், நான்கு திசைகளும் நான்கு வாயில்களுடன் அமைந்துள்ளன.

மேல் நோக்கிய நான்கு முக்கோணங்களும், சிவ கோணங்கள், கீழ் நோக்கிய ஐந்து முக்கோணங்களும் சக்தி கோணங்கள். இவை தம்முள் புணர்ந்துள்ளன. இதனால் நடுவில் கீழ் நோக்கிய முக்கோணம் ஒன்றும், அதனைச் சூழ்ந்த எண் கோணமும், அதனைச் சூழ்ந்த பத்துக் கோண மும், அவற்றைச் சூழ்ந்த பதினாற் கோணமும், ஆக 43 கோணங்கள் உண்டாகின்றன. அதனால் தேவியை நாற்பது முக்கோண நாயகி என்றும் குறிப்பிடுவர்.

ஸ்ரீ சக்ரத்தில் ஒன்பது ஆவரணங்கள் (தட்டுகள்) உண்டு. அவை,

1. திரை லோக்ய மோஹன சக்கரம் — மூன்று சதுரக் கோடுகள்.
2. சர்வாசாபரிபூரகச் சக்கிரம் — 16 இதழ் தளம்.
3. சர்வ சங்சோபனச் சக்கிரம் — 8 இதழ் தளம்.
4. சர்வ சௌபாக்கிய தாயகம் — பதினாற் கோணம்.
5. சர்வார்த்த சாதக சக்கரம் — பத்துக் கோணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சர்வ ரட்சாகர சக்கரம் — அடுத்த பத்துக் கோணம்.
7. சர்வ ரோகஹரம் எனும் சக்கரம்— எட்டுக் கோணம்.
8. சர்வ சித்திப்பிரதம் . — நடுமுக்கோணம்.
9. சர்வானந்தமயம்— முக்கோணத்தின் நடுவிலுள்ள பிந்து.

இந்த ஒன்பது ஆவரணங்களிலுள்ள தேவதைகளை வழிபடுவது நவாவரண பூசை எனப்படும். இதற்குரிய முறைகள் மந்திரங்களைக் குருமூலம் உபதேசம் பெற்றுச் செய்ய வேண்டும்.

எனினும் பக்தர்கள், தேவியைப் பக்தி நெறியில் உருகி வழிபட்டு வந்தால் அவளருளால் குரு உபதேசங்கிட்டி முறைப்படி செய்ய வேண்டிய மந்திர, யந்திர, தந்திர - வழிபாடுகள் சித்திக்கும்.

ஸ்ரீ சக்ரத்தில் மூன்று வகைகள் உள. அவை விகிதம், பூபிரஸ்தம், மேரு பிரஸ்தம் என்பவை. (1) சிறந்த ஸ்ரீ வித்யா உபாசகர்களால் காகிதத்தில் கையினால் முறைப் படி வரையப்படுவது விகித வகை, (2) தகடுகளில் கோடு களால் வரையப்படுவது பூபிரஸ்தம். (3) ஸ்ரீ சக்ரத்தின் ஒவ்வொரு அங்கமும் படிப்படியாக மேருமலைபோல் உயர்ந்து கொண்டேபோவது மேரு பிரஸ்தம் எனப்படும். உலோகத்திலானது, பலனில் எல்லாம் ஒன்றே.

பராசக்தியை ஸ்ரீ சக்ரத்தில் பிந்துவில் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவளாகத் தியானிக்க வேண்டும். தேவியை மந்திர வடிவினளாகவும், மங்களம் தரும் சிவ தத்துவம், வித்யாதத்துவம், ஆத்ம தத்துவம் என்ற தத்துவ வடிவின ளாகவும், எங்கும் நிறைந்த பரம்பிரம்மத்தின் சக்தி வடிவின ளாகவும் எண்ணி வழிபாடு செய்து தியானம் செய்ய வேண்டும்.

**மந்திரம்:-** சக்தி வழிபாட்டிற்குரிய மந்திரங்கள் பல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலனைத் தரும். ஆயினும் எல்லா நன்மைகளையும் தரவல்லது. பராசக்தி ஸ்ரீ லலிதா மகாதிரிபுர சுந்தரிக்குரிய பஞ்சதசாக்ஷரி என்ற 15 எழுத்து மந்திரமும், சோடாசாக்ஷரி என்ற 16 எழுத்து மந்திரமுமே. இவற்றைக் குருவின் மூலம் உபதேசம் பெற்றுச் செபித்தாலே சித்திதரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசக்தி புகழ்

ராகம்: தன்யாஸி — சதுஸ்ர ஏகம்

ஓம்

சக்தி சக்தி சக்தியென்று சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் யாவினையுங் கொல்லு
சக்தி சக்தி சக்தியென்று சொல்லி — அவள்
சந்நிதியிலே தொழுது நில்லு. 1

சக்தி மிசை பாடல் பல பாடு — ஓம்
சக்தி சக்தி யென்று தாளம் போடு
சக்தி தருஞ் செய்கை நிலந் தனிலே — சிவ
சக்தி வெற்றி கொண்டு களித்தாடு. 2

சக்தி தனையே சரணங் கொள்ளு — என்றும்
சாவினுக் கொரச்ச மில்லை தள்ளு
சக்தி புகழா மமுதை யள்ளு — மதி
தன்னிலினிப் பாகுமந்தக் கள்ளு. 3

சக்தி செயும் புதுமைகள் பேசு — நல்ல
சக்தி யற்ற பேடிகளை யேசு
சக்தி திருக் கோயிலுள்ள மாக்கி — அவள்
தந்திடு நற் குங்குமத்தைப் பூசு. 4

சக்தியினைச் சேர்ந்த திந்தச் செய்கை — இதைச்
சார்ந்து நிற்ப தேநமக்கொ ருய்கை
சக்தியெனு மின்பமுள்ள பொய்கை — அதில்
தண்ணமுத மாரிநித்தம் பெய்கை. 5

சக்தி சக்தி சக்தி யென்று நாட்டு — சிவ
சக்தி யருள் பூமிதனில் காட்டு
சக்தி பெற்ற நல்லநிலை நிற்பார் — புவிச்
சாதிக ளெல்லா மதனைக் கேட்டு. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி சக்தி சக்தி யென்று முழங்கு — அவள்
தந்திர மெல்லா முலகில் வழங்கு
சக்தி யருள் கூடிவிடு மாயின் — உயிர்
சந்ததமும் வாழ்நல்ல கிழங்கு. 7

சக்தி செயுந் தொழில்களை யெண்ணு — நித்தஞ்
சக்தி யுள்ள தொழில் பல பண்ணு
சக்திதனை யேயிழந்து விட்டால் — இங்கு
சாவினையும் நோவினையும் உண்ணு. 8

சக்தியரு ளாலுலகி லேறு — ஒரு
சங்கடம் வந்தா லிரண்டு கூறு
சக்தி சில சோதனைகள் செய்தால் — அவள்
தண்ணரு ளென்றே மனது தேறு. 9

சக்தி துணை யென்று நம்பி வாழ்த்து — சிவ
சக்தி தனையே யகத்தி லாழ்த்து
சக்தியுஞ் சிறப்புமிகப் பெறுவாய் — சிவ
சக்தியருள் வாழ்க வென்று வாழ்த்து. 10

*— சுப்பிரமணிய பாரதியார்*

## மஹாசக்திக்கு விண்ணப்பம்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்மு னிங்கு
நசித்திடல் வேண்டு மன்னாய்.

*— சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி

துன்ப மிலாத நிலையே சக்தி
　　தூக்க மிலாக் கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி
　　ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி
இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி
　　எண்ணத் திருக்கு மெரியே சக்தி
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி
　　முக்தி நிலையின் முடிவே சக்தி. 1

சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி
　　சொல்லில் விளங்கும் சுடரே சக்தி
தீம்பழந் தன்னில் சுவையே சக்தி
　　தெய்வத்தை யெண்ணு நினைவே சக்தி
பாம்பை யடிக்கும் படையே சக்தி
　　பாட்டினில் வந்த களியே சக்தி
சாம்பரைப்பூசி மலைமிசை வாழும்
　　சங்கர னன்புத் தழலே சக்தி. 2

வாழ்வு பெருக்கு மதியே சக்தி
　　மாநிலங் காக்கும் வலியே சக்தி
தாழ்வு தடுக்குஞ் சதிரே சக்தி
　　சஞ்சல நீக்குந் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
　　விண்ணை யளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
　　உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி. 3

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி விளக்கம்

ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் — அதை
அன்னை யெனப்பணிதல் ஆக்கம்.
சூதில்லை காணுமிந்த நாட்டீர் — மற்றத்
தொல்லை மதங்கள்செய்யுந் தூக்கம். 1

மூலப் பழம்பொருளின் நாட்டம் — இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்.
காலப் பெருங்களத்தின் மீதே — எங்கள்
காளி நடமுலகக் கூட்டம். 2

காலை யிளவெயிலின் காட்சி — அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி.
நீல விசும்பினிடை யிரவிற் — சுடர்
நேமி யனைத்துமவ ளாட்சி. 3

நாரண னென்று பழவேதம் — சொல்லும்
நாயகன் சக்தி திருப் பாதம்.
சேரத் தவம்புரிந்து பெறுவார் — இங்கு
செல்வ மறிவு சிவபோதம். 4

ஆதி சிவனுடைய சக்தி — எங்க
ளன்னை யருள்பெறுதல் முக்தி
மீதி யுயிரிருக்கும் போதே — அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி. 5

பண்டை விதியுடைய தேவி — வெள்ளைப்
பாரதி யன்னையருள் மேவி
கண்ட பொருள்விளக்கும் நூல்கள் — பல
கற்றலில் லாதவனொர் பாவி. 6

மூர்த்திகள் மூன்று பொருளொன்று — அந்த
மூலப் பொரு ளொளியின் குன்று
நேர்த்தி திகழுமந்த வொளியை — எந்த
நேரமும் போற்று சக்தி யென்று. 7

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி திருப்புகழ்

திஸ்ர ஏகம்

சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ
சக்தீ யென்றோது
சக்தி சக்தி சக்தீ யென்பார் சாகா
ரென்றே நின்றோது. 1

சக்தி சக்தி யென்றே வாழ்தல் சால்பா
நம்மைச் சார்ந்தீரே
சக்தி சக்தி யென்றீ ராயில் சாகா
வுண்மை சேர்ந்தீரே. 2

சக்தி சக்தி யென்றால் சக்தி தானே
சேருங் கண்டீரே
சக்தி சக்தி யென்றால் வெற்றி தானே
நேருங் கண்டீரே. 3

சக்தி சக்தி யென்றே செய்தால் தானே
செய்கை நேராகும்
சக்தி சக்தி யென்றா லஃது தானே
முக்தி வேராகும். 4

சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ
யென்றே யாடோமோ?
சக்தி சக்தி சக்தீ யென்றே தாளங்
கொட்டிப் பாடோமோ. 5

சக்தி சக்தி யென்றால் துன்பந் தானே
தீருங் கண்டீரே
சக்தி சக்தி யென்றா லின்பந் தானே
சேருங் கண்டீரே. 6

சக்தி சக்தி யென்றால் செல்வம் தானே
யூறுங் கண்டீரோ?
சக்தி சக்தி யென்றால் கல்வி தானே
தேறுங் கண்டீரோ? 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ
சக்தீ வாழீ நீ
சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ
சக்தீ வாழீ நீ. 8

சக்தி சக்தி வாழீ யென்றால் சம்பத்
தெல்லா நேராகும்
சக்தி சக்தி யென்றால் சக்தி தாச
னென்றே பேராகும். 9

*— சுப்பிரமணிய பாரதியார்*

## மஹாசக்தி வெண்பா

தன்னை மறந்து ஸகல வுலகினையும்
மன்னநிதங் காக்கு மஹாசக்தி — அன்னை
அவளே துணையென் றமைவெய்தி நெஞ்சந்
துவளா திருத்தல் சுகம். 1

நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சியுயிர் வாழ்த லறியாமை — தஞ்சமென
வையமெலாங் காக்கு மஹாசக்தி நல்லருளை
ஐயமறப் பற்ற லறிவு. 2

வையகத்துக் கில்லை மனமே நினக்குநலஞ்
செய்யக் கருதியிவை செப்புவேன் — பொய்யில்லை
எல்லாமளிக்கும் இறைநமையுங் காக்குமெனுஞ்
சொல்லா லழியுந் துயர். 3

எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாம்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெலாம் — பண்ணியதோர்
சக்தியே நம்மைச் சமைத்ததுகாண், நூறாண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு. 4

*— சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி

நெஞ்சுக்கு நீதியுந் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர் மணிப்பூண்
பஞ்சுக்கு நேர் பல துன்பங்களா மிவள்
பார்வைக்கு நேர் பெருந் தீ
வஞ்சனை யின்றிப் பகை யின்றிச் சூதின்றி
வையக மாந்த ரெல்லாம்
தஞ்ச மென்றே யுரைப்பீர்; ''சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்'' 1

நல்லதுந் தீயதும் செய்திடும் சக்தி
நலத்தை நமக் கிழைப்பாள்
அல்லது நீங்கு மென்றே யுலகேழும்
அறைந்திடுவாய் முரசே!
சொல்லத் தகுந்த பொருளன்று காண்! இங்கு
சொல்லு மவர் தமையே
அல்லல் கெடுத் தமரர்க் கிணை யாக்கிடும்;
ஆம், சக்தி ஓம், சக்தி ஓம். 2

நம்புவதே வழி யென்ற மறைதன்னை
நாமின்று நம்பி விட்டோம்.
கும்பிட் டெந்நேரமும், ''சக்தி''யென்றால் உனைக்
கும்பிடுவேன் மனமே.
அம்புக்குந் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில் லாதபடி,
உம்பர்க்கு மிம்பர்க்கும் வாழ்வுதரும் பதம்
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம். 3

பொன்னைப் பொழிந்திடு மின்னை வளர்த்திடு
போற்றி யுனக் கிசைத்தோம்
அன்னை பராசக்தி யென்றுரைத்தோம் தளை
யத்தனையுங் களைந்தோம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னபடிக்கு நடந்திடுவாய், மன
மே தொழில் வேறில்லை, காண்;
இன்னுமதே யுரைப்போம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம். 4

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாக விளங்கிடுவாய்!
தெள்ளு கலைத்தமிழ் வாணி, நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன்.
எள்ளத்தனை பொழுதும் பயனின்றி
யிரா தென்றன் நாவினிலே
வெள்ள மெனப் பொழிவாய், சக்திவேல், சக்தி
வேல், சக்தி வேல், சக்தி வேல்! 5

— *சுப்பிரமணிய பாரதியார்*

## மஹாசக்தி

கமாஸ் ராகம், சாப்பு — தாளம்

சந்திரி கையில் அவளைக் கண்டேன்
சரண மென்று புகுந்து கொண்டேன்
இந்திரி யங்களை வென்று விட்டேன்
எனதெ னாசையைக் கொன்று விட்டேன். (சந்) 1

மீன்கள் செய்யும் ஒளியைச் செய்தாள்
வீசி நிற்கும் வளியைச் செய்தாள்
வான்க ணுள்ள வெளியைச் செய்தாள்
வாழி நெஞ்சிற் களியைச் செய்தாள். (சந்) 2

பயனெண் ணாமல் உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்
துயரி லாதெனைச் செய்து விட்டாள்
துன்ப மென்பதைக் கொய்து விட்டாள். (சந்) 3

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்திக் கூத்து

பியாக்

**பல்லவி**

தகத் தகத்தகத் தகதகவென் றாடோமோ? — சிவ
சக்தி சக்தி சக்தி யென்று பாடோமோ? (தக)

**சரணங்கள்**

அகத் தகத் தகத்தினிலே உள்நின்றாள் — அவள்
அம்மை யம்மை யெம்மை நாடு பொய் வென்றாள்
தகத்தக நமக் கருள்புரிவாள் தாளொன்றே
சரண மென்று வாழ்ந்திடுவோம் நாமென்றே(தக) 1

புகப்புகப் புக வின்பமடா போதெல்லாம்
புறத்தினிலே தள்ளிடுவாய் சூதெல்லாம்
குகைக்கு ளங்கே யிருக்குதடா தீபோலே — அது
குழந்தை யதன் தாயடிக்கீழ்ப் பேய்போலே (தக) 2

மிகத்தகைப்படு களியினிலே மெய்சோர — உள
வீரம் வந்து சோர்வை வென்று கைதேர
சகத்தினிலுள்ள மனிதரெல்லாம் நன்று நன்றெனநாம்
சதிருடனே தாளமிசை யிரண்டு மொன்றென(தக) 3

இந்திரனா ருலகினிலே நல்லின்பம்
இருக்கு தென்பார் அதனை யிங்கே கொண்டெய்தி
மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம் — நல்ல
மதமுறவே யமுதநிலை கண்டெய்தி (தக) 4

*சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹாசக்தி பஞ்சகம்

கரணமுந் தனுவு நினக்கெனத் தந்தேன்
காளிநீ காத்தருள் செய்யே
மரணமு மஞ்சேன் நோய்களை யஞ்சேன்
மாரவெம் பேயினை யஞ்சேன்
இரணமுஞ் சுகமும் பழியுநற் புகழும்
யாவுமோர் பொருளெனக் கொள்ளேன்
சரணமென் றுனது பதமலர் பணிந்தேன்
தாயெனைக் காத்தலுன் கடனே. 1

எண்ணிலாப் பொருளும் எல்லையில் வெளியும்
யாவுமா நின்றனை போற்றி
மண்ணிலார் வந்து வாழ்த்தினுஞ் செறினும்
மயங்கிலேன் மனமெனும் பெயர்கொள்
கண்ணிலாப் பேயை யெள்ளுவேன் இனியெக்
காலுமே யமைதியி லிருப்பேன்
தண்ணிலா முடியிற் புனைந்துநின் றிலகுந்
தாயுனைச் சரண்புகுந் தேனால். 2

நீசருக் கினிதாந் தனத்தினு மாதர்
நினைப்பினு நெறியிலா மாக்கள்
மாசுறு பொய்ந்நட் பதனிலும் பன்னாள்
மயங்கினேன் அவையினி மதியேன்
தேசுறு நீல நிறத்தினாள் அறிவாய்ச்
சிந்தையிற் குலவிடு திறத்தள்
வீசுறுங் காற்றி னெருப்பினில் வெளியில்
விளங்குவாள் தனைச்சரண் புகுந்தேன். 3

ஐயமுந் திகைப்புந் தொலைந்தன ஆங்கே
அச்சமுந் தொலைந்தது சினமும்
பொய்யுமென் றினைய புன்மைக ளெல்லாம்
போயின வுறுதி நான் கண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையமிங் கனைத்து மாக்கியும் காத்தும்
மாய்த்துமே மகிழ்ந்திடு தாயைத்
துய்யவெண் ணிறத்தாள் தனைக்கரி யவளைத்
துணையெனத் தொடர்ந்து கொண்டே 4

தவத்தினை யெளிதாப் புரிந்தனள் யோகத்
தனிநிலை யெளிதெனப் புரிந்தாள்
சிவத்தினை யினிதாப் புரிந்தனள் மூடச்
சித்தமுந் தெளிவுறச் செய்தாள்
பவத்தினை வெறுப்ப அருளினள் நானாம்
பான்மை கொன் றவண்மயம் புரிந்தாள்
அவத்தினைக் களைந்தாள் அறிவென விளைந்தாள்
அநந்தமா வாழ்கவிங் கவளே. 5

— சுப்பிரமணிய பாரதியார்

## ஹே, காளீ!

எண்ணிலாத பொருட்குவை தானும்
ஏற்றமும் புவியாட்சியு மாங்கே
விண்ணி லாதவ னேர்த்திடும் ஒளியும்
வெம்மையும் பெருந்திண்மையு மறிவும்
தண்ணிலாவி னமைதியும் அருளும்
தருவ னின்றென தன்னை யென்காளி
மண்ணிலார்க்குந் துயரின்றிச் செய்வேன்
வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன். 1

தானம் வேள்வி தவங் கல்வி யாவும்
தரணி மீதி னிலை பெறச் செய்வேன்
வான மூன்று மழை தரச் செய்வேன்
மாறிலாத வளங்கள் கொடுப்பேன்
மானம் வீரிய மாண்மை நன்னேர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்
ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன்
நான் விரும்பிய காளி தருவாள். 2

— சுப்பிரமணிய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாசக்தி வாழ்த்து

விண்டுரைக்க, அறிய, அரியதாய்
விரிந்த வான வெளியென நின்றனை,
அண்ட கோடிகள் வானி லமைத்தனை
அவற்றி லெண்ணற்ற வேகஞ் சமைத்தனை.
மண்டலத்தை யணுவணு வாக்கினால்
வருவ தெத்தனை யத்தனை யோசனை
கொண்ட தூர மவற்றிடை வைத்தனை
கோலமே நினைக் காளியென் றேத்துவேன். 1

நாடு காக்கு மரசன் றனையந்த
நாட்டு ளோரரச சென்றறிவார், எனிற்
பாடு தண்டைக் குழந்தை, தனக்கிதம்
பண்ணு மப்ப னிவனென் றறிந்திடும்
கோடி யண்டமியக்கி யளிக்கு நின்
கோல மேழை குறித்திட லாகுமோ?
நாடி யிச்சிறு பூமியிற் காணுநின்
நலங்க ளேத்திட நல்லருள் செய்கவே. 2

பரிதி யென்னும் பொருளிடை யேய்ந்தனை
பரவும் வெய்ய கதிரெனக் காய்ந்தனை
கரிய மேகத் திரளெனச் செல்லுவை
காலு மின்னென வந்துயிர் சொல்லுவை
சொரியு நீரெனப் பல்லுயிர் போற்றுவை
சூழும் வெள்ள மெனவுயிர் மாற்றுவை,
விரியு நீள் கடலென்று நிறைந்தனை,
வெல்க காளி யெனதம்மை வெல்கவே. 3

வாயு வாகி வெளியை யளந்தனை,
வாழ்வெதற்கு முயிர்நிலை யாயினை.
தேயு வாகி யொளியருள் செய்குவை,
செத்தவற்றைக் கருப்பொரு ளாக்குவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயு மாயிரஞ் சத்திக ளாகியே
பாரி லுள்ள தொழில்க ளியற்றுவை,
சாயும் பல்லுயிர் கொல்லுவை, நிற்பன
தம்மைக் காத்துச் சுகம்பல நல்குவை. 4

நிலத்தின் கீழ்ப்பல் லுலோகங்க ளாயினை.
நீரின் கீழெண் ணிலாநிதி வைத்தனை
தலத்தின் மீது மலையு நதிகளுஞ்
சாருங் காடுஞ் சுனைகளு மாயினை,
குலத்தி லெண்ணற்ற பூண்டு பயிரினம்
கூட்டி வைத்துப் பலநலந் துய்த்தனை
புலத்தை யிட்டிங் குயிர்கள் செய்தா யன்னே
போற்றி, போற்றி நினதருள் போற்றியே. 5

சித்த சாகரஞ் செய்தனை, யாங்கதிற்
செய்த கர்மப் பயனெனப் பல்கினை
தத்து கின்ற திரையுஞ் சுழிகளும்
தாக்கி யெற்றிடுங் காற்று முள்ளோட்டமுஞ்
சுத்த மோனப் பகுதியும் வெண்பனி
சூழ்ந்த பாகமுஞ் சுட்ட வெந் நீருமென்
றொத்த நீர்க்கடல் போலப் பலவகை
யுள்ள மென்னுங் கடலி லமைத்தனை. 6

*— சுப்பிரமணிய பாரதியார்*

## சமர்ப்பணம்

இந்த மெய்யும் கரணமும் பொறியும்
இருபத்தேழு வருடங்கள் காத்தனன்
வந்தனம் அடி பேரரு ளன்னாய்!
வைரவீ! திறற் சாமுண்டி! காளி!
சிந்தனை தெளிந் தேனிதை யுந்தன்!
திருவருட் கென அர்ப்பணஞ் செய்தேன்
வந்திருந்து பல பயனாகும்
வகை தெரிந்துகொள் வாழியடி நீ.

*— சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்போரூர்
# அருள்மிகு மீனாட்சியம்மை
# கலிவெண்பா

தவத்திரு சிதம்பர சுவாமிகள்

### காப்பு

அங்(கு) அயற்கும், மாற்கும் அரிய பெருமான் இடம்சேர்
அங்கயற்கண் அம்மைக்(கு) அணியவே அங்கயத்தின்
மாமுகம்கொள் கோமானை வாழ்த்திக் கலிவெண்பா
நாம் உகந்து பாடுவோம் நன்கு.

### நூல்

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே! சேயிழையே!
காராரும் மேனிக் கருங்குயிலே! — ஆராயும்

வேதமுதல் ஆகிநின்ற மெய்ப்பொருளே! மின் ஒளியே
ஆதி பராபரையே! அம்பிகையே! — சோதியே!

அண்டர் எல்லாம் போற்றும் அரும்பொருளே! ஆரணங்கே!
எண்திசைக்கும் தாயான ஈஸ்வரியே! — தெண்திரையில்

வந்த அமுதே என்று, மாறாமலே நினைப்பார்
சிந்தைதனிலே உறையும் செல்வியே! — அந்தம் இலா

மாயோன் தனக்(கு) இளையவல்லியே! மாமயிலோன்
தாயே! பராபரையே! சங்கரியே — தூயஒளி

மன்னும் கைலாச மாமயிலே! மேருஎனும்
பொன் அம் கிரியையுடைய பூங்கொடியே! — அன்னமே!

அட்டகுல வெற்பாய் அமர்ந்தவளே! ஆதி அந்தம்
எட்டெட்டும்தானாய் இருந்தவளே! — முட்டஎங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்எழுத்தாய் நின்ற அரும்பொருளே! ஆரணங்கே!
உவ்எழுத்தாய் நின்ற(து) ஒரு உண்மையே — எவ்எழுத்தும்

தானாகி நின்ற(து) ஒரு தற்பரையே! எவ்வுயிர்க்கும்
ஊனாகி நின்ற(து) ஓர் உத்தமியே! — கோனாய்ப்

படிஅளக்க மால்பார் பதினான்கும், ஒக்க
அடியவரை ஈடேற்றும் அன்னாய் — முடிவு இலா

ஓங்காரத்(து) உள்பொருளே! உற்றநவ கோணத்தில்,
ரீங்காரம் தன்னில் இருப்பவளே! — பாங்(கு) ஆன

முக்கோணத்(து) உள் இருக்கும் மூர்த்தியே! மூவிரண்டாம்
சட்கோணத்(து) உள்ளிருக்கும் சத்தியே! மிக்கபுகழ்

எண்ணிரண்டாம் கோட்டில் இருப்பவளே! எவ்வுயிர்க்கும்
பண்இசைந்த பாட்டின் பழம்பொருளே! — விண்உலகின்

மேற்பட்(டு) அங்(கு) ஊடுருவி மேலாகி நின்ற(து) ஓர்
நாற்பத்து முக்கோண நாயகியே! — சீர்பெற்ற

பஞ்சகோணத்து இருந்த பைங்கிளியே! பார்முழுதும்
தஞ்சமது ஆகிநின்ற தையலே! — செம்சொல் மறைச்

சொல்லே! பொருளே! சுவையே அறுசுவையே!
எல்லாப் புவிக்கும் இறைவியே! — தொல்லை

எறும்புகடை, யானைதலை, எண்இல் உயிர்க்கும்
உறும்பொருளாய் அங்கங்கு உணர்வாய்ப் பெறும்பயன்

ஆறாறு தத்துவமாய் ஐயிரண்டு வாயுவாய்க்
கூறாய்த், திசைபத்தின் கூட்டமாய், — பேறு ஆன

அஞ்(சு) எழுத்தாய், எட்(டு)எழுத்தாய், ஐம்பத்தோர் அட்சரமாய்
பஞ்சவர்ணமாய்ப் பஞ்ச தேவதையாய் — வஞ்சம் அற்ற

ஆ(று) ஆதாரப் பொருளாய், ஐயைந்நாய் ஐம்மூன்றாய்
வீ(று) ஆன சக்கரத்தின் மின் ஒளியாய்க் — கூறும்

கருவி கரணாதிகளாய்க் கைகலந்து நின்ற
பெரிய(து) ஒரு மாயைப் பிரிவாய் — உரிய(து) ஒரு

சோத்திரத்தில் சத்தமாய்த், தொக்கில் பரிசமாய்,
நேத்திரத்தில் பேருருவாய், நீக்கம் இலா — நாத்தலனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்(து) இரதமாய் மூக்கின் மேவுகந்தமாய்ப், பிறவாய்,
மத்த பிரமத்த, வயிரவியாய்ச் — சுத்த

துரியமதாய்ப் பின்னும் துரி(ய) அதீதத்தின்
அரிய சிலம்பொலியும் ஆர்ப்பத் — தெரி(வு) அரிதாய்

நாடுதனில் சென்(று) இரந்து நல்பவுரி கொண்டு, தொந்தம்
ஆடுகின்ற பார்ப்பதியே! அம்பிகையே! — நாடிக்

களங்கம் அறவேதான், கரும்புருவம் தன்னில்
பளிங்(கு) ஒளியாய் நின்ற பரமே! — வளம்பெறவே

கண்இரண்டின் உள்ளே கருணைத் திருவடிவாய்ப்
புண்ணியமாய் நின்(று) அருளும் பூவையே! — பண் அமைந்த

நாசி நுனிமேல் நடு எழுந்த தீபமாய்,
ஓசை விந்து நாதாந்தத்(து) உள்பொருளாய் — நேசமுடன்

அஞ்சு முகமாய், அகண்ட பரிபூரணமாய்ப்
பஞ்ச பூதம் ஆன பைங்கிளியே! கஞ்சமலர்ப்

பாதம் இரண்டாகிப், பச்சைநிறம் தான் ஆகி
ஆதிமுதல் ஆகிநின்ற அம்பரமே! — தீ(து)இலா

நெற்றிதனில் கண்ணாகி, நிட்கள ரூபப் பொருளாய்,
உற்றவெளி ஆகிநின்ற உத்தமியே! — பத்திநின்ற

ஆகாயத்தின் ஒளியாய் அந்தரத்தின் ரூபமாய்
மே(க) ஆதிக்(கு) உள்ளே விளைபொருளாய் — வா(கு)ஆம்

இடைபிங் கலையாய், இரண்டுக்கும் எட்டாக்
கடையும் சுழிமுனையாய்க், காலாய் — மடல் அவிழ்ந்த

மூ(ல) ஆதாரத்து ஒளியாய், மும்மண்டம் கடந்து
மே(ல்) ஆதாரத்(து) இருந்தவெண்மதியாய்ப் — பால்ஊற

உண்ணும் சிவயோக உத்தமியே! மெய்த்தவமே!
பண்ணுமறை வேதப் பழம்பொருளே! — எண்ணரிய

மெய்ஞ்ஞான வித்தே! விளக்(கு) ஒளியே! — மெய்ச் சுடரே
அஞ்ஞானம் அகற்றும் அம்மையே! — பைந்நாகம்

பூண்ட சிவனார் இடத்துப் பூங்கொடியே! பாங்குடனே
தாண்டவம் ஆடப், பவுரி தாளம்ஒத்தி — ஆண்டியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடும் கூத்தாடிச்சி, அம்மனைப் பந்தாடிச்சி,
தேடியும் மால்காணாச் சிவசக்தி — நாடிஉனைப்

போற்றும் அடியார்கள் வினைபோக்கியே, அஞ்சல் என்று
தோற்றுகின்ற அம்மை, துடி இடைச்சி — ஏத்(து) அரிய

பச்சை நிறத்தி, பவளக் கொடி இடைச்சி,
கச்சைப் பொருமுலைச்சி, கைவளைச்சி — கொச்சை

மலையரையன் பெற்ற மலைச்சி, கலைச்சி
நிலையறி வேதாந்த நிலைச்சி — அலையாத

அன்ன நடைச்சி, அருமறைச்சி, ஆண்டிச்சி,
கன்னல் மொழிச்சி, கருணைச்சி — பன்னுதமிழ்

வாய்ச்சி, சடைச்சி வடிவுடைய மங்கைச்சி,
பேய்ச்சி இளமுலைச்சி, பேதைச்சி — காய்ச்சிய பால்

வெண்ணெய் மொழிச்சி, வெழிச்சி, வெளி இடைச்சி
அண்ணுபுரம் தீயிட்ட அம்படைச்சி — நண்ணிலரும்

கொப்புக் குழைச்சி, குவளை பொருவிழிச்சி
அப்புச் சடைச்சி, சி(வ) ஆகமச்சி — மெய்ப்பாம்

கருப்புச் சிலைச்சி, கலைச்சி வலைச்சி
மருப்புத் தளத்தி, மவுனத்தி பொருப்(பு) இடத்தி

தாமப் புயத்தி சமர்த்தி, தருமத்தி
நாமச் சிவபுரத்தி நாரணத்தி — தேமருவும்

காரணத்தி பூத கணத்தி, செங்கரத்தி,
வாரணத்தி, அட்டதிக்கு மாரணத்தி — பூரணத்தி

பாத பரிபுரத்தி, பங்கயத்தி, செங்கரத்தி,
சோதி மணிநிறத்தி, சொப்பனத்தி — பாதிமதி

சூடுகின்ற சொக்கருடன் துய்யபுலித் தோலுடுத்திக்
காடுதனில் வீற்றிருக்கும் காரணியே! — நாடறியும்

சேணிச்சி, நல்ல சிறுத்தொண்டன் பிள்ளை அறுத்(து)
ஊணிச்சி, நஞ்(சு) அமுதாம் ஊணிச்சி — பாணிச்சி,

பா(ச) அங்குசத்தி, பரத்தி பருப்பதத்தி
காசாம்பூ மேனிக் கனதனத்தி — மா(சு)இலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பரத்தி, ஐம்புலத்தி, ஆன(து) ஒரு வேதாந்த
உம்பருக்கும் எட்டாத உத்தமத்தி — செம்பொன்வளைச்சி

செட்டிச்சி, வைகைதனில் சென்றுவெட்டி மண்சுமந்த
ஒட்டச்சி பூதிஅணி உத்தளத்தி — அட்டதிக்கு

மின்னே! விளக்கே! விலையில்லா சீவரத்தினப்
பொன்னே! நவமணியே! பூங்கிளியே — இன்னமுதே

மாணிக்க வல்லியே மாமரகதப் பணியே!
ஆணிக் கனகத்(து) அரும்பொருளே!, — மாண் உற்ற

சிங்கார வல்லியே! செம்பொன் சிலைவளைத்த
கங்காளற்(கு) அன்பான கண்மணியே! — மங்காத

தெய்வக் குலக்கொழுந்தே! செம்பட்(டு) உடைத் திருவே!
ஐவருக்கும் தாயாய் அமர்ந்தவளே! — மெய்யருக்குச்

சித்தி கொடுக்கும் சிவாநந்தி! அன்பருக்கு
முத்தி கொடுக்கும் ஞான மூர்த்தியே! — எத்திசைக்கும்

தாயகமாய்ச் சூழ் தாவர சங்கமம் விளக்கும்
தூய சுடர் மூன்றான சூக்குமமே! — வேய்ஈன்ற

நித்திலமே! கற்பகமே! நின்மலமே! நன்மணியே
சுத்தபரி பூரணியே! சுந்தரியே! — அத்தருடன்

வாதாடும் மங்கையே! மாமந்த்ர ரூபியே
வேதாந்தியே! கமல மெல்லியலே! — நாதாந்த

மகேஸ் வரியே! மங்கையே! மாமறைக்கும்
தாயாகி நின்ற சரஸ்வதியே — காயாய்ப்

பழுத்த பழமாய்ப் பழத்(து) ரசம் தானாய்
முழுத்த பர ஆநந்த முதலாய் — எழுத்து முதல்

ஆறு சமயங்களுக்குள், அவ்வவர்க்கும் வெவ்வேறாய்
வேறுபல ரூப விகற்பமதாய்க் — கூ(ற) அரிதாய்

அங்கங்கும் தானாய் அமர்ந்தவளே! ஆதி அந்தம்
எங்கெங்கும் தானாய் இருந்தவளே! — திங்கள்நுதல்

அம்சுகமே! தேனே! அணங்கே! அமுதமொழிக்
கிஞ்சுகமே! பிஞ்சுமதிக் கிள்ளையே! — கொஞ்சுகுயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னி, திரிசூலி, கபாலி,சிவகாமி,
மன்னு கவுரி, மகமாயி, — பொன்னின்மலர்த்

தாளி, சதுரி, சவுந்தரி, முக்கண்ணுடைய
காளி, பகவதி, கங்காளி — தூளியாத்

தக்கன் தலையறுத்த தத்துவத்தி தற்பரத்தி,
அக்கினிகை ஈர்ந்த அமர்க்களத்தி — மிக்கபுகழ்

வீரசத்தி, மேருவினை வில்லா வளைத்த ஒரு
பராசத்தி, வேதப் பராசத்தி — தாரணிகள்

கொண்டகார் இச்சிக்கும் குந்தளத்தி மாமதனன்
சண்டை காரிச்சி, சகளத்தி — துண்டமதிச்

செஞ்சடைச்சி, கஞ்சுளிச்சி செம்படத்தி, கங்கணத்தி,
பஞ்சசத்தி, கொந்தளத்தி, பைம்பணத்தி — அஞ்சனத்தி,

முத்துவடக் கொங்கைச்சி, முல்லை மகிழ்நகைச்சி
பத்தரவர் நெஞ்சகத்தி, பார்இடத்தி, — சுத்தவெள்ளை

அக்கு வடத்தி, அறம்வளர்த்தி, அன்புடைச்சி,
செக்கர் இளம்பிறைச்சி, செண்பகத்தி — தக்கமணி

ஓலைக்குழைச்சி, உபதேசக் குண்டலச்சி,
மாலைக் கழுத்தி, மவுனத்தி — ஞாலமெலாம்

அக்கரத்தி பொக்கணத்தி, அண்டபகிர், அண்டத்தி,
முக்கணத்தி, நிஷ்களத்தி, ,மோட்சத்தி — மிக்க புகழ்

ஏகாக் கரத்தி, இமயப் பருப்பதத்தி
நாகாதி பூண்ட சிங்க நாதத்தி — வா(கு)ஆன

பத்(ம) ஆசனத்தி, பரிமளத்தி, பாம்(பு) அணைத்தி,
கல்(ப) அந்தரத்தி, கருநிறத்தி — வில்காம

வேடிச்சி, நல்ல(து) ஒரு மீனவனுக்(கு) அன்று முடி
சூடிச்சி, கொக்கிறகு சூடிச்சி — நாடிச்சீர்

பாதந்தனைத் தேடும் பங்கயத்தில் வீற்றிருக்கும்
வேதன் தலையறுத்த வித்தகத்தி — நீதிபுனை

பாடகத்தி, கீதப்ர பந்தத்தி, வெள்ளி மன்றுள்
ஆடகத்தி, கூடலுக்குள் ஆதியே! — ஏ(டு) எதிரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுவித்து, முன்சமணர் எண்ணாயிரர் கழுவில்
வீற்றிருக்க வைத்தமறை வித்தகியே! — நால் திசையும்

கொண்டாடப் பெற்றதொரு கோமளமே! யாமளையே
தண்தாமரைத் திருவே! தையலே! — மண்டலங்கள்

எங்கும் ஒத்து நின்றருளும் ஈஸ்வரியே! மாமதுரை
அங்கயல் கண் நாயகியே! அம்மையே! — துங்க

ஒளியே! பெரும்திருவே! ஓதிமமே! உண்மை
வெளியே! பரப்பிரம வித்தே! — அளிசேரும்

கொந்தளகப் பந்திக் குயிலே! சிவயோகத்(து)
ஐந்தருவே! மூவருக்கும் அன்னையே! — எந்தம் இடர்

அல்லல் வினைஎலாம் அகற்றியே, அஞ்சல் என்று
நல்ல சவுபாக்கியத்தை நல்கியே — வல்லபத்தின்

ஆசு, மதுரம், சித்ர, வித்தாரம் என்று அறிஞர்
பேசுகின்ற உண்மைப் பெருவாக்கு — நேசமுடன்

தந்(து) என்னை ஆட்கொண்டு, சற்குருவாய் என் அகத்தில்
வந்(து) இருந்து, புத்தி மதிகொடுத்துச் — சந்ததமும்

நீயே துணையாகி நின்(று) இரட்சி! அம் கயல்கண்
தாயே! சரணம் சரண்!

**அருள்மிகு மீனாட்சியம்மை கலிவெண்பா முற்றுப் பெற்றது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கடவூர்

# அபிராமியம்மை பதிகம்

— அபிராமிப்பட்டர் —

### காப்பு

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதநால்
வாயைக் கரன்றாள் வழுத்தவாம்—நேயர்நிதம்
எண்ணும் புகழ்க்கடவூர் எங்கள் அபி ராமவல்லி
நண்ணும் பொற்பாதத்தில் நன்கு.

### நூல்

#### ஆசிரிய விருத்தம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 1

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண்டலம் நுதற்
கத்தூரிப் பொட்டு மிட்டுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குமிழனைய நாசியும் முத்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்
வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 2

மகரவார் குழல்மேல் அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்து வாளைத் துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்க ளன்றோ?
செகமுழுமீ வொற்றைத் தனிக்குடை கவித்துமேற்
சிங்கா தனத்தி லுற்றுச்
செங்கோலும் மனுநீதி முறைமையும் பெற்றுமிகு
திகிரியுல காண்டு பின்பு
புகர்முகத்(து) ஐராவதப் பாக ராகிநிரை
புத்தேளிர் வந்து போற்றிப்
போக தேவேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர்;
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமி யே! 3

மறிகடல்கள் ஏழையுந் திகிரிஇரு நான்கையும்
மாதிறல் கரியெட் டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையு மோர்
பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
புத்தேளிர் கூட்டத் தையும்
பூமகளை யுந்திகிரி மாயவனை யும்அரையிற்
புலியாடை உடையா னையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமுறைக ளாயீன்ற முதியவர்களாய்ப் பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென்(று) அறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய்;
அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 4

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனுஞ் சிறகால்
வருந்தா மலேய ணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொ டுத்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலி! அகிலங்களுக்(கு) அன்னை என்றோதும்
நீலியென்(று) ஓது வாரோ?
ஆடாத நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 5

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல் லிடைப்
பட்டதே ரைக்கும்அன் றுற்பவித் திடுகருப்
பையுறு சீவனுக்கும்
மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தி னுக்கும்
மற்றுமொரு மூவர்க்கு மியாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லா மலே
நல்குந் தொழிற்பெருமை உண்டா யிருந்துமிகு
நவநிதி உனக்கி ருந்தும்
நானொருவன் வறுமையிற் சிறியனா னால்அந்
நகைப்புனக் கேஅல்ல வோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்கலந் தும்பர்நா டளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 6

நீடுல கங்களுக்(கு) ஆதரவாய் நின்று
நித்தமாய் முத்தி வடிவாய்
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
நீமனை வியாய்இ ருந்தும்
வீடுவீ டுகடோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்(று) இலச்சை யும்போய்
வெண்டுகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமுங் கொண்டு கைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்துநின்(று)
உன்மத்த னாகி அம்மா!
உன்கணவன் எங்கெங்கும் ஐயம்புகுந் தேங்கி
உழல்கின்ற தேது சொல்வாய்
ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 7

ஞானந் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தி னிற்போய்
நடுவி னிலிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்டு
ஈனந்தனைத் தள்ளி எனதுநா னெனுமானம்
இல்லா மலேது ரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப்பு தைத்துநெஞ்(சு)
இருளற விளக்கேற் றியே
ஆனந்த மானவிழி அன்னமே! உன்னைஎன்
அகத்தா மரைப்போ திலே
வைத்துவே றேகலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாத தோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்;
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலதியுல கத்திற் சராசரங் களையீன்ற
தாயா கினாலெ னக்குத்
தாயல்ல வோ?யான்உன் மைந்த னன்றோ?எனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன் முகத்தைஉன்
முன்தானை யால்து டைத்து
மொழிகின்ற மழலைக் குகந்துகொண் டிளநிலா
முறுவல்இன் புற்றரு கில்யான்
குலவிவிளையாடல் கொண்டருண் மழைபொழிந்(து) அங்கை
கொட்டி வாவென்(று) அழைத்துக்
குஞ்சரமு கன்கந்தனுக்(கு) இளையன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலி லேதோன்று மாறாத அமுதமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமி யே! 9

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக் கிலேன்;
கண்போதி னாலுன் முகப்போது தன்னையான்
கண்டு தரிசனை புரிகிலேன்
முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
முன்னிஉன் ஆல யத்தின்
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன்;
மோசமே போய்உ ழன்றேன்;
மைப்போத கத்திற்கு நிகரெனப் போதெரு
மைக்கடா மீதேறி யே
மாகோர காலன் வரும்போது தமியேன்
மனங்கலங் கித்தி யங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 10

மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த
வெகுளி யானதுந் துரத்த
மிடியுந் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களுந் துரத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்த
பசியென் பதுந்து ரத்த
பாவந் துரத்த பதிமோகந் துரத்த
பலகா ரியமுந் துரத்த
நகையுந் துரத்தஊழ் வினையுந் துரத்த
நாளும் துரத்த வெகுவாய்
நாவரண் டோடிகால் தளர்ந்திடும் என்னை
நமனுந் துரத்து வானோ?
அகிலஉல கங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 11

அபிராமிப் பதிகம் முற்றிற்று

**மாணிக்க வீணைஏந்தும்**

மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன்தமிழ்ச் சொல்லெடுத்துப் பாடவந்தோம் அம்மா
அருள்வாய் நீ இசை தருவாய் நீ இங்கு
வருவாய் நீ லயம் தரும் வேணி அம்மா (மாணிக்க)

நாமணக்கப் பாடிநின்றால் ஞானம் வளர்ப்பாய்
பூமணக்கப் பூஜை செய்தால் பூவை நீ மகிழ்வாய்
(மாணிக்க)

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள் — எங்கள்
உள்ளக் கோவிலிலே உறைந்து நிற்பாய்
கள்ளமில்லாமல் வரும் அன்பர்க்கே என்றும்
அள்ளி அறிவைத் தரும் அன்னையும் நீ
வாணி, சரஸ்வதி, மாதேவி, பாரதி, பாகதீஸ்வரி
மாலினி!
காணும்பொருளில் தோன்றி கலைமணி வேண்டும்
வரம்தரும் வேணி
நான்முகன் நாயகி மோகன ரூபிணி, நான்மறை
போற்றும் தேவி நீ
வான வர்க்கமுதே தேன்மழை சிந்தும்,
கானமனோகரி கல்யாணி அருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

அபிராமிப்பட்டர்

## காப்பு

தார்அமர் கொன்றையும் சண்பக
 மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே!
 உலகு ஏழும் பெற்ற
சீர்அபிராமி அந்தாதி எப்போதும்
 என் சிந்தையுள்ளே
கார்அமர் மேனிக் கணபதியே!
 நிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்
 திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம்
 போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்
 குங்குமத் தோயம்என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி
 என்தன் விழுத்துணையே. 1

துணையும், தொழுந்தெய்வமும், பெற்ற
 தாயும், சுருதிகளின்
பணையும், கொழுந்தும், பதிகொண்ட
 வேரும், பனிமலர்ப்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்
 குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி
 ஆவது அறிந்தனமே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தேன் எவரும் அறியா
மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கே:
திருவே! வெருவிப்
பிறிந்தேன், நின்அன்பர் பெருமை
எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்குஉற
வாய மனிதரையே! 3

மனிதரும், தேவரும், மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே!
கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும்,
பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்என் புந்தி
எந்நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை, செப்புரை
செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல்
மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய
அம்பிகை! அம்புயம்மேல்
திருந்திய சுந்தரி, அந்தரி
பாதம்என் சென்னியதே. 5

சென்னியது உன்பொன் திருவடித்
தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம்;
சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின்அடியாருடன்
கூடி முறைமுறையே
பன்னியது, என்றும் உந்தன்
பரம ஆகம பத்ததியே! 6

ததியுறு மத்தில் சுழலும்என்
ஆவி, தளர்விலதோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதியுறு வண்ணம் கருதுகண்
டாய்! கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும்,
மாலும், வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துர
ஆனன சுந்தரியே! 7

சுந்தரி எந்தை துணைவி,என்
பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள்,
மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத
கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த்
தாள்என் கருத்தனவே. 8

கருத்தன எந்தைதன், கண்ணன,
வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு
நல்கின, பேர்அருள்கூர்
திருத்தன பாரமும்; ஆரமும்,
செங்கைச் சிலையும் அம்பும்
முருத்துஅன மூரலும், நீயும்அம்மே!
வந்துஎன் முன்நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும்
நடந்தும் நினைப்பதுஉன்னை;
என்றும் வணங்குவது உன்மலர்த்
தாள்;எழு தாமரையின்
ஒன்றும் அரும்பொருளே! அருளே!
உமையே! இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா
முத்தி ஆனந்தமே! 10

ஆனந்தமாய், என் அறிவாய்,
நிறைந்த அமுதமுமாய்,
வான்அந்த மான வடிவுடையாள்,
மறைநான் கினுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்அந்த மான சரணார
விந்தத் தவளநிறக்
கானம்தம் ஆடரங்காம் எம்பிரான்
முடிக் கண்ணியதே. 11

கண்ணியது உன்புகழ்; கற்பதுஉன்
நாமம்; கசிந்துபத்தி
பண்ணியது உன்இரு பாதாம்
புயத்தில்; பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர்
அவையத்து; நான் முன்செய்த
புண்ணியம் ஏது? என்அம்மே!புவி
ஏழையும் பூத்தவளே! 12

பூத்தவளே புவனம் பதி
னான்கையும், பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே!
கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா
முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றி,
மற்றுஓர்தெய்வம் வந்திப்பதே? 13

வந்திப்பவர் உன்னை, வானவர்
தானவர் ஆனவர்கள்;
சிந்திப்பவர், நல் திசைமுகர்
நாரணர்; சிந்தையுள்ளே
பந்திப்பவர், அழியாப் பரமானந்தர்;
பாரில் உன்னைச்
ச ந்திப் பவர்க்கு எளிதாம்
எம்பிராட்டி!நின் தண்ணளியே. 14

தண்ணளிக்கு என்று முன்னேபல
கோடி தவங்கள் செய்வார்,
மண்அளிக்கும் செல்வமோ பெறு
வார்?மதி வானவர்தம்
விண்அளிக்கும் செல்வமும், அழியா
முத்தி வீடும்அன்றோ?
பண் அளிக்கும் சொற் பரிமள
யாமளைப் பைங்கிளியே! 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து
    கிளிர்ந்து ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்குஇடமே!
    எண்ணில் ஒன்றும் இல்லா
வெளியே! வெளிமுதல் பூதங்களாகி
    விரிந்த அம்மே!
அளியேன் அறிவு அளவிற்குஅள
    வானது அதிசயமே! 16

அதிசய மான வடிவுடை
    யாள்! அரவிந்தமெல்லாம்
துதிசயஆனன சுந்தர வல்லி!
    துணை இரதி
பதிசய மானது அபசய
    மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாக அன்றோ, வாம
    பாகத்தை வவ்வியதே? 17

வவ்விய பாகத்து இறைவரும்
    நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்
    கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்துஎன்னை ஆண்ட
    பொற்பாதமும் ஆகிவந்து,
வெவ்விய காலன்என் மேல்வரும்
    போது, வெளிநிற்கவே! 18

வெளிநின்ற நின் திருமேனியைப்
    பார்த்து,என் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டது
    இல்லை; கருத்தினுள்ளே
தெளிகின்ற ஞானம் திகழ்கின்றது
    என்ன திருவுளமோ!
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும்
    மேவி உறைபவளே! 19

உறைகின்ற நின்திருக் கோயில்,நின்
    கேள்வர் ஒருபக்கமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைகின்ற நான்மறையின் அடியோ?
    முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ?
    கஞ்சகமோ?என்தன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதி யோ?பூர
    ணாசல மங்கலையே! 20

மங்கலை, செங்கல சம்முலை
    யாள்,மலையாள், வருணச்
சங்குஅலை செங்கைச் சகல
    கலாமயில், தாவுகங்கை
பொங்குஅலை தங்கும் புரிசடையோன்
    புடையாள், உடையாள்,
பிங்கலை, நீலி,செய்யாள், வெளியாள்
    பசும்பெண் கொடியே. 21

கொடியே! இளவஞ்சிக் கொம்பே!
    எனக்குவம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே!
    பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய
    தேவரைப் பெற்றஅம்மே!
அடியேன் இறந்துஇங்கு இனிப்பிறவாமல்
    வந்துஆண்டு கொள்ளே! 22

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல்
    லாது,அன்பர் கூட்டம்
தன்னை விள்ளேன்; பரசமயம்
    விரும்பேன்; வியன்மூவுலகுக்கு
உள்ளே! அனைத்தினுக்கும் புறம்பே!
    உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே!
    அளியஎன் கண்மணியே! 23

மணியே! மணியின் ஒளியே
    ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்குஅழகே!
    அணுகாத வர்க்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணியே! பிணிக்கு மருந்தே!
அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை, நின்பத்ம
பாதம் பணிந்தபின்னே! 24

பின்னே திரிந்துஉன் அடியாரைப்
பேணிப் பிறப்புஅறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன்;
முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி
என்னும் அருமருந்தே!
என்னே? இனிஉன்னை யான்மற
வாமல்நின்று ஏத்துவனே! 25

ஏத்தும் அடியவர் ஈரேழு
உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம்;
கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கே!மணம்
நாறும்நின் தாள்இணைக்குஎன்
நாத்தங்கு புன்மொழி ஏறிய
வாறு நகையுடைத்தே! 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை;
உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை; பத்ம பதயுகம்
சூடும் பணிஎனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை
எல்லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை; சுந்தரி! நின்அருள்
ஏதென்று சொல்லுவதே! 27

சொல்லும் பொருளும் என,நட
மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே!
நின்புது மலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க்கே
அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவ
லோகமும் சித்திக்குமே. 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியும், சித்தி தரும்தெய்வம்
ஆகித் திகழும்பரா
சத்தியும், சத்தி தழைக்கும்
சிவமும், தவம்முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும்,
வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே
புரக்கும் புரத்தைஅன்றே. 29

அன்றே தடுத்துஎன்னை ஆண்டுகொண்
டாய்;கொண்டது அல்லஎன்கை
நன்றே? உனக்கினி நான்என்
செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற்றுகை
நின் திருவுளமே
ஒன்றே! பலஉருவே! அருவே!
என் உமையவளே! 30

உமையும் உமையொரு பாகரும்
ஏக உருவில்வந்துஇங்கு,
எமையும் தமக்குஅன்பு செய்யவைத்
தார்;இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை; ஈன்றுஎடுப்
பாள்ஒரு தாயும்இல்லை;
அமையும், அமையுறு தோளியர்
மேல்வைத்த ஆசையுமே! 31

ஆசைக் கடலில் அகப்பட்டு,
அருள்அற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்படஇருந்தேனை, நின்
பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல்
வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லுவேன்! ஈசர்
பாகத்து நேரிழையே! 32

இழைக்கும் வினைவழியே அடும்
காலன் எனைநடுங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கும் பொழுதுவந்து, 'அஞ்சல்
என்பாய்;அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை
யாமளைக் கோமளமே!
உழைக்கும்பொழுது, உன்னையே 'அன்னையே'
என்பன், ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்
அடியார்க்கு, வானுலகம்
தந்தே, பரிவொடு தான்போய்
இருக்கும் சதுர்முகமும்,
பைந்தேன் அலங்கற் பருமணி
ஆகமும், பாகமும்,பொற்
செந்தேன் மலரும், அலர்கதிர்
ஞாயிறும், திங்களுமே. 34

திங்கட் பகவின் மணம்நாறும்
சீறடி சென்னிவைக்க,
எங்கட் கொருதவம் எய்தியவா?
எண்இறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்துமோ?
தரங்கக் கடலுள்
வெங்கட் பணிஅணை மேல்துயில்
கூரும் விழுப்பொருளே! 35

பொருளே! பொருள்முடிக்கும் போகமே!
அரும் போகம்செய்யும்
மருளே! மருளில் வரும்தெருளே!
என் மனத்துவஞ்சத்து
இருள்ஏதும் இன்றி ஒளிவெளி
ஆகியிருக்கும் உன்றன்
அருள் ஏது அறிகின்றிலேன்,
அம்புயஆதனத்து அம்பிகையே! 36

கைக்கே அணிவது கன்னலும்
பூவும்; கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து
மாலை; விடஅரவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கே அணிவது பன்மணிக்
கோவையும் பட்டும்;எட்டுத்
திக்கே அணியும் திருவுடை
யான்இடம் சேர்பவளே! 37

பவளக் கொடியில் பழுத்தசெவ்
வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணையா,
எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது, துடிஇடை
சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர்
அமராவதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக்கு உன்தன் அடித்
தாமரைகள்உண்டு; அந்தகன்பால்
மீளுகைக்கு உன்தன் விழியின்
கடைஉண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே
அன்று; முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்தவில்லான்
பங்கில் வாள்நுதலே! 39

வாணுதல் கண்ணியை, விண்ணவர்
யாவரும் வந்துஇறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெரு
மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத
கன்னியை, காணும்அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம்அன்றோ,
முன்செய் புண்ணியமே! 40

புண்ணியம் செய்தனமே மனமே!
புதுப் பூங்குவளைக்
கண்ணியும்,செய்ய கணவரும்
கூடி,நம் காரணத்தால்
நண்ணி இங்கேவந்து, தம்அடி
யார்கள் நடுஇருக்கப்
பண்ணி, நம் சென்னியின்மேல்
பத்மபாதம் பதித்திடவே. 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்கொண்டு விம்மி, இணைகொண்டு
இறுகி இளகி,முத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு
இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட
நாயகி! நல்அரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி,
வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை,
பஞ்சபாணி, இன்சொல்
திரிபுர சுந்தரி, சிந்துர
மேனியள், தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக்
குனிபொருப் புச்சிலைக்கை,
எரிபுரை மேனி இறைவர்செம்
பாகத்து இருந்தவளே! 43

தவளே இவள் எங்கள்
சங்கரனார் மனைமங்கலமாம்;
அவளே அவர்தமக்கு அன்னையும்
ஆயினள்; ஆகையினால்,
இவளே கடவுளர் யாவர்க்கும்
மேலை இறைவியுமாம்;
துவளேன், இனிஒரு தெய்வம்உண்
டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

தொண்டு செய்யாது, நின்பாதம்
தொழாது, துணிந்துஇச்சையே
பண்டு செய்தார் உளரோஇலரோ?
அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால்,அது கைதவமோ
அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலம் பொறுக்கைநன்றே,
பின் வெறுக்கைஅன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும்,
தம்அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதுஅன்றே;
புதுநஞ்சை உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம்
கலந்த பொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும்,
யான்உன்னை வாழ்த்துவனே. 46

வாழும் படிஒன்று கண்டுகொண்டேன்:
மனத்தே ஒருவர்
வீழும் படிஅன்று; விள்ளும்படி
அன்று; வேலைநிலம்
ஏழும், பருவரை எட்டும்
எட்டாமல், இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே
கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றும்
சடைமுடிக் குன்றில்ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக்
கொடியைப் பதித்துநெஞ்சில்,
இடரும் தவிர்த்து,இமைப் போதுஇருப்பார்
பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும்
தோயும் குரம்பையிலே? 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க
ஆவி,வெங் கூற்றுக்குஇட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப்போது,
வளைக்கை அமைத்து
அரம்பை யடுத்த அரிவையர்
சூழவந்து, 'அஞ்சல்' என்பாய்,
நரம்பை அடுத்து இசைவடி
வாய்நின்ற நாயகியே! 49

நாயகி, நான்முகி, நாராயணி,
கை நளினபஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி,
சாமளை, சாதிநச்சு
வாயகி மாலினி, வாராகி,
சூலினி, மாதங்கிஎன்று
ஆயகியாதி உடையாள் சரணம்
அரண் நமக்கே. 50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரணம் பொருள்என்று அருள்
ஒன்றுஇலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழியமுனிந்த
பெம்மானும் முகுந்தனுமே,
'சரணம் சரணம்' எனநின்ற
நாயகிதன் அடியார்,
மரணம் பிறவி இரண்டும்எய்தார்,
இந்த வையகத்தே. 51

வையம், துரகம், மதகரி,
மாமகுடம், சிவிகை,
பெய்யும் கனகம், பெருவிலை
ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித்
தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்கு
உளவாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினில்
சாத்திய செய்யபட்டும்,
பென்னம் பெரிய முலையும்,
முத்தாரமும், பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்,கண்
மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனிஇருப் பார்க்குஇது
போலும் தவம்இல்லையே. 53

இல்லாமை சொல்லி, ஒருவர்தம்
பால்சென்று, இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல்,
நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால்
ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை
பாதங்கள் சேர்மின்களே. 54

மின்ஆயிரம் ஒரு மெய்வடி
வாகி விளங்குகின்ற
அன்னாள், அகமகிழ் ஆனந்த
வல்லி, அருமறைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாய், நடுஎங்குமாய், முடிவாய
முதல்வி தன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும்,
வேண்டுவது ஒன்றில்லையே. 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய்
விரிந்து, இவ்வுலகுஎங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கிநிற்பாள்
என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா!
இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற
பெம்மானும் என்ஐயனுமே. 56

ஐயன் அளந்தபடி இருநாழி
கொண்டு, அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும்
போற்றி, ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும்
கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத்தாய்; இதுவோ
உன்தன் மெய்யருளே? 57

அருணாம் புயத்தும்,என் சித்தாம்
புயத்தும், அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்
நல்லாள்,தகை சேர்நயனக்
கருணாம் புயமும், வதனாம்
புயமும், கராம்புயமும்,
சரணாம் புயமும் அல்லால்
கண்டிலேன்,ஒரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதுஇல்லை ஈதுஅல்லது
என்று,உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன்;
ஒற்றை நீள் சிலையும்
அஞ்சுஅம்பும் இக்குஅலராக நின்றாய்!
அறியார் எனினும்,
பஞ்சுஅஞ்சும் மெல்லடியார் அடியார்
பெற்ற பாலரையே. 59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலினும் சொல்இனி யாய்!பனி
மாமலர்ப் பாதம்வைக்க,
மாலினும், தேவர்வணங்க நின்றோன்
கொன்றை வார்சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள்
பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும், சாலநன்றோ அடியேன்
முடை நாய்த்தலையே? 60

நாயே னையும் இங்குஒரு
பொருளாக நயந்துவந்து,
நீயே நினைவின்றி ஆண்டுகொண்
டாய்,நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய்;
என்ன பேறுபெற்றேன்!
தாயே, மலைமகளே, செங்கண்
மால்திருத் தங்கைச்சியே! 61

தங்கச் சிலைகொண்டு, தானவர்
முப்புரம் சாய்த்து,மத
வெங்கண் கரிஉரி போர்த்த
செஞ்சேவகன் மெய்அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட
நாயகி, கோகநதச்
செங்கைக் கரும்பும், மலரும்எப்
போதும் என்சிந்தையதே! 62

தேறும் படிசில ஏதுவும்
காட்டி,முன் செல்கதிக்குக்
கூறும் பொருள்,குன்றில் கொட்டும்
தறி,குறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய்
இருப்பது அறிந்திருந்தும்,
வேறும் சமயம்உண்டு என்று
கொண்டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள்
பால்சென்று, மிக்கஅன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூணேன்; உனக்குஅன்பு பூண்டு
கொண்டேன்; நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன், ஒருபொழுதும்; திரு
மேனிப்ரகாசம் அன்றிக்
காணேன் இருநில மும்,திசை
நான்கும், ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமும்
காண,விற் காமன்அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு
மாற்குத் தடக்கையும்செம்
முகனும் முந்நான்கு இருமூன்றுஎனத்
தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ? வல்லி
நீசெய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்றறியேன்; சிறியேன்
நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றுஒன்று
இலேன்;பசும் பொன்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்,
வினையேன் தொடுத்த
சொல்அவ மாயினும், நின்திரு
நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம் செய்து தொழுதுமின்
போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்
வையாதவர் வண்மை,குலம்,
கோத்திரம், கல்வி, குணம்குன்றி,
நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குஉழலா
நிற்பர் பாரெங்குமே. 67

பாரும், புனலும், கனலும்,வெங்
காலும், படர்விசும்பும்;
ஊரும் முருகு சுவைஒளி
ஊறுஒலி ஒன்றுபடச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரும் தலைவி, சிவகாம
சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம் உடையார்
படையாத தனம்இல்லையே. 68

தனம்தரும்; கல்வி தரும்;ஒரு
நாளும் தளர்வுஅறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்;நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும்அன்பர் என்பவர்க்கே,
கனம்தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண்
டேன்,கடம் பாடவியில்;
பண்களிக்கும் குரல் வீணையும்,
கையும், பயோதரமும்,
மண்களிக்கும் பச்சை வண்ணமும்
ஆகி, மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு
மாட்டிதன் பேரழகே. 70

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத
வல்லி, அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்
தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள
யாமளைக் கொம்பிருக்க,
இழவுற்று நின்றநெஞ்சே! இரங்கேல்!
உனக்கு என்குறையே? 71

என்குறை தீரநின்று ஏத்துகின்
றேன்;இனி யான்பிறக்கின்,
நின்குறையே அன்றி யார்குறை
காண்?இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற
நேரிடை மெல்லியலாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்குறை தீர,எம் கோன்சடை
மேல்வைத்த தாமரையே. 72

தாமம் கடம்பு; படைபஞ்ச
பாணம்; தனுக்கரும்பு;
யாமம் வயிரவர் ஏத்தும்
பொழுது;எமக்கென்று வைத்த
சேமம் திருவடி; செங்கைகள்
நான்கு,ஒளி செம்மை;அம்மை
நாமம் திரிபுரை; ஒன்றோடு
இரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும்,
வேதமும், நாரணனும்,
அயனும் பரவும் அபிராம
வல்லி அடிஇணையைப்
பயன்என்று கொண்டவர், பாவையர்
ஆடவும் பாடவும்,பொன்
சயனம் பொருந்து தபனியக்
காவினில் தங்குவரே. 74

தங்குவர் கற்பகத் தாருவின்
நீழலில்; தாயர்இன்றி
மங்குவர், மண்ணில் வழுவாப்
பிறவியை; மால்வரையும்,
பொங்குவர் ஆழியும், ஈரேழ்
புவனமும் பூத்தஉந்திக்
கொங்குஇவர் பூங்குழலாள் திரு
மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தில், நின்கோலம்
எல்லாம்;நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற
நேர்வழி; வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்
பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்ச
பாண பயிரவியே! 76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரவி! பஞ்சமி! பாசாங்
குசை!பஞ்ச பாணி!வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி!
காளி! ஒளிரும்கலா
வயிரவி! மண்டலி! மாலினி!
சூலி! வராகிஎன்றே
செயிர்அவி நான்மறை சேர்திரு
நாமங்கள் செப்புவரே. 77

செப்பும் கனக கலசமும்
போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம
வல்லி அணிதரளக்
கொப்பும், வயிரக் குழையும்,
விழியின் கொழும்கடையும்,
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்
என் துணைவிழிக்கே. 78

விழிக்கே அருளுண்டு அபிராம
வல்லிக்கு; வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு
எமக்கு;அவ் வழிகிடக்கப்,
பழிக்கே சுழன்று, வெம்பாவங்களே,
செய்து, பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்
மோடுஎன்ன கூட்டுஇனியே? 79

கூட்டியவா என்னைத் தன்அடி
யாரில், கொடியவினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா,
தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா, கண்ட கண்ணும்
மனமும் களிக்கின்றவா,
ஆட்டியவா நடம், ஆடகத்
தாமரை ஆரணங்கே. 80

அணங்கே! அணங்குகள் நின்பரி
வாரங்கள் ஆகையினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கேன் ஒருவரை; வாழ்த்துகிலேன்
நெஞ்சில்; வஞ்சகரோடு
இணங்கேன்; எனதுஉனது என்று
இருப்பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன்; அறிவொன்றி லேன்;என்
கண்நீவைத்த பேரளியே! 81

அளிஆர் கமலத்தில் ஆரணங்கே!
அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு.
மேனியை உள்ளுதொறும்
களியாகி, அந்தக் கரணங்கள்
விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்,எங்ஙனே மறப்பேன்
நின் விரகினையே? 82

விரவும் புதுமலர் இட்டு,நின்
பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார்,
இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிரா
வதமும், பகீரதியும்
உரவும் குலசமும், கற்பகக்
காவும் உடையவரே. 83

உடையாளை, ஒல்குசெம் பட்டு
உடையாளை, ஒளிர்மதிச்செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சடையாளை,
தயங்கும் நுண்ணூல்
இடையாளை, எங்கள் பெம்மான்
இடையாளை, இங்கென்னைஇனிப்
படையாளை, உங்களையும் படையா
வண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசைதொறும் பாசாங்
குசமும், பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும்,
கரும்பும்,என் அல்லல்எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கும் திரிபுரையாள் திரு
மேனியும், சிற்றிடையும்,
வார்க்குங்கும முலையும், முலைமேல்
முத்து மாலையுமே. 85

மால்அயன் தேட, மறைதேட,
வானவர்தேட நின்ற
காலையும் சூடகக் கையையும்
கொண்டு, கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல்
விடும்போது, வெளிநில்கண்டாய்!
பாலையும் தேனையும் பாகையும்
போலும் பணிமொழியே! 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத
நின்திருமூர்த்தி, எந்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற
தால்;விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா
விரதத்தை, அண்டமெல்லாம்
பழிக்கும் படி,ஒரு பாகம்
கொண்டுஆளும் பராபரையே! 87

பரம்என்று உனை அடைந்தேன்
தமியேனும், உன்பத்தருக்குள்
தரம்அன்று இவன்என்று தள்ளத்
தகாது; தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில்
வாங்கிய, போதில்அயன்
சிரம்ஒன்று செற்ற கையான்இடப்
பாகம் சிறந்தவளே! 88

சிறக்கும் கமலத் திருவே! நின்
சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும்
நீயும், துரியமற்ற
உறக்கம் தரவந்து, உடம்போடு
உயிர்உறவு அற்றுஅறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்கும் பொழுது,என் முன்னே
வரல்வேண்டும் வருந்தியுமே. 89

வருந்தா வகை என் மனத்
தாமரையினில் வந்துபுகுந்து
இருந்தாள்; பழைய இருப்பிடமாக;
இனி எனக்குப்
பொருந்தாத ஒருபொருள் இல்லை;
விண்மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தானதை
நல்கும் மெல்லியலே! 90

மெல்லிய நுண்இடை மின்அனை
யாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை
யாளைப் புகழ்ந்து,மறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி
யாரைத்தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்த்துஎழ, வெண்பகடு
ஊரும் பதம் தருமே. 91

பதத்தே உருகி, நின்பாதத்திலே
மனம்பற்றி, உன்றன்
இதத்தே ஒழுக, அடிமை கொண்
டாய்;இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்;அவர்
போனவழியும் செல்லேன்;
முதல்தேவர் மூவரும் யாவரும்
போற்றும் முகிழ்நகையே! 92

நகையே இஃதுஇந்த ஞாலம்எல்
லாம்பெற்ற நாயகிக்கு
முகையே, முகில்முலை மானே
முதுகண்; முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே;
மலைமகள் என்பதுநாம்;
மிகையே, இவள்தன் தகைமையை
நாடி விரும்புவதே. 93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பித் தொழும் அடியார்விழி
நீர்மல்கி, மெய்புளகம்
அரும்பித், ததும்பிய ஆனந்த
மாகி, அறிவிழந்து,
சுரும்பிற் களித்து, மொழிதடு
மாறி,முன் சொன்னஎல்லாம்
தரும் பித்தர் ஆவரென்றால்,
அபிராமி சமயம்நன்றே! 94

நன்றே வருகினும், தீதே
விளைகினும், நான்அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே
பரம்;எனக்கு உள்ளஎல்லாம்
அன்றே உனதென்று அளித்து
விட்டேன்; அழியாதகுணக்
குன்றே! அருட்கடலே! இம
வான்பெற்ற கோமளமே! 95

கோமள வல்லியை, அல்லியந்
தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை, ஏதம்
இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா
மயில் தன்னைத்தம்மால்
ஆமளவும் தொழு வார்,எழு
பாருக்கும் ஆதிபரே. 96

ஆதித்தன், அம்புலி, அங்கி,
குபேரன், அமரர்தங்கோன்,
போதில் பிரமன், புராரி,
முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன்,
கணபதி, காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர்
போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின் அடித்தாமரை
சூடிய சங்கரற்குக்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவந்த தீயும் தலைவந்த
ஆறும் கரந்ததுஎங்கே?
மெய்வந்த நெஞ்சின் அல்லால்,
ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல்அறியா
மடப் பூங்குயிலே! 98

குயிலாய் இருக்கும் கடம்பா
டவியிடை; கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்
திடை; வந்துஉதித்த
வெயில்ாய் இருக்கும் விசும்பில்;
கமலத்தின்மீது அன்னமாம்,
கயிலாய ருக்கு அன்றுஇமவான்
அளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந்
தார்கமழ் கொங்கைவல்லி,
கழையைப் பொருத திருநெடுந்
தோளும், கருப்புவில்லும்,
விழையப் பொருதிறல் வேரிஅம்
பாணமும், வெண்ணகையும்,
உழையைப் பொருகண்ணும், நெஞ்சில்
எப்போதும் உதிக்கின்றவே! 100

**நூற்பயன்**

ஆத்தாளை, எங்கள் அபிராம
வல்லியை, அண்ட மெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்
தாளை,புவி அடங்கக்
காத்தாளை, அம்குச பாசாங்
குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத்
தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

**முற்றிற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகை வணக்கம்

## (108 போற்றிகள்)

| | | | |
|---|---|---|---|
| சிவனார் | மனமகிழ் | தேவி! | போற்றி! |
| செங்கண்மால் | பின்வரு | செல்வி | போற்றி! |
| இமவான் | பயந்த | இறைவி | போற்றி! |
| இறைவன் | இடப்புறம் | இருந்தாய் | போற்றி! |
| உமையே | உண்ணா | முலையே! | போற்றி! |
| உலகெலாம் | ஈன்றருள் | ஒருத்தி | போற்றி! |
| தந்தி | முகவனின் | தாயே! | போற்றி! |
| கந்தனைப் | பெற்றருள் | கன்னி! | போற்றி! |
| ஞானசம் | பந்தனை | நயப்பாய் | போற்றி! |
| ஞானப் | பால்கொடுத்து | அருளினை | போற்றி! |
| ஈசனார் | நெருப்புருத் | தவிர்ப்பாய் | போற்றி! |
| இடப்புறம் | குளிர்ச்சியை | இடுவாய் | போற்றி! |
| காலம் | கடந்த | கடவுள்! | போற்றி! |
| கற்பனை | தாண்டிய | கற்பகம்! | போற்றி! |
| எழுதாச் | சொல்லின் | எழிலே! | போற்றி! |
| இகமும் | பரமும் | ஈவாய் | போற்றி! |
| தோன்றாத் | துணைக்கோர் | துணையே! | போற்றி! |
| துவாத | சாந்தம் | கடந்தாய் | போற்றி! |
| மூலத் | தலத்து | முதலே | போற்றி! |
| முக்கட் | சுடர்க்கு | விருந்தே | போற்றி! |
| தண்ணார் | தமிழின் | சுவையே! | போற்றி! |
| கண்ணார் | அமுதக் | கடலே! | போற்றி! |
| பிறவிப் | பிணிக்கு | மருந்தே | போற்றி! |
| பேசா | மறையின் | பொருளே | போற்றி! |
| அமிழ்தினும் | இன்மொழி | அருள்வாய் | போற்றி! |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க்கடல் மாந்தும் தலைவி! போற்றி!
சிவனை ஈன்றருள் செந்திரு போற்றி!
சிவனார் தந்தநல் திருவே! போற்றி!
அன்றிவ் உலகெலாம் அளித்தாய் போற்றி!
என்றும் கன்னியாய் இருப்பாய் போற்றி!

ஒன்றிய உணர்வோர் உணர்வே! போற்றி!
ஒன்னார் நெஞ்சில் உறையாய் போற்றி!
தெவ்வர் பகைஅடு தேவே! போற்றி!
பவ்வ நெடுங்கடல் படிவே! போற்றி!
பண்ணார் இன்தமிழ்ப் பாவாய்! போற்றி!
என்நான்கு அறமும் வளர்ப்பாய் போற்றி!
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் போற்றி!
விண்ணோர் மிளிர்முடி விளக்கே போற்றி!
புலவர் நாவில் பொருந்துவாய் போற்றி!
புண்ணிய யோகப் பொலிவே போற்றி!

அகந்தைக் கிழங்கை அகழ்வாய் போற்றி!
அற்புதன் ஆகம் ஆண்டாய் போற்றி!
மகிட முகத்தனை மாய்த்தாய் போற்றி!
சகடவாழ்வு அடுதையல் நாயகி போற்றி!
வினையெலாம் கெடுக்கும் விமலி போற்றி!
நனைமலர்ச் சேவடி நல்குவாய் போற்றி!
வேத முடிவில் விளங்குவாய் போற்றி!
நாதப் பொருளா நண்ணுவாய் போற்றி!
கற்றவர் சுவைக்கும் கரும்பே! போற்றி!
அற்றவர்க்கு அருளும் அரசி! போற்றி!

பார்த்தனுக்கு அருள்செயப் பணித்தனை போற்றி!
தீர்த்தன்பின் வேட்டுருத் தெரிந்தனை போற்றி!
பன்றிபின் பதியொடு வந்தனை போற்றி!
குன்றெறி குழவியை ஏந்தினை போற்றி!
செழியர் பிரான்திரு மகளே! போற்றி!
வழுதிநாடு ஆண்டபெண் மணியே! போற்றி!
உலகினை வெற்றிகொள் ஒண்தொடி! போற்றி!
கலைபல கற்றுணர் காரிகை போற்றி!
சொக்கற்கு மாலை சூட்டினாய் போற்றி!
சொக்கற்கு மகுடமும் சூட்டினாய் போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தழைபொருள் | தலைவர்க்குத் | தந்தனை | போற்றி! |
| தமிழ்அவைத் | தலைமையும் | தந்தாய் | போற்றி! |
| முழுமுதல் | தொட்டநின் | மொய்குழல் | போற்றி! |
| விழுமியோர் | முடிதவழ் | மெல்லடி | போற்றி! |
| கருங்குழல் | செவ்வாய்க் | கார்மயில் | போற்றி! |
| ஒருங்கிய | சாயல் | சுருங்கிடை | போற்றி! |
| குவளைக் | கண்ணி | குரைகழல் | போற்றி! |
| தவள | வெண்ணகைத் | தண்ணளி | போற்றி! |
| சுரும்பமர் | நறுமலர்ச் | சுரிகுழல் | போற்றி! |
| துரியம் | கடந்தநல் | சுடர்முகம் | போற்றி! |
| குழவித் | திங்கள்சேர் | எழில்நுதல் | போற்றி! |
| முழுதுலகு | அருள்தரு | விழிக்கயல் | போற்றி! |
| பண்ணமர் | மொழிபகர் | பவளவாய் | போற்றி! |
| புண்ணியப் | பேறளி | புன்னகை | போற்றி! |
| துன்னுபொன் | ஆடைத் | தொடித்தோள் | போற்றி! |
| மின்னிகர் | பொன்கொடி | நுண்ணிடை | போற்றி! |
| வரதமும் | அபயமும் | வழங்குகை | போற்றி! |
| சரதம் | வீடருள் | தாளிணை | போற்றி! |
| சிங்கம் | ஏறும் | சேவகி! | போற்றி! |
| வங்கநஞ்சு | உண்டவன் | மணாட்டி | போற்றி! |
| மரகதக் | கொடிப்பெரு | மாட்டி | போற்றி! |
| மாணிக்க | வல்லி! | மாதா! | போற்றி! |
| அபிடேக | அபிராம | வல்லி | போற்றி! |
| அங்கயற் | கண்ணுடை | அம்மை | போற்றி! |
| அல்லியங் | கோதை | அலங்காய் | போற்றி! |
| அபிரா | மித்தாய் | அணங்கே | போற்றி! |
| ஆவுடை | நாயகி! | அன்னே | போற்றி! |
| ஆளுடை | அம்பிகை | அம்மா! | போற்றி! |
| ஞானப்பூங் | கோதை | நங்காய்! | போற்றி! |
| தேனஃக | கொன்றைத் | தெரியலாய் | போற்றி! |
| பார்வதி! | பராபரை! | பைரவி! | போற்றி! |
| நாரணி | பெரிய | நாயகி! | போற்றி! |
| அன்ன | பூரணி! | அம்பிகை | போற்றி! |
| மன்னு | மீனாட்சி | மடப்பிடி | போற்றி! |
| விசுவனா | தன்மகிழ் | விசாலாட்சி | போற்றி! |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பசுபதி | பங்குறு | பரமேட்டி | போற்றி! |
| சக்தி | கரும்புவில் | தாங்குவாய் | போற்றி! |
| பக்தி | வலையில் | படுபவள் | போற்றி! |
| வாமனி | நீலி! | வராகினி | போற்றி! |
| கோமள | வல்லி! | கோமதி! | போற்றி! |
| மயிலே! | அமுதே | மானே! | போற்றி! |
| குயிலே | தேனே | கொழுந்தே | போற்றி! |
| சுந்தரி! | சங்கரி! | சூலி! | போற்றி! |
| அந்தரி! | சாமளை | அமலை | போற்றி! |
| காமாட்சி! | காந்தி | மதித்தாய் | போற்றி! |
| கவுரி! சிவ | காமி, முக் | கண்ணி! | போற்றி! |
| அன்பெலாம் | ஒருரு | ஆனாய் | போற்றி! |
| அவனியின் | அன்னையே! | போற்றி! | போற்றி! |

அம்பிகை வணக்கம் முற்றிற்று

## கற்பகமே உனையன்றி

கற்பகமே உனையன்றித் துணை யாரம்மா
நீயே கதி எனப்போற்றும்
என்னைக் கண் பாரம்மா அம்மா (கற்பக)

அற்புதமெல்லாம் நிகழ்த்தும் அருள் திறம் உடையவளே
ஆனந்த வாழ்வுதனை அன்பர்க்கு அளிப்பவளே (கற்பக)

அலைகடல் ஓரத்திலே அமைந்த மயிலையிலே
கலைவடிவாய் திகழும் நின் திருக் கோவிலிலே
சிலைவடிவாய் நின்று உலகேழும் காப்பவளே
செம்பவள மேனி வண்ணன் மகிழும் உமையவளே (கற்பக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு மயிலாப்பூர்
# கற்பகவல்லியம்மன் பதிகம்

பூரணி மனோன்மணி தயாபரி
பராபரி புராதனி தராதலமெலாம்
பொற்புடன் அளித்த சிவசக்தியிம
வானுதவு புத்ரி மகமாயியென்றே
சீரணி தமிழ்க்கவிதை பாடி
முறையிடுவதுன் செவிதனிற் கேறவிலையோ
தேஹீயென் றாலுனக் கீய
வகையில்லையோதீனரக்ஷ கியல்லையோ
ஆருலகி நிற்பெற்ற தாயன்றி
மக்கள்தமை ஆதரிப்பவர் ஆருசொல்லாய்
அன்னையே யின்னும் பராமுகம்
பண்ணாமல் அடியேனை ரக்ஷிகண்டாய்
மேருவை வளைத்தவ னிடத்தில்
வளரமுதமே விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்
பதவல்லி விமலி கற்பகவல்லியே. 1

அத்துவித சித்த பரிசுத்தர்க
ளிடத்தினி லடுத்திடர் தொலைப்பமென்றால்
ஆசையெனு மூவகைப் பேய்பிடித்து
ஆவேச மாட்டும் வகையல்லாமலே
தத்துபரி யொத்தமனம் எத்தனை சொன்னாலுமிது
தன் வழியிலே யிழுத்துத்தள்ளுதே
பாழான கோபமு மடங்காது
தன்னரசு நாடு செய்யுதே
இத்தனைவிதச் சனியி லெப்படி
வழிப்படுவ தெப்படி பிழைப்பதம்மா
இனியாகிலும் கடைக்கண் பார்த்து வினைதீர்த்து
இணைமலர்ப் பதமருள்செய்குவாய்
வித்தக நுதற்கண னிடத்தில்
வளரமுதமே விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்
பதவல்லி விமலி கற்பகவல்லியே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்வைத்த சிந்தை மடமங்கையர்கள்
வாசனைப்பூங் குழலிலே நிழலிலே
பொழியம்பு போலுமிரு விழியம்பிலே
பொடிப்பூச்சிலே கைவீச்சிலே
செய்தொப்பமிட்ட செப்பெனு முலையிலே
துடிச்சிற் றிடையிலே யுடையிலேதெட்டிலே
நந்நுதற் பொட்டிலே வெண்ணகைச்
செம்பவள வாயி தழிலே
பைவைத்த விடஅரவமெனு நிதம்பத்திலே
பாழுறி வழிந்து மூழ்கிப்
பரகதிக் கொருதவச் செய்கையு
மிலாக்கொடும் பாதகனை யாள்வதென்றோ
மெய்வைத்த கையா னிடத்தில்
வளரமுதமே விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்
பதவல்லி விமலி கற்பகவல்லியே. 3

நடத்தையி லடக்கமும் இணக்கமும்
வணக்கமுறு நற்குணமும் நற்செய்கையும்
நலந்தரும் கல்வியும் செல்வமும்
அதற்கான நல்லோ ரிடத்திலுறவும்
திடத்து மனமும் பொறுமையும்
திறமையும் தருமசிந்தனையும் அதிநுட்பமும்
தீனர்க ளிடத்தில் விச்வாஸமும்
என்றும் அவர்தீப் பசிதணிக்க நினைவும்
கடக்க அரிதான ஜனனக்
கடல்கடந்து கதிகாண மெய்ஞ்ஞானமோனக்
கம்பலுந் தந்துதவி செய்து
ரக்ஷித்துக் கடைத்தேற அருள்புரிகுவாய்
விடக்கடு மிடற்றன் இடத்தில்
வளரமுதமே விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்
பதவல்லி விமலி கற்பகவல்லியே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமை யென்னுமொரு பொல்லாத
பாவியாய் எந்நேரமும் இடறுறாமல்
ஏற்காம லேற்பவர்க் கில்லையென்
றுரையாமல் இழிதொழில்கள் செய்திடாமல்
கல்லாத புல்லருற வில்லாமல்
அடுபிணி கனாவிலு மெனைத்தொடாமல்
கற்ற பெரியோர்களோடு தர்க்கித்
தெதிர்த்துநான் கடிந்தசொற் சொல்லிடாமல்
கொல்லாது கொல்லு மடமங்கையர்கள்
இங்கிதக் கொள்கையில் மயங்கிடாமல்
குறையொன்று வாராமல் உனதடிமை
செய்யஅருள் கூட்டுவாய் மதவேளைமுன்
வெல்லாமல் வென்றவ னிடத்தில்
வளரமுதமே விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்
பதவல்லி விமலி கற்பகவல்லியே. 5

கமலனை அழைத்தெனது பழவினைகள்
யாவையும் கட்டறுத் தின்றுமுதலாய்
கால னணுகாம லொருபேய்கள்
தொடராமல் வெங்கலி வந்தடுத்திடாமல்
நமதுகொத் தடியனென் றெழுதிக்
கருத்தொன்றி தாளட்டி பண்ணுவானோ
நமனு மதிகெட்டு வந்தணுகுவனோ
பிணிகள் நாடுமோ கலியண்டுமோ
இமையளவில் அணுவை மலையாக்குவாய்
மலைதனை இமைப்பில் அணுவாக்கவல்லாய்
என்னை ரக்ஷிப்ப தொருபாரமோ
சும்மா இருப்ப தழகல்லவம்மா
விமல சற்குரு பரனிடத்தில்
வளரமுதமே விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்
பதவல்லி விமலி கற்பகவல்லியே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்திற்கும் வெகுவஞ்சத் திற்கும்
அறநெறியில் வீழ்ந்திடு மயக்கும்
நீசப் பிசாசரொடு நேசித்து
நன்னெறியில் நிலையாத பெருமயக்கும்
அஞ்சத் தெழுநீத குழன்மங்கையர்கள்
உந்தியெனு மடுவில் வீழ்த்திடுமயக்கும்
மாயைக்கு வித்தான நீள
நிதியின்மே லாசைவைத் துழன்றிடுமயக்கும்
கொஞ்சத்தி லுனதருளை அன்றி
விட்டொழியாது கோதற்ற ஞானநிலையும்
கூடாது வாடுமெனை அஞ்சலென்
றுன்னடியார் கூட்டமொடு கூட்டுகண்டாய்
விஞ்சச் சிறந்தவ னிடத்தில்
வளரமுதமே விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்
பதவல்லி விமலி கற்பகவல்லியே. 7

ஏதென்று சொல்லுவே னானாலு
மம்மம்ம என்கொடுமை யெங்குமில்லை
இல்லறம் துறவறம் இரண்டிற்கும்
ஆகாமல் யாதினுங் கடையனாகித்
தீதென்ற செய்கைக ளனைத்தையும்
செய்து வஞ்சமழுக்கா றவாவாம்
சிக்கினுட்சிக்கி வறுமைக் குழியில்
வீழ்ந்து தற்செயலுக் கயலுமாகிப்
போதென்று மூன்றிலொரு போதேனு
முன்னடியர் பொன்னடிக் காட்செய்திடாப்
புன்மையே னொருகாலம் நன்மை
செய்துய்வனோ பொன்பூத்த வெள்ளிமலையில்
மீதென்று உரைப்பவ னிடத்தில்
வளரமுதமே விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்
பதவல்லி விமலி கற்பகவல்லியே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயா ஜனனக் கடற்காவனோ
பிணிமலைக் காவனோ வருத்தும்
வாறனைச் சமுசார வேதனைக்
காவனோ வறுமைச் சனிக்காவனோ
ஓயாத கோபக் கனற்காவனோ
கெட்ட வொன்னலர் பகைக்காவனோ
ஒழியாத சஞ்சலப் படுகுழிக்
காவனோ ஊழ்வினை தனக்காவனோ
நீயா தெரிந்தெனைப் பாதுகாத்தருள்
செய்து நெடுநாட்படும் பாடெல்லாம்
நோக்கி யழியாத சுகமெய்தச்
செய்தாலன்றி நீச்சுநிலை யில்லையம்மா
வீயாத முக்கண னிடத்தில்
வளரமுதமே விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்
பதவல்லி விமலி கற்பகவல்லியே. 9

கோதற்ற மெய்ஞ்ஞான போதச்
சிவானந்த கோலாகலச் சீலர்பால்
கொத்தடிமை செய்தவர்கள் சொற்படி
நடத்தபல குற்றங்களுநங் களைந்து
சூதற்ற நெஞ்சனாய் ஆசைப்
பிசாசைத் துரத்தி ஐம்புலவேடராம்
துட்டரை யடக்கியொரு துக்கமில்லா
ஞான சுகநிஷ்டை சேர்வதென்றோ
நாதத்து மைம்பூத பேதத்து
எண்பத்து நாலு லட்சத்துமடியார்
நல்லிதயத்தும் அறுசமயத்தும் மறுவற்று
நானெனும் பேர்படைத்து
வேதத்து முறைபவனிடத்தில் வளரமுதமே
விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்
பதவல்லி விமலி கற்பகவல்லியே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசங்கரர் அருளிய

# சௌந்தரியலகரி

*தமிழில்: வீரைக் கவிராச பண்டிதர்*

## ஆனந்தலகரி

**எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்**

சிவமெ னும்பொருளு மாதி சத்தியொடு
சேரி னெத்தொழிலும் வல்லதா
மிவள்பி ரிந்திடி னியங்கு தற்குமரி
தரிதெ னாமறை யிரைக்குமா
னவபெரும் புவன மெவ்வ கைத்தொழி
னடத்தி யாவரும் வழுத்துதா
ளவனி யின்கணொரு தவமி லார்பணிய
லாவதோ பரவ லாவதோ. 1

பாத தாமரையி னுண்டு கட்பரம
வணுவி னிற்பல வியற்றினால்
வேத நான்முகன் விதிக்க வேறுபடு
விரித லைப்புவன மடையமான்
மூத ராவடி வெடுத்த னந்தமுது
கணப ணாடவி பரிப்பமே
னாத னார்பொடி படுத்து நீறணியி
னாமு ரைத்தெனவள் பான்மையே. 2

அறிவி லர்க்கிதய திமிர மீருமள
வற்ற வாதவ ரளப்பிலா
வெறிக திர்ப்ரபை குழைத்தி ழைத்தனைய
தீவி யாமளை நினைப்பிலார்
செறிம திக்கிணரி னொழுகு தேனருவி
தெறுக லிக்கருண் மணிக்குழாம்
பிறவி மைக்கடல் விழாதெ டுப்பதொரு
பெருவ ராகவெண் மருப்பரோ. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவெ னப்புகழ வதினி மிர்ந்துநிகர்
செப்பு வாரபய வரதமாம்
பாவ கத்தபின யத்தொ டுற்றகை
பரப்பி யென்பய மொறுக்குமே
யாவ ருக்குமஃ தரிது நின்பத
மிரப்ப யாவையு மளிக்குமான்
மூவ ருக்குமொரு தாவரப் பொருளென்
மூல மேதழைவு ஞாலமே. 4

தொடுக ரச்சிலை தொடப்பொ றாமலர்
சுருப்பு நாணிடுவ தைந்துகோ
லடுப டைத்தலைவ னார்வ சந்தமலை
தென்ற றேருருவ மருவமா
முடுகு கொற்றமத னொருவ னிப்புவன
முற்றும் வெற்றிகொள முடிவிலா
நெடும லர்க்கணருள் சிறித ளித்தனைகொ
ணீலி யேகரக பாலியே. 5

மாயன் வணங்கியுன் மால்வடி வங்கொள
வாடு மரன்றுயர் போதாதோ
தூய மதன்றொழ வாண்வடி வம்புணர்
தோகைகண் வண்டயி றேனேபோன்
மேய வழங்குமு ரூபம தென்சொல
மேலிது கண்டவர் வாழ்வாரோ
நீயதி ரஞ்சகி மோகன வஞ்சகி
நீசெய்வ தொன்றல மாதாவே. 6

மேகலை பொங்கம தாசல கும்பமெ
னாமுலை கண்டிடை சோராநீர்
மாகவ ளங்கெழு நாணிறை யம்புலி
வாண்முக மம்புவி லேடார்போ
தேகநெ டுங்கழை பாசமொ டங்குச
மேர்பெற வந்தருள் காபாலி
நீகம லந்திகழ் தாள்வரு டென்றர
னீர்மையின் விஞ்சிய கோமாதே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரமு தின்கடல் வேலி செழுந்தரு
வாய்மணி பம்பிய தீவூடே
பாரக டம்படர் கானி லருங்கொடை
பாய்மணி மண்டப வீடுடே
கோரசி வன்பர மேசனுன் மஞ்சமொர்
கூர்பரி யங்கமெ னாமேலே
சீரட ரும்பர ஞான முறுங்களி
தேவர ருந்துவர் பூமாதே. 8

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

மூலமணி பூரகத்தோ டிலிங்க மார்பு
முதுகளம் புருவநடு மொழிவ தாறு
ஞாலமுமென் புனலுமனற் பிழம்புங் காலும்
நாதமுறு பெருவெளியு மனமு மாக
மேலணுகிக் குளபதத்தைப் பின்னிட் டப்பான்
மென்கமலத் தாயிரந்தோட் டருண பீடத்
தாலவிடம் பருகியதன் மகிழ்ந ரோடு
மானந்த முறும்பொருளை யறிய லாமே. 9

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

தாளிணைக் கமல மூறித்
தருமமிழ் துடல மூழ்க
மீளவப் பதங்கள் யாவும்
விட்டுமுற் பழைய மூலம்
வாளர வென்ன வாகம்
வளைத்துயர் பணத்தி னோடு
நாளுமைக் கயற்கண் டுஞ்சு
ஞானவா னந்த மின்னே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

சிவகோண முற்பகர்வ தொருநாலு சத்திநெறி
செறிகோண மத்தொடொரு மருவுகோ
ணவகோண முட்படுவ தெழுமூ விரட்டியொரு
நவில்கோண முற்றதுவும் வலயமா
யிவரா நிரைத்ததள மிருநாலு மெட்டிணையு
மெழிலாய வட்டமொடு சதுரமா
யுவமான மற்றதனி தனிமூ வகைக்கணுமெ
னுமைபாத முற்றசிறு வரைகளே. 11

### கலிநிலைத்துறை

ஆதி சுந்தரி வடிவினை யயன்முதற் புலவோ
ரேது கண்டள விடுவது தமையிக ழிமையோர்
மாத ரிங்கிவண் மகிழ்நரோ டுறைகுவ மெனினோர்
பேதை கொங்கைகள் பெறுகுவ மெனமறு குவரால். 12

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

அறக்கிழவன் மனிதன்விர கில்லாக் கொச்சை
யழகிருந்த வூரிலிருந் தறியா னேனு
முறக்கருணை கொழிக்குமுன தமுத வாரி
யூடணுகி னவனையர மகளி ரெல்லா
நறைக்குழலுஞ் சரிந்திடவுத் தரீயஞ் சோர
நாணழிய வளைசிதற வுடுத்த வாடை
புறத்துவிழ மயலொடும்பின் றொடர்வ ரென்றாற்
பொற்கொடிநின் புதுமையெவர் புகழ வல்லார். 13

### எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பணைபார் புனற்கனலி வளிவான் மனத்திலறு
பதினாலொ ழித்ததுமு னடைவிலே
யிணைநா லொழித்ததிரு கதிரேற வுற்றதுமூ
விணைபோய தெட்டினொடு கதிர்கணா
லணையா நிரைத்ததுறு கதிர்நா லடுத்ததத
னளவாயி லக்கமறு வகையினா
லுணரா வுரைத்தகதிர் களின்மே லிருக்குமென
துமைபாத செக்கர்விரி கமலமே. 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்**

உனதுசரற் காலமதி யனைய மெய்யு
முடல்குழைத்த பிறைச்சடையுங் கரங்க ணான்கு
மனவரத முறுமபய வரத ஞான
வருட்பளிங்கு வடமொடுபுத் தகமு மாக
நினைகிலர்முன் வழுத்திலர்பின் வணங்கா ரெங்ங
னிறைத்தபசுந் தேனுமடு பாலுந் தூய
கனியுமென மதுரம்விளைந் தொழுகு பாடற்
கவிதைபொழி வதுகபிலைக் கடவுள் வாழ்வே. 15

**எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்**

வாரின்ப முலைமலை மடந்தைகவி நாவலர்
மனக்கமல வனம லரநீ
டேரின்ப விளவெயி றழைக்கும்ப்ர பைச்செய்ய
செவ்விநிற முணரு முரவோர்
தாரின்ப நறவொழுகு சுருளோதி யிருள்விரவு
தவளநிற வாணி கலைதேர்
பேரின்ப மதுரவலை யெறியமுத கவிதைகொடு
பேருலகை மகிழ்விப் பரே. 16

இந்துசிலை யைப்பிளந் துண்ணிறம் வகுத்தனைய
வெழில்வசனி யாதி மடவா
ரந்தவிணை நால்வர்புடை சூழமலை மங்கைதன
தருணவடி வுணர வறிவோர்
கொந்தவிழ விரிதவள மலர்மங்கை முககமல
கோலபரி மளக விதையாற்
செந்தமிழின் வடகலையின் முதுமொழிக் காவியத்
தெளிபாடல் செய்யு மவரே. 17

உனதுநிற மெனுமிளைய கதிரிரவி வெயின்முழுகு
முலகடைய வெனநினைகுவோர்
வினைகெழுமு கொலைமறலி யனையவிழி யுருவசிமுன்
விரவுமர மகளிர் விழைவோ
ரனவரத மெனதமுது பொழிகவியு முனதருளு
மெனதுடலு முயிரு முயிர்சூழ்
மனமுமதி லுணர்வுவரு களியுமென நினைவருக
மலையரைய னுதவு மயிலே. 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

ஆதி விந்துவை முகமென விணைமுலை
கீழி ரண்டதன் வடிவென வருகுதாழ்
கோத றுஞ்சுட ரெழவழ கொழுகுத்ரி
கோண மொன்றென வுனதெழி லிரதிதோய்
காத லன்கலை தமதிட நினைபவர்
காணுமங்கையர் கலைகொள லரியதோ
வோதி லிங்கிரு சுடர்முலை யனையவு
லோக மங்கையை மயல்செய்வர் கமலையே. 19

ஆட லம்பிகை யிமகர சிலைவடி
வாளு நெஞ்சினுள் வழிவுறு கிரணமே
லோடி யெங்கணு முடல்பெரு கமிழ்தென
வூடெ ழும்ப்ரபை தமதிட முணர்குவோர்
நாட வுங்கொடு விடமொரு கலுழனை
நாடும் வெங்கொலை யரவென முறியுமேன்
மூட ருஞ்சுரம் விழிபொழி யமுதினின்
மூழ்க வென்பொடு மழலுடன் குளிருமே. 20

ஆன மின்கொடி போலுமென் முண்டக
மாறின் மண்டல மூவகை யின்கணோர்
பானு வம்புலி தீயி னிறங்கிளர்
பான்மை கொண்டித ழாயிர கஞ்சநீள்
கானி லுன்களி ஞான முறுங்கலை
காழ்ம லங்களின் மூவகை பொன்றியே
போன சிந்தையின் மாயையொ ழிந்தவர்
போத மின்புறு மாதியொ டந்தமே. 2.1

பேரு றுங்கயி லாசன் மகன்பெறு
பேர னன்புறு பேர னெனுஞ்சொலால்
வார மன்பொடு பார்வை வழங்கென
வாய்தி றந்திட வோடி வழங்கினாய்
வேரி முண்டகன் மான்மகு டங்களின்
வீச ருமப்ரபை தீப முவந்ததாள்
சேரு நன்பெரு வாழ்வும் வழங்குவை
தேட ருஞ்சிவ மாய மதங்கியே. 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி சங்கரர் பாதியு டம்பினி
தாளு மம்பிகை பாதியும் விஞ்சுமோ
நீதி யன்றென நாயகர் பங்கையு
நீக வர்ந்தனை யாலவ ரெங்குளார்
சோதி செங்கதிர் மேனிநி றைந்தது
தூய கண்களு மூவகை கொங்கையோ
வீதி ரண்டுடல் கூனுமி ளம்பிறை
யேர்பொ ழிந்தது நீண்முடி யெங்குமே. 23

ஆதி முண்டகன் மால்சிவ னண்டர்ம
கேச னந்தச தாசிவ னைந்துபேர்
மேத குந்தொழில் போலவ னைந்தருள்
வீறு மங்கத னூறலு முண்டென
யாது மின்றியு மேனியொ டெங்கணு
மாயை தந்தது ஞானமி ரங்குமோர்
நீதி யுந்திரு வேபுரு வங்கொடு
நீசொ லிங்கித வேவல்பு ரிந்ததே. 24

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

மூவ ருக்குமு தற்பி றப்புநின்
முக்கு ணக்கட லென்றுமுன்
சேவ டிக்க ணிருப்பர் சென்னிரு
வித்த செங்கை பிரிக்கிலார்
பூவெடுத்தவர் சென்னி வைத்திடு
போத முற்றவ ரம்மைநின்
காவ லர்ப்பொதி தாளில் வைக்கவு
மூவர் சென்னி களிக்குமே. 25

வேத ரஞ்சகன் மால்பு ரந்தரன்
வேக சண்டகு பேரனோ
டாதி யெண்டிசை பாலர் பொன்றவு
மாதி யந்தமி லாததோர்
நாதர் பொன்றில ரேதுன் மங்கல
நாணுறுந் திற மாதலா
னீத ழைந்தது யோக மம்பிகை
நீலி யென்பது பாவமே. 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிவ துன்செப முத்திரை பாணியின்
முயல்வ தெங்கு நடப்பன கோயில்சூழ்
தொழில ருந்துவ முற்றுமு னாகுதி
துயில்வ ணங்கல் களிப்பன யாவுநீ
யொழிவ றுங்களி யென்செயல் யாவையு
முனது நன்செய் பரிச்செய லாகவே
யழிவ றும்பதம் வைத்தருள் பேரொளி
யனிவி ளைந்து களிப்பெழு நாதமே. 27

### கலிநிலைத்துறை

பிரம னிந்திரன் முற்பிற தேவர்க ளூணெலா
நரைபெ ருந்திரை யற்றநல் லாரமு தேகொலா
மொருவர் தங்கிலர் நின்சிவ னூண்விடம் வாழ்வன்மா
திருபெ ருங்குழை யிட்டபொன் னோலையின் வாசியே. 28

### எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

முதுமறைசொ லிளவனிதை யயனொடரி குலிசனுனை
முறைபணியு நெறியி னிடையே
பதறியுன தருகுவரு மரனையெதிர் கொளவுனது
பரிசனமு னடிவ ளமையா
லிதுபிரமன் மகுடமரி மகுடமிது குலிசன்முடி
யிதுகடின மிடறு மிருதாள்
சதியமர வமரவழி விலகிவர வரவெமது
கடவுளெனு மொழித ழைகவே. 29

பசுபதித னீதிகொண் டறுபத்து நாலுபல
கலைஞான முங்கரு ணையால்
வசிவற நெடும்புவன மாயையின் மயக்கியதன்
வழிவரு பெரும்ப யனெலா
மிசைபெற விளைத்ததும் பின்னுமுன தேவலா
லிணையிலுன தாக மமெலாம்
விசைபெற விளைத்தெவையு மிதுதர வளித்ததுவும்
விமலையுன துரிமை யலவோ. 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியதா குஞ்சிவஞ் சத்திமத னவனிபின்
பாதித்தன் மதிம தனவேள்
பெருகுவா னிந்திரன் பின்புபரை மதனன்மால்
பேசின்முக் கண்ட மடைவே
யுரியதா மந்தத்தின் மாயையும் முறையமைத்
துறுமெழுத் தடைய வுணர்வாற்
றெரியினா மத்தினொடு முனதுறுப் பாமென்று
செப்புநான் மறைக ளுமையே. 31

மோக போக விழைவி னாருன்
மூல வித்தை தன்னின்முன்
னாக மாரன் யோனி பொ்ன்ன
ணங்க மைதது நெய்யினால்
யோக மார்சி வத்த ழற்கு
ளோம முற்று விமலையே
த்யாக மாம ணிக்கொ டக்க
வலய முட்செ விப்பரே. 32

இருசுடர் முலைத்துணைச் சிவன்வடிவு நீயதனை
யானுநவ மாக நினைவே
னுருவுளிறை தன்னிலள வொத்தபர மானந்த
முடையபர னொடுப ரையுமாய்
மருவுமினி தாமுங்கள் கூட்டமது சேடமு
மறுத்ததனை யுடைய துவுமா
யருகிலிரு வர்க்குமொரு பொதுவாகி நிற்குங்கொ
லழிவற்ற ஞான முதலே. 33

மனமுநீ வெளியுநீ வளியுநீ கனலுநீ
மறிபுனலு நீபு வியுநீ
நினையினீ பரமற வளர்ந்தொளி பரந்துவிடி
னீயன்றி யொன்று முளதோ
வுனதுமா ஞானவா னந்தவுரு வைப்புவன
வுருவென வகுத்த ருளவோ
வனையுமாய் மகவுமா மாறுபோ னீசத்தி
யருணவடி வாய துமையே. 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுமுன தாக்கினைத் திகிரிக்கு ளூட்பட்
டருக்கன்மதி யனைய வடிவாய்ப்
பருவமுதிர் பரசின் மயத்தொடுறு பான்மையாம்
பரமசிவ னைப்ப ணிகுவா
மொருமொழுதி லிப்பரம சிவனையெழு கதிர்மதிய
வொளிகடந் தொளிரு மொருபாற்
பெருகுபர மானந்த விழைவொளி நினைப்பதுகொல்
பெறுமுத்தி சத்தி யொளியே. 35

இறைவிநின் விசுத்தித் தலத்திடை பளிங்குநிற
வெழிலொடுல கருடந் தையா
யுறைமொரு சிவனையு மவன்போலு மாரம்ப
முடையவுனை யும்ப ணிகுவா
நிறைமதி யொளிக்கொத்த நெறியேகு முமதொளியி
னிலவுண்டு பசிக ளைவதோர்
முறைபெறு சகோரமென வுலகுபா தகவிருண்
முடித்தக் களித்து றையுமே. 36

முன்னைத் தபோதனர்த மிதயமர னதவாவி
முதுஞான முளரி நறவார்ந்
தன்னத்தின் வடமொழிப் பெயர்பெற்று பொழிமயிலு
மறுமூன்று விஞ்சை விரிவாற்
பன்னப்பொ திந்ததீ வினைநீரி னற்குணப்
பால்பிரிந் துண்டு களியா
மன்னப்ப டுஞ்சிறைப் புள்ளிணையை நாடொறும்
வழுத்துது மலர்க்க மலையே. 37

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

விரித்தவிருள் விழுங்குசத்தி மின்னொடும்பன்
மணியிந்த்ர வில்லி னோடுந்
தரித்தமறை பரவுசுவ தபனகதி
ரெறிப்பவதிற் றழன்று தீயிற்
புரித்துலகன் குளிரவொளி தழைத்தொளிரப்
பொழியமுத தாரை மாரி
பரித்தமணி பூரகத்துன் பச்சைமுகில்
பணிவனருள் பழுத்த கொம்பே. 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறு சுவாதிட் டான
நின்சிவ வனலு நீயு
மிலகிய தன்மை நெஞ்சத்
திறைஞ்சுவ முரைக்க மாட்டே
முலகமப் பார்வை செந்தீக்
குருகினின் கருணை பொங்கி
யலையெறி யமுதப் பார்வை
யளித்தினி தருளு மம்மே. 39

**எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்**

நீநந்து மூலவா தாரத்தி லானந்த
நிர்த்தமிடு மிறைவி நின்னோ
டானந்த தாண்டவம் விளைத்துநவ வடிவுபெறு
மாதிசிவ னைப்பர வுவாம்
வானந்தொ டுத்துலக மண்டயப் படைத்திடுமிவ்
வகையின புணர்ச்சி யலவோ
ஞானங்கொ டனைதந்தை யெனவுலகு தெளிவுற
நடத்துவது ஞான வொளியே. 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌந்தரிய லகரி

### எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

அந்தர மணித்தபனர் பல மணியின் வடிவெடுத்
தமருமுன தம்பொன் முடிமே
லிந்துகலை நவமணியி னொழுகுபல நிறமடைந்
திலகுமதி சயவ டிவினாற்
சந்த்ரகலை நன்றுநன் றென்பர்சில ரன்றன்று
சந்த்ரகலை யிந்த நிறமோ
விந்த்ரசிலை யிந்த்ரசிலை யென்பர்சில ராதலால்
யாதென வழுத்த வுமையே. 1

அலர்ந்தகரு நெய்தலங் காடெனக் கடைகுழன்
றறநெய்த் திருண்டு செறிவோ
டிலங்குறு மியற்கைமண மெண்டிசை யளப்பவதி
லிதழ்மூழ்கு நறைவி ழைவினாற்
பொலன்கொண்முடி யாகண்ட லேசர்பொற் றுணர்விரி
பொதும்பர்மது மலர்ப டிவதோர்
கலம்பளி பாந்தவுன தோதியென் மனத்திருட்
செறிவுதெற வருள்க மலையே. 2

மோதிய வெங்கதிர் மீளவெ ருண்டிருண்
மூடவொ துங்கிய வாறேயோ
சோதிமு கங்கவி னேறி வழிந்தன
சோர விடுங்கவர் காலேயோ
வோதி பிணைந்துபின் வீழ வகிர்ந்தத
னூடெழு தும்ப்ரபை யாதேயோ
கோதறு சிந்துர ரேகை வளம்பிறர்
கூறுவ தன்றிது மாதாவே. 3

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

கூரெயிற்றி கைவிதழுங் கொண்கர்விழி வரிவண்டுங்
குழற்படிந்த மதுகரத்தின் குழாமுங் கூடிப்
பேரியற்கை மணம்பொதிந்து புன்மூரன் முகையவிழப்
பிறழுமுன தருணமுக கமல மென்றா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோரியற்கை வாடுமிதழ் பொறிவண்டே படிவதுமற்
றோரியற்கை செயற்கைமணம் போது செய்யு
நீரியற்கை மலர்க்கமல மிதற்குடைந்து பங்கமுற
நீதியென்பதி யாரறிவார் நிகரின் மாதே. 4

### கலிவிருத்தம்

கோதை நீண்முடி கொண்டொளிர் திங்கள்சேர்
பாதி வாணுத லென்று படிந்ததோ
வீது கூடி யிரண்டு நிறைந்ததோ
சீத பூரணத் திங்கள் சிறந்ததே. 5

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

கருவிழிச் சுரும்பு நாணுன்
கண்மல ரம்பு கன்னற்
புருவவி னடுவொ ழித்தல்
போன்றது வளைத்துப் போர்மேல்
வருமதன் பிடித்த கைக்குண்
மறைந்தது போலு மென்றாற்
றிருமகள் பரவு மம்மே
சிலையிது புருவ மன்றே. 6

### கொச்சகக் கலிப்பா

ஒருமலர்க்க ணிரவிவலத் துதித்தருளு நண்பகலு
மொருமலர்க்கண் மதியமிடத் துதித்தருளும் பேரிரவும்
திருநுதற்கட் பொற்கமலச் செந்நிறத்தீ விளைத்தருளும்
விரவுசெக்கர் மாலையுமுன் விழைவகலா
விழுப்பொருளே. 7

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

கோலநகர் விசாலையாய் நிரந்தரகல் யாணியாய்க்
குவலயத்தா லயோத்தியாய்க் குலமதுரை தானாய்ச்
சாலவொளிர் போகவதி யாயமுத தாரையாய்த்
தண்ணளியா லவந்தியாய்ச் சகவிசயை யெனலாய்
நீலவிழி புடைபரந்து நெடுநகரப் பெயர்கவர்ந்து
நீண்டுசேந் தரிபரந்து நிகரொழிக்கு மென்றா
லாலவிட மழுதெனக்கொண் டருந்தியவுன் மந்தர்புர
மதனிலொரு புறங்கவர்த லதிசயமோ தாயே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

அரனிடத்திற் பேரின்ப மருளுபவ னல்லார்பா
லருவருக்கு மவன்முடிமே லணிநதியைச் சீறும்
பரவுநுதல் விழியழன்முன் பார்த்திலபோ லதிசயிக்கும்
பணியாய பணிவெகுளப் பயந்தனபோ
லொடுங்கும்
விரைமுளரிப் பகைதடிந்து வீரரதம் படைக்கும்
வினவுதுணைச் சேடியர்க்கு விருத்துநகை விளைக்கு
மிரவுபக லடிபரவு மெளியனைக்கண் டருள்புரியு
மித்தனையோ படித்தனவுன் னிணைவிழிக டாயே. 9

### கொச்சகக் கலிப்பா

இருசெவியுண் பலகவிதை யிணரொழுகு
பசுந்தேனிற்
பெருகுநவ ரசமருந்திப் பிறழ்ந்திடுமுன்
பிணைவிழியாங்
கருநிறவண் டிணைகளிப்பக் கண்டுபொறா
தென்னேயோ
வரிநுதற்க ணளிசிவந்த வளம்பாராய்
மலர்க்கொடியே. 10

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

இகல்பொரக் குழையை விட்டு
மிமைமயி ரொழுங்கிற் றூவ
ணிகரறு நித்தர் யோக
நீக்கிவெம் போக நல்குஞ்
சிகரவெற் பரசன் றொல்லைத்
திருமர பென்னுந் தெய்வ
மகுடமா மணிநின் கண்கள்
வயமதன் வாளி தானே. 11

வரிவிழிச் செம்மை வெண்மை
வனப்புறு கருமை மூன்று
மெரிதெறு கற்ப காலத்
திறந்தமுப் பொருளுந் தோன்றுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவெனக் குணங்களு் மூன்றின்
காரண மென்னப் பெற்றா
லருமறைப் பொருளே யுன்ற
னருளலா துலக முண்டோ. 12

அம்மைநின் கருணை பொங்கி
யலைநெறி நயன வேலை
மும்மணி கெழுமுன் றொண்டர்
மும்மலங் களைய மூழ்கச்
செம்மைதன் சோணை யாறு
தெளிகங்கை யமுனை மூன்றுந்
தம்மயத் தொடும்வந் துற்ற
தன்மையி தென்பர் மிக்கோர். 13

இடம்படர் கொடியே நின்க
ணிருசெவிக் குரைப்ப தேதென்
றடர்தெழு கயலின் கண்க
னடைப்பில பயப்பட் டம்மா
கடும்பகற் கமல வீடுங்
கங்குல்வாய் நெய்தல் வீடு
மடைந்தனள் கமலை யொன்றொன்
றடைப்பன கண்டு கண்டாய். 14

இணைவிழி யிமையா நாட்ட
மெய்திய தலரத் தோன்றும்
பணைநெடும் புவன மிந்தப்
பார்வைசற் றிமைக்கு மாயிற்
றுணையிழந் தழிவ தெண்ணித்
துணிந்தநின் கருணை யென்றாற்
கணையினுங் கொடிய தென்னக்
கடவதோ கடவுண் மாதே. 15

நெடியகட் கரிய நெய்த
னிறையருட் சலதி யெய்தாக்
கொடியனேன் பிறவித் துன்பக்
குரைகடல் கடந்து மூழ்க
விடினதிற் குறைவ துண்டோ
மெய்த்தவர்க் கொழிந்து றாதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிநகர் நிலவு காட்டிற்
காயுமே கருணை வாழ்வே. 16

கருங்குழ னுதற்கட் பின்னற்
கவின்கடைக் கபோலந் தாழ்ந்த
வருங்குழை கடந்த கண்ணி
னயிற்கடை யனங்க சாப
நெருங்குறத் தொடுத்த வேவி
னிமிர்தலை யேய்க்கு மென்றான்
மருங்கில்பொற் றிருவே யாருன்
மதர்விழி பரவ வல்லார். 17

தோகைநின் கபோலஞ் சார்ந்த
துணைநிழற் சுவடுந் தோடு
மாகவிவ் வுருளை நான்கி
னானன விரதம் வாய்த்தோ
வேகநன் புடவி வட்டத்
திருசுட ராழித் திண்டேர்ப்
பாகரைப் பொருது மாரன்
பழம்பகை தீரப் பெற்றான். 18

### எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

வேரி நாண்ம லர்க்குள் வாணி
வினையில் பாட லமுதெலாஞ்
சேர மாம டந்தை நின்செ
விக்கு ணாவ ருத்தவே
யார மாலை முடிய சைப்ப
வாடி யெற்று குண்டலம்
பூரை பூரை யென்ற சொற்பொ
லிந்த வோசை பெற்றதே. 19

இமய மன்னன் மரபில் வெற்றி
யிடுப தாகை யனையவென்
னமலை யுன்றன் வதன துண்ட
வணிசி றந்த மணியையோ
விமல மன்னு கவிஞர் முத்தை
வெற்பில் வல்லி யலர்வதோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமல மன்னு குமிழ ளித்தல்
கண்ட தல்ல வென்பதே. 20

இறைவி நின்னி தழ்ச்சி வப்பி
யற்கை யித்தொ டிணைசொனா
னிறைகொள் கொவ்வை யிந்நி றத்தி
னீழல் பெற்று விம்பமா
யுறைதல் கொண்டு நாணு மற்றொ
ருவமை யில்லை யுண்டெனா
வறைக டற்று கிர்ப்ப ழுக்கி
னன்று சொல்வ னளியனே. 21

அன்பு முற்றிவடி வாய வம்மைநின
தான னத்துமதி நகைநிலா
நன்பு றத்தமுத மொழுகு மாமதுர
நறைகொள் சீதள மயின்றவா
யின்பு ளிப்பலது வட்டு றாதினியெ
னத்தெ விட்டியச கோரமவான்
முன்ப ரப்புநில வுண்ணு மாலுனது
மூர லுக்குநிகர் மூரலே. 22

வின்ன நாவுரை யெழுந்தொ றுந்தலைவர்
வீரமும் புகழு மழகுமே
தெள்ளு பாடன்ம துரம்ப ழுத்தனைய
செய்ய கேழொளி வனப்பினா
லள்ளன் மாமலரை விட்டு வாணியுன
தருண நாவுறைய வெள்ளையா
யுள்ள மேனியுமெ னம்மை நீயருள
வுன்னி றம்பெறுவ தொத்ததே. 23

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

அன்றையருட் சிவசேடஞ் சண்டனுண
வதுபொறா தாவ நீரக்
கற்றைமலர்க் குழலுமைநின் கருப்பூர
சகலமதிச் சகலம் போல
வுற்றதிருத் தம்பலத்தி னொருசகல
மேனுமினி துண்டு வாழப்
பெற்றிலரே லமரரெனும் பெயர்பெறவு
மிருந்தனரோ பிழைப்பில் விண்ணோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுத்தமலர்க் கொடிகருணை பழுத்தனைய
கொம்பேநின் பரமர் பொற்றோள்
விசைத்தொழிலைக் கலைவாணி தனிற்பாடிப்
பாடியவண் மெலிவ தல்லா
லசைத்திலர்பொன் முடியுனது மதுரமொழிக்
கசைத்தனரென் றதற்கு நாணி
யிசைத்தொழிலைக் கைவிட்டா ளெழில்வீணை
யுறையிலிட்டா ளேது செய்வாள். 25

மகவாசை யாலிமய மலையரையன்
மலர்க்கைதொட மனத்து ளன்பு
புகவாசை யாலிறைவன் கரத்தேந்தப்
பொலிவுறுநின் சிபுகம் போற்றின்
முகவாசி யரன்படிமக் கலம்பார்க்க
விட்டமுகிழ்க் காம்பு போலுஞ்
சகவாழ்வை யிகழ்ந்திதயந் தனித்தவர்தந்
தவக்கொழுந்து தழைத்த கொம்பே. 26

வயங்குறுநின் றரளவட மான்மதச்சே
றளையமது மத்தர் மேனி
முயங்குதொறு மெழுபுளக முட்பொதிந்த
பசுங்கழுத்து முகமுங் கண்டா
லியங்குபுனற் கருஞ்சேற்றி னெழும்வலய
முள்ளரைத்தா ளீன்ற கஞ்சம்
பயம்புகுதல் கடனன்றோ மாற்றிலாப்
பசுமையொலி பழுத்த பொன்னே. 27

செந்திருநின் றிருமணத்திற் சேர்ந்தசர
மூன்றமுந்தித் திகழ்வ தென்கோ
மந்தரமத் திமதார மூவகைநா
தமுமெல்லை வகுத்த தென்கோ
கொந்திரையுந் துணர்ப்பூகங் கொழுத்தபசுங்
கழுத்தின்வரைக் குறிகண் மூன்று
மிந்திரையுஞ் சயமகளுங் கலைமாதும்
புகழ்வதல்லால் யானென் சொல்வேன். 28

முன்னமொரு தலைசினவுன் முதல்வரா
விழந்தவயன் முகங்க ணான்கா

லுன்னழகுக் கேற்றபசுங் கழைமணித்தோ
ளொருநான்கும் வழுத்து கின்றா
ளின்னமொரு சீற்றமெழுந் தரிதலையை
யெனினுமிவ டடமென் றோளைச்
சொன்னதலைக் கழிவிலையென் றதிற்றுணிந்த
துணிவன்றோ சுருதி வாழ்வே. 29

திருமகடன் சீறடியாற் றுவண்டுமதிற்
செம்பஞ்சாற் செங்கேழ் பெற்று
மருமுளரி யெழில்படைத்த திதுவோநம்
மியற்கையெதிர் மலாவ தென்றே
யிருகரமு நகைத்தநகை யொளியையுன
தெழிலுகிரென் றிறைஞ்சி நாளு
மருமறைகள் வழுத்துகின்ற ததிசயமோ
பேதைமையோ வன்போ வம்மே. 30

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

நித்தரொரு பக்கமயி னிற்களிறுன் வட்டமுலை
நிற்குமெழி லிற்ற னதுசீர்
மத்தகமெ னத்தனில யிர்த்தொருக ரத்தைமுடி
வைத்துறவு றத்த டவுமான்
முத்தமுலை செப்புவதெ னக்களிறு யிற்குமரன்
முற்புலவர் துய்த்த வமுதா
லத்தலைமை பெற்றனர திற்றிவலை கிட்டினுமெ
னற்பவுயிர் முத்தி பெறுமே. 31

முக்கணிறை வற்குமயன் முற்றவெழின் முற்றுமுலை
முட்டியசு ரப்பொ ழுகுபான்
மக்களிரு வர்க்கருள வக்களிறு மிக்குகனு
மட்டிளமை முற்று கிலரா
லக்கடலு தித்தவமு தத்தினையெ டுத்ததில
டைத்திருகண் முத்தி ரையின்வாழ்
செக்கர்மணி மெய்க்கலச மத்தனையுன் வட்டமுலை
செப்பலம லைப்பு தல்வியே. 32

கொற்ற வாரண முகம கன்பொரு
குஞ்ச ரானன நிருதனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிற்ற கோடுதி ரார மாலிகை
யிதழ்ம ணிப்ரபை தழையவே
பெற்ற பாகபி னாக பாணிப்ர
தாப மோடணை புகமெழனா
வுற்ற தாயினு முனது பொற்றன
முரைபடா நிறை செல்வியே. 33

தருண மங்கலை யுனது சிந்தை
தழைந்த பாலமு தூறினா
லருண கொங்கையி லதுபெ ருங்கவி
யலைநெ டுங்கட லாகுமோ
வருண நள்குறு கவுணி யன்சிறு
மதலை யம்புயல் பருகியே
பொருண யம்பெரு கவிதை யென்றொரு
புனித மாரி பொழிந்ததே. 34

மூல மேறின் மகிழ்நர் கோப
முதுக னற்பெர் றாதுவேன்
கோல நாபி மடுவி னிற்கு
ளிப்ப வந்த வெம்மையான்
மேல வாவு தூம ரேகை
வேரெ ழுங்கொ ழுந்தையோ
நீல ரோம ரேகை யென்று
நீணி லங்கு றிப்பதே. 35

முளரி மாதுன் முலையி னோடு
முலைநெ ருக்க விடையில்வான்
வெளியி னீல மோடி யுந்தி
வியனமு ழைக்கு ணுழைய்வே
தெளியு நீரில் யமுனை நீவு
சிறுத ரங்க மனையபே
ரொளியின் ஞால மருளு மீது
ரோம ரேகை யென்னவே. 36

தூய கங்கை நிலைப டைத்த
சுழித னத்து முகையினா
லாய துங்க ரோம வல்லி
யால வாலம் விரகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய ரும்பு மோம குண்ட
மிறைவர் செங்க ணிடைவிடா
மேய கஞ்ச மடுவு னுந்தி
வேறு ரைத்தென் விமலையே. 37

தரைம டந்தை பரவு மங்கை
தனத டம்பொ றாதுநின்
றிரும ருங்கு லறவ ளைந்து
சிறுகி மூவி ரேகையாய்
வரைபி ளந்தொ ரிடிக ரைக்கு
வாழ்ம ரத்தொ டொத்ததா
லுரைக டந்து விடுமுன் மற்றொ
ருறுதி தேட வெண்ணுமே. 38

வம்பைத் தொலைத்துதறி யிறுகிக் கனத்திளகி
வருபுடை நெருக்கி வளர்மாக்
கும்பக் கடாக்களிற் றினையனைய வுனதுமுலை
கொடிதுகொடி தென்று வெருவா
வம்பொற் றனிக்கமல விறைபொறா திடையென
வழுத்துபூ ணெனமு னிவரோ
டும்பர்க்கு முளமருள வொளிகெழுமி ரேகைமூன்
றுலகமோ தெளிவ துமையே. 39

கொத்துவிரி யலர்சோலை யிமயவெற் பரசன்மெய்க்
குலமலைப் பக்க மெனவா
மூத்தனை விரிந்தவக லத்தொடு பெரும்பார
மடையவுனி தம்ப விடையே
யெத்தனை பெரும்புவன மிற்றாலு மழிவிலை
யிதற்கெனச் சேம நிதிபோல்
வைத்தது பரந்திடங் கொண்டுலகை யிடமற
வருத்தவேர் மதுர வமுதே. 40

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பொற்கதலி புறங்காட்டுங் குறங்கால் வேழப்
புழைக்கைதடிந் துஞ்சிவனைப் பணிந்து தேய்ந்த
வற்கடின முழந்தாளிற் கும்பஞ் சாய்த்து
மணிமருப்பைக் கனதனத்தால் வளைத்து மம்மே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கடின கோபமம ராமை கண்டோ
    நித்தரதன் றொக்குரித்த துடுத்த நேயம்
பிற்கருதி யிவளுறுப்போ டுவமை வீறு
    பெற்றதிது வென்னுமிந்தப் பெருமை கண்டோ 41

உம்பர்தொழுந் தொறுமகுடச் சாணை தீட்டி
    யொளிருநக நுனைக்கணையோ ரைந்துமைந்துஞ்
செம்பொன்மணிக் கணைக்காலா மிணைப்பொற
    சேர்த்தன்றோ சிவன்பகைவே டீரு கின்றா
னம்பொருபத் தளித்தனையின் றன்று போல
    வைங்கணைதொட் டழியினது பழுதென் றன்றே
வம்பமருங் கனதனப்பொற் றிருவே யுன்றன்
    மனவிரகின் செயலொருவர் மதிப்ப தன்றே.42

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

உளமகிழ் மகிழ்நர் சென்னி
    யுறுநதி விளக்க மாயோன்
கிளர்முடிப் பதும ராகக்
    கேழொளி செம்பஞ் சேய்க்கு
முளரிநின் பதங்கள் வேத
    முடியுறப் பதித்த தவ்வா
றெளியவென் றலைமேல் வைக்க
    விரங்குவ தென்று தாயே. 43

அரியமென் காவி னீபுக்
    கசோகினிற் பாத மேற்ற
வுரியநம் பதத்தை யீதோ
    வுறுமெனப் பொறாது பெம்மா
னெரியுற மரத்தை நோக்கு
    மியல்பினைக் கேட்டும் யானுன்
வரிமலர்ப் பாதம் போற்றும்
    வளமினி தினிது மாதே 44

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

மறும டந்தையை மொழிய நின்பத
    மலர்வெ குண்டர னுதலிலோர்
முறைய றைந்திட விழியி லும்பட
    முதுப ழம்பகை கருதிவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுப ழும்பகை கருதிவே
னிறையை வென்றனன் விழியை வென்றன
னெனமு ழங்கிய குரலெனா
தறைசி லம்பெழு மரவ மென்பதெ
னருண மங்கல கமலையே. 45

இமநெ டுங்கிரி யுலவி புங்கவி
னெழுதி ரந்தர மலருமே
லமர்பெ ருந்திரு வருளு நின்பத
வருண முண்டக மனையதோர்
கமல மென்பது பனியில் வெந்திதழ்
கரிய கங்குலின் முகுளமாய்
விமலை யந்திரு மனையெ னும்பெயர்
விளைவ தொன்றல முதல்வியே. 46

பஞ்ச முத்தினும் வாடு நின்பத
பங்க யத்திணை யொப்பெனா
விஞ்ஞை கற்றவர் வன்பு றக்கம
டத்தை வீணில்வி யப்பரா
மஞ்ச னப்புய றங்கை நின்வர
ரம்மி மீதிலும் வைப்பராம்
வஞ்ச கக்கொடு நெஞ்ச ரத்தனை
வல்ல ரல்லர்நி னைக்கினே. 47

அற்ற வர்க்கருள் செய்யு மம்மைகி
னற்பு தப்பத மம்பொனா
டுற்ற வர்க்கருள் பொற்ற ருத்தர
வூட றிந்தில மென்னவே
முற்று பொற்பர மாதர் கைத்தல
முண்ட கங்குவி வெண்ணிலா
நற்றி றத்தொடு நாடி நாடி
நகைக்க வாளுகி ரென்பரே. 48

செய்ய பஞ்சு குழம்பெ ழும்புனல்
செல்வி நின்பத நல்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துய்ய பங்கய வாணி தம்பல
வூற றுய்த்தசொல் வாணர்போன்
மைய னெஞ்சுறு மூம ருங்கவி
வாண ராகிம லிந்ததான்
மெய்ய டங்கலு மூழ்கு முன்கவி
வீறு நாவில டங்குமோ. 49

### கலிவிருத்தம்

நாடியுன தற்புத நடைத்தொழில் படிக்கும்
பேடைமட வன்னமொடு பேதநடை கூறு
மாடக மணிப்பரி புரத்தரவ மம்மே
யேடவிழ் மலர்ப்பத மிரைக்குமறை போலும். 50

தோகைநின் மலர்ப்பத சுடர்க்குடையும் வெய்யோ
னாகமணி செய்வதொர்க ணாடிவடி வாகு
மோகமதி தானுமது வாகியுன் முகஞ்சேர்
கோகனத மென்னிதய கோகனத மென்னும். 51

அன்பின ரிரப்பதி னிரட்டியருள் செய்யு
நின்பத தருத்துணர் நிறைந்தொளிர்வ னப்பா
மின்பமுறு தேன்முழுகு மென்னிதய வண்டின்
றன்புளக மெய்க்களி தழைக்கவரு டாயே. 52

ஓதியிருண் மூரலொளி யுற்றகுழை வாக
மோதுமுலை யற்பவிடை முற்றுமுனி தம்ப
மாதிபர னின்னரு டிரண்டருண மாகு
மாதுநின் மலர்ப்பத மனத்தெழுதி வைத்தேன். 53

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

தூயமதி மரகதச்செப் பொளிர்கலையுங்
களங்கமுநேர் சொல்லுங் காலைக்
காயுமதி தவளகருப் பூரசக
லத்தொடுகத் தூரி போலு
நீயருந்த வருந்தவவை குறைதொறுமவ்
விரண்டுமய னிறைத்தல் போலுந்
தேயுமது வளருமது திங்களொளி
தோவுனது செல்வ மம்மே. 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கலிநிலைத்துறை

தேவியுனில்லஞ் சிவனுறை யந்தப் புரமானால்
யாவ ருனைக்கண் டெய்துவ ரிமையோர் முதலானோ
ராவல்கொ டெய்த்துன் வாயிலி லணிமா திகளாலே
மேவிய சித்திப் பேறொடு மீள்வா ரானாரே. 55

மூவர்ம கேசன் முடிகொளு மஞ்சத் தெழிலாயு
மேவிய படிகத் தனதொளி வெளிசூழ் திரையாயு
மோவறு செங்கேழ் விம்பம தின்பத் துருவாயும்
பாவைநி னகலா விறையொடு நின்னைப்
பணிவாமே. 56

### கலிவிருத்தம்

கலைமகளும் பொதுமடந்தை கமலையுமற் றவளே
மலைமகணீ கற்புடைய வனிதையெனப் பகருங்
குலமறைக ளெதிர்கொடுநின் குரவினையு மணையா
முலைகுழையப் புணர்வதுநின் முதல்வரல
திலையால் 57

வேதியர்க ளயனாவில் விஞ்சைமக ளென்றுஞ்
சீதரன்றன் மணிமார்பிற் செழுங்கமலை யென்று
நாதரிடத் தரிவையென்று நாட்டுவரெண் ணடங்கா
வாதிபரன் மூலபரை யாமனையுன் மயக்கால். 58

### கொச்சகக் கலிப்பா

அம்மேநின் மெய்ப்பிரிவா மணிமாதி தொழுமழியா
விம்மேனி தம்மேனி யெனத்தெளிந்து பாவிப்பார்
செம்மேனி யரன்வாழ்வுஞ் சிதைவதெனப்
புறக்கணித்து
வெம்மேனி யூழியனற் றீபமிட விளங்குவார். 59

தாமாக உடைநினைவோர் தவமிறுகத் தனமிறுகி
மாமோகப் புன்முறுவன் மனங்கவரக் கடைவிழியாற்
காமாதி பலருதிப்பக் கடம்பலர்க்கே மூறச்சிவனீ
யாமாமென் றயிர்ப்பமய லளிப்பரா
மரும்பொருளே. 60

சுந்தரிநின் றொண்டர்தமைத் தோய்வதற்கு நாமகளு
மிந்திரையு மலரயன்மா லிடருழப்ப விரதியின்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணந்தமில்பே ரழுகொடுகற் பழித்துநெடு நாள்கழிச்
சிந்தையிறு பாசம்போய்ச் சிவமயத்தைச்
சேர்குவரால். 61

சேமநிதி யேயமுதே தேனேநற் குணக்கடலே
யாமளையே யன்பர்மனத் திருந்துமுரைக் கடங்காத
கோமளமே யம்மேநின் கோகனதத் தாள்வழுத்து
மாமறைபோ லென்பாடல் வண்டமிழுங்
கொள்வாயால். 62

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

ஆதவனுக் கவன்கிரணத் தங்கியைக்கொண்
டாலாத்தி சுழற்ற லென்கோ
சீதமதிக் கவனிலவி னொழுகுசிலைப்
புனல்கொடுப சரிப்ப தென்கோ
மோதியமைக் கடல்வேந்தை யவன்புனலான்
முழுக்காட்டு முறைமை யென்கோ
நீதருசொற் கவிகொடுனைப் பாடியுன
தருள்பெறுமென் னீதி யம்மே. 63

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

வேத நுண்பொரு ளாதி சுந்தரி
வீற டங்கலு மாயமே
யீத றிந்து விடாசொ லுங்கவி
ராஜ பண்டிதன் வீரையா
னாத ரஞ்சகி தாள்பெ றுந்திரு
நாம மொன்பது நூறுமே
யோதி னன்பல போக முஞ்சிவ
லோகமும்பெறு வார்களே. 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை மாங்காடு
**அருள்மிகு காமாட்சி அம்மன்**

# நாமாவளி

அம்மன் சத்தியநாதன் பாடியது

| | |
|---|---|
| அன்பின் உருவே | காமாட்சி |
| ஆற்றல் தருவாய் | காமாட்சி |
| அகிலம் ஆள்வாய் | காமாட்சி |
| ஆம்ரா ரண்யே | காமாட்சி |
| அச்சம் களைவாய் | காமாட்சி |
| ஆசை அறுப்பாய் | காமாட்சி |
| அபயம் அளிப்பாய் | காமாட்சி |
| ஆவன செய்வாய் | காமாட்சி |
| அக்னியின் நடுவே | காமாட்சி |
| ஆறுதல் தருவாய் | காமாட்சி |
| இன்னல் தீர்ப்பாய் | காமாட்சி |
| ஈசனின் துணையே | காமாட்சி |
| இன்முக அழகே | காமாட்சி |
| ஈகையை வளர்ப்பாய் | காமாட்சி |
| இல்லறம் காப்பாய் | காமாட்சி |
| ஈண்டென் துணையே | காமாட்சி |
| உறுதுணை நீயே | காமாட்சி |
| ஊறுகள் களைவாய் | காமாட்சி |
| உலகம் நீயே | காமாட்சி |
| ஊசியின் முனையில் | காமாட்சி |
| உன்னடி தொழுதேன் | காமாட்சி |
| ஊழ்வினை அறுப்பாய் | காமாட்சி |
| எலுமிச்சைப் பிரியளே | காமாட்சி |
| ஏற்றம் தருவாய் | காமாட்சி |
| எம்மைக் காக்கும் | காமாட்சி |
| எதிலும் விளங்கும் | காமாட்சி |
| ஐயங்குண்டத் தீயிலே | காமாட்சி |
| ஐயங்கள் தீர்க்கும் | காமாட்சி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் அறியேன் காமாட்சி
ஓடியே வந்தேன் காமாட்சி
ஒழுக்கம் தருவாய் காமாட்சி
ஓங்கும் புகழே காமாட்சி

ஔடதம் நீயே காமாட்சி
அஃதே அருள்வாய் காமாட்சி
கடைக்கண் அருளால் காமாட்சி
காக்கும் அருளே காமாட்சி

கருணை மழையே காமாட்சி
காலம் வென்ற காமாட்சி
கலங்கும் எனக்குக் காமாட்சி
கலங்கரை விளக்கே காமாட்சி

கதறும் எனக்குக் காமாட்சி
காவல் நீயே காமாட்சி
கற்பகத் தருவே காமாட்சி
காக்கும் தெய்வம் காமாட்சி

கரும்பே தேனே காமாட்சி
கிளியுடை யாளே காமாட்சி
கீர்த்தியைத் தருவாய் காமாட்சி
கூரிய மதியே காமாட்சி

குருமணி போற்றும் காமாட்சி
குவலயம் ஏற்றும் காமாட்சி
குன்றின் விளக்கே காமாட்சி
குமரனின் தாயே காமாட்சி

கெஞ்சும் எனக்குக் காமாட்சி
கேண்மை தருவாய் காமாட்சி
கொஞ்சும் தமிழே காமாட்சி
கோயில் விளக்கே காமாட்சி

சங்கடம் தீர்ப்பாய் காமாட்சி
சாதிகள் ஒழிப்பாய் காமாட்சி
சங்கரர் துதிக்கும் காமாட்சி
சாத்திரம் போற்றும் காமாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தன மணமே காமாட்சி
சாபம் களைவாய் காமாட்சி
சிறியோன் என்னைக் காமாட்சி
சீருடன் காப்பாய் காமாட்சி

சிற்றிடை யாளே காமாட்சி
சீலத் திருவே காமாட்சி
சுந்தர முகமே காமாட்சி
சூரிய ஒளியே காமாட்சி

சொந்தம் நீயே காமாட்சி
சோதனை தீர்ப்பாய் காமாட்சி
தவிக்கும் என்னைக் காமாட்சி
தாயே ஏற்பாய் காமாட்சி

தினமும் துயரம் காமாட்சி
தீர்ப்பாய் நீயே காமாட்சி
துவளும் மனதைக் காமாட்சி
தூக்கியே காப்பாய் காமாட்சி

துன்பம் அறுப்பாய் காமாட்சி
தூண்டா விளக்கே காமாட்சி
தொட்டில் கட்டுவோம் காமாட்சி
தோன்றுவாய் எதிரில் காமாட்சி

நந்தா விளக்கே காமாட்சி
நாடினோம் உன்னைக் காமாட்சி
நிழலைப் போலே காமாட்சி
நீங்கா திருப்பாய் காமாட்சி

நெஞ்சில் நிறைவாய் காமாட்சி
நேசம் வளர்ப்பாய் காமாட்சி
பண்பாய் வாழக் காமாட்சி
பாங்காய் அருள்வாய் காமாட்சி

பீடுடன் வாழக் காமாட்சி
பிணிகள் களைவாய் காமாட்சி
புண்ணியம் தாயே காமாட்சி
பூசைகள் செய்தால் காமாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுங்கும் என்னைக் காமாட்சி
பூவாய்க் காப்பாய் காமாட்சி
பொன்னே மணியே காமாட்சி
பூசைகள் செய்தோம் காமாட்சி

மங்கல விளக்கே காமாட்சி
மாங்காடு வாழும் காமாட்சி
மனத்துயர் போக்கும் காமாட்சி
மாங்கல்யம் காப்பாய் காமாட்சி

முழுமதி முகமே காமாட்சி
மூச்சே நீதான் காமாட்சி
மனசாட்சியும் நீயே காமாட்சி
மாங்காட்டுத் தாயே காமாட்சி

ஜெயஜெய தேவியே காமாட்சி
ஜெயங்கள் தருவாய் காமாட்சி
ஜெயஜெய மங்கள காமாட்சி
சுபமங் களஸ்ரீ காமாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று காதல்

## முதலாவது: ஸரஸ்வதி காதல்

பிள்ளைப் பிராயத்திலே — அவள்
பெண்மையைக் கண்டு மயங்கிவிட் டேனங்கு
பள்ளிப் படிப்பினிலே — மதி
பற்றிட வில்லை யெனிலுந் தனிப்பட
வெள்ளை மலரணை மேல் — அவள்
வீணையுங் கையும் விரிந்த முகமலர்
விள்ளும் பொருளமுதும் — கண்டென்
வெள்ளை மனது பறிகொடுத்தே னடா! 1

ஆடி வருகையிலே — அவள்
அங்கொரு வீதி முனையி னிற்பாள் கையில்
ஏடு தரித்திருப்பாள் — அதில்
இங்கிதமாகப் பதம் படிப்பா ளதை
நாடி யருகணைந்தால் — பல
ஞானங்கள் சொல்லி யினிமை செய்வா ளின்று
கூடி மகிழ்வ மென்றால் — விழிக்
கோணத்திலே நகை காட்டிச் செல்வா ளடா! 2

ஆற்றங் கரைதனியே — தனி
யானதொர் மண்டப மீதினிலே தென்றற்
காற்றை நுகர்ந் திருந்தேன் — அங்கு
கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தா ளதை
ஏற்று மன மகிழ்ந்தே — அடி
என்னொ டிணங்கி மணம்புரிவா யென்று
போற்றிய போதினிலே — இளம்
புன்னகை பூத்து மறைந்து விட்டா ளடா! 3

சித்தந் தளர்ந்த துண்டோ? — கலைத்
தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு
பித்துப் பிடித்ததுபோல் — பகற்
பேச்சு மிரவிற் கனவு மவளிடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த நினைவை யல்லால் — பிற
வாஞ்சை யுண்டோ? வய தங்ங னமே யிரு
பத்திரண் டாமளவும் — வெள்ளைப்
ப்ண்மகள் காதலைப் பற்றிநின்றே னடா! 4

### இரண்டாவது: லக்ஷ்மி காதல்

இந்த நிலையினிலே — அங்கொர்
இன்பப் பொழிலி னிடையினில் வேறொரு
சுந்தரி வந்து நின்றாள் — அவள்
சோதி முகத்தி னழகினைக் கண்டென்றன்
சிந்தை திறை கொடுத்தேன் — அவள்
செந்திரு வென்று பெயர்சொல்லினாள் மற்றும்
அந்தத் தினமுதலா — நெஞ்சம்
ஆரத் தழுவிட வேண்டுகின்றே னடா! 5

புன்னகை செய்திடுவாள் — அற்றைப்
போது முழுது மகிழ்ந்திருப்பேன் சற்றென்
முன்னின்று பார்த்திடுவாள் — அந்த
மோகத்திலே தலை சுற்றிடுங் காண் பின்னர்
என்ன பிழைகள் கண்டோ — அவள்
என்னைப் புறக்கணித் தேகிடுவா ளங்கு
சின்னமும் பின்னமுமா — மனஞ்
சிந்தி யுளமிக நொந்திடுவே னடா! 6

காட்டு வழிகளிலே — மலைக்
காட்சியிலே புனல் வீழ்ச்சியிலே பல
நாட்டுப் புறங்களிலே — நகர்
நண்ணு சில சுடர் மாடத்திலே, சில
வேட்டுவர் சார்பினிலே — சில
வீரரிடத்திலும், வேந்தரிடத்திலும்
மீட்டு மவள் வருவாள் — கண்ட
விந்தையிலே யின்ப மேற்கொண்டு போமடா! 7

### மூன்றாவது: காளி காதல்

பின்னொ ரிராவினிலே — கரும்
பெண்மை யழகொன்று வந்தது கண்முன்பு
கன்னி வடிவ மென்றே — களி
கண்டு சற்றே யருகிற் சென்று பார்க்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை வடிவமடா — இவள்
ஆதி பராசக்தி தேவியடா! இவள்
இன்னருள் வேண்டுமடா — பின்னர்
யாவு முலகில் வசப்பட்டுப் போமடா! 8

செல்வங்கள் பொங்கிவரும் — நல்ல
தெள்ளறி வெய்தி நலம்பல சார்ந்திடும்
அல்லும் பகலு மிங்கே — இவை
அத்தனை கோடிப் பொருளினுள்ளே நின்று
வில்லை யசைப்பவளை — இந்த
வேலை யனைத்தையும் செய்யும் வினைச்சியைத்
தொல்லை தவிரிப்பவளை — நித்தம்
தோத்திரம் பாடித் தொழுதிடுவோ மடா! 9

*— சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீஜெயதுர்க்கா

# துக்க நிவாரண அஷ்டகம்

### ஓம் அன்னை காமாக்ஷி சித்தர் அருளியது

(அயிரிகிரி நந்தினிபோல் படிக்கவும்)

மங்கள ரூபிணி மதியணி சூலிணி
மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே;
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி! 1

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்!
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்!
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்!
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி! 2

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே!
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே!
எங்குலந் தழைத்திட எழில்வடி வுடனே
எழுந்தநல் துர்க்கையளே!
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி! 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீவருவாய்!
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீவருவாய்!
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீவருவாய்!
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி! 4

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக்
கொடுத்த நல்குமரியளே;
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சத்தியெனும் மாயே;
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி! 5

எண்ணிய படிநீ யருளிட வருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவர்ரணி காமாக்ஷி! 6

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்றுநீ சொல்லிவிடு வாய்;
சுடர்தரு அமுதச் சுருதிகள் கூறிச்
சுகமதைத் தந்திடுவாய்!
படர்தரு இருளின் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்;
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாஷி! 7

ஜெய ஜெய பாலாசாமுண் டேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்களகாளி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி! 8

## திருக்காதல்

திருவே நினைக் காதல் கொண்டேனே — நினது திரு
வுருவே மறவா திருந்தேனே — பலதிசையில்
தேடித் திரிந் திளைத்தேனே — நினக்கு மனம்
வாடித் தினங் களைத்தேனே — அடி நினது
பருவம் பொறுத் திருந்தேனே — மிகவு நம்பிக்
கருவம் படைத் திருந்தேனே — இடை நடுவில்
பையச் சதிகள் செய்தாயே — அதனிலு மென்
மையல் வளர்தல் கண்டாயே அமுத மழை
பெய்யக் கடைக் கணல்காயே — நினதருளில்
உய்யக் கருணை செய்வாயே — பெருமை கொண்டு
வையந் தழைக்க வைப்பேனே — அமர யுகஞ்
செய்யத் துணிந்து நிற்பேனே — அடியெனது
தேனே யென திரு கண்ணே — எனையுகந்து
தானே வருந் திருப் பெண்ணே

— சுப்பிரமணிய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா காளியின் புகழ்

### காவடிச்சிந்து

ராகம் ஆனந்தபைரவி — ஆதி தாளம்

காலமாம் வனத்திலண்டக் கோலமா மரத்தின்மீது
காளி சக்தி யென்றபெயர் கொண்டு — ரீங்
காரமிட் டுலவுமொரு வண்டு — தழல்
காலும்விழி நீலவன்ன மூலஅத்து வாக்களெனும்
கால்களா றுடையதெனக் கண்டு — மறை
காணுமுனி வோருரைத்தார் பண்டு.
மேலுமாகிக் கீழுமாகி வேறுள திசையுமாகி
விண்ணு மண்ணுமான சக்தி வெள்ளம் — இந்த
விந்தையெல்லா மாங்கதுசெய் கள்ளம் — பழ
வேதமா யதன்முனுள்ள நாதமாய் விளங்குமிந்த
வீரசக்தி வெள்ளம் விழும் பள்ளம் — ஆக
வேண்டுநித்த மென்றனேழை யுள்ளம். 1

அன்புவடி வாகிநிற்பள் துன்பெலா மவளிழைப்பள்
ஆக்கநீக்கம் யாவுமவள் செய்கை — இதை
ஆர்ந்துணர்ந்த வர்களுக்குண் டுய்கை — அவள்
ஆதியா யநாதியா யகண்டவறி வாவளுன்றன்
அறிவுமவள் மேனியிலோர் சைகை — அவள்
ஆனந்தத்தி னெல்லையற்ற பொய்கை
இன்புவடி வாகிநிற்பள் துன்பெலா மவளிழைப்பள்
இஃதெலா மவள்புரியு மாயை — அவள்
ஏதுமற்ற மெய்ப்பொருளின் சாயை — எனில்
எண்ணியே ஓம் சக்தியெனும் புண்ணிய முனிவர்நித்த
மெய்துவார் மெய்ஞ் ஞான மெனுந் தீயை — எரித்
தெற்றுவாரிந் நானெனும் பொய்ப் பேயை. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாஞ் சிவனுமவன் சோதியான சத்தியுந்தான்
அங்குமிங்கு மெங்குமுள வாகும் — ஒன்றே
யாகினா லுலகனைத்தும் சாகும் — அவை
யன்றியோர் பொருளுமில்லை, அன்றியொன்று மில்லை யிதை
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும் — இந்த
அறிவுதான் பரமஞான மாகும்.
நீதியா மரசுசெய்வார் நிதிகள்பல கோடிதுய்ப்பர்
நீண்ட காலம் வாழ்வர் தரைமீது — எந்த
நெறியு மெய்துவார் நினைத்த போது — அந்த
நித்தமுத்த சுத்தபுத்த சத்த பெருங் காளி பத
நிழலடைந் தார்க்கில்லை யோர் தீது — என்று
நேர்மை வேதஞ் சொல்லும் வழி யீது. 3

— *சுப்பிரமணிய பாரதியார்*

# காளிப் பாட்டு

யாது மாகி நின்றாய் — காளீ,
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் — காளீ
தெய்வ லீலை யன்றோ?
பூத மைந்து மானாய் — காளீ
பொறிக ளைந்து மானாய்
போத மாகி நின்றாய் — காளீ
பொறிகளைக் கடந்தாய். 1

இன்ப மாகி விட்டாய் — காளீ
என் னுளே புகுந்தாய்
பின்பு நின்னை யல்லால் — காளீ
பிறிது நானு முண்டோ?
அன்பு தந்து விட்டாய் — காளீ
ஆண்மை தந்து விட்டாய்
துன்பம் நீக்கி விட்டாய் — காளீ
துயரழித்து விட்டாய். 2

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமகள்

திஸ்ர ஏகம்

நித்தமுனை வேண்டிமன நினைப்பதெல்லா நீயாய்ப்
பித்தனைப்போல் வாழ்வதிலே பெருமையுண்டோ திருவே?
சித்தவுறுதி கொண்டிருந்தார்
செய்கையெல்லாம் வெற்றி கொண்டே
உத்தமநிலை கொள்வரென்றே
உயர்ந்தவேத முரைப்பதெல்லாம்
சுத்தவெறும் பொய்யோடீ? சுடர்மணியே, திருவே
மெத்தமயல் கொண்டுவிட்டேன், மேவிடுவாய் திருவே. 1

உன்னையன்றி யின்பமுண்டோ வுலகமிசை வேறே?
பொன்னைவடி வென்றுடையாய் புத்தமுதே, திருவே,
மின்னொளிதரு நன்மணிகள்
மேடையுயர்ந்த மாளிகைகள்
வன்னமுடைய தாமரை சேர்
மணிக்குளமுள்ள சோலைகளும்
அன்னநறு நெய்பாலும் அதிசயமாய்த் தருவாய்
நின்னருளை வாழ்த்தி நன்றா நிலமளிப்பேன், திருவே. 2

ஆடுகளு மாடுகளும் அழகுடைய பரியும்
வீடுகளு நெடுநிலமும் விரைவினிலே தருவாய்
ஈடுநினக் கொர் தெய்வமுண்டோ?
எனக்குனை யன்றிச் சரணுமுண்டோ?
வாடுநிலத்தைக் கண்டிரங்கா
மழையினைப்போ லுள்ளமுண்டோ?
நாடுமணிச் செல்வமெல்லா நன்கருள்வாய் திருவே
பீடுடைய வான்பொருளே பெருங்களியே திருவே. 3

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷ்மிதேவி

### சரண்புகுதல்

மாதவன் சக்தியினைச் — செய்ய
மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்
போதுமிவ் வறுமையெலாம் — எந்தப்
போதினுஞ் சிறுமையின் புகைதனிலே
வேதனைப் படுமனமும் — உயர்
வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
வாதனை பொறுக்க வில்லை — அன்னை
மாமக ளடியிணை சரண்புகுவோம். 1

கீழ்களி னவமதிப்பும் — தொழில்
கெட்டவ ரிணக்கமுங் கிணற்றினுள்ளே
மூழ்கிய விளக்கினைப்போல் — செய்யு
முயற்சியெல் லாங்கெட்டு முடிவதுவும்
ஏழ்கட லோடியுமோர் — பயன்
எய்திட வழியின்றி யிருப்பதுவும்
வீழ்க விக்கொடி நோய்தான் — வைய
மீதினில் வறுமை யோர் கொடுமையன்றோ? 2

பாற்கட லிடைப் பிறந்தாள் — அது
பயந்தநல் லமுதத்தின் பான்மை கொண்டாள்
ஏற்குமொர் தாமரைப்பூ — அதில்
இணைமலர்த் திருவடி யிசைந்திருபபாள்
நாற்கரந் தானுடையாள் — அந்த
நான்கினும் பலவகைத் திருவுடையாள்
வேற்கரு விழியுடையாள் — செய்ய
மேனியள் பசுமையை விரும்பிடுவாள். 3

நாரணன் மார்பினிலே — அன்பு
நலமுற நித்தமு மிணைந்திருப்பாள்
தோரணப் பந்தரிலும் — பசுத்
தொழுவிலுஞ் சுடர்மணி மாடத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்தம் தோளினிலும் — உடல்
வெயர்த்திட வுழைப்பவர் தொழில்களிலும்
பாரதி சிரத்தினிலும் — ஒளி
பரவிட வீற்றிருந் தருள்புரிவாள். 4

பொன்னிலு மணிகளிலும் — நறும்
பூவிலுஞ் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும் — செழுங்
காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும் — மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடுந் திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி — அவள்
பதமலர் வாழ்த்திநற் பதம்பெறுவோம். 5

மண்ணினுட் கனிகளிலும் — மலை
வாய்ப்பிலும் வார்கட லாழத்திலும்
புண்ணிய வேள்வியிலும் — உயர்
புகழிலு மதியிலும் புதுமையிலும்
பண்ணுநற் பாவையிலும் — நல்ல
பாட்டிலுங் கூத்திலும் படத்தினிலும்
நண்ணிய தேவிதனை — எங்கள்
நாவிலு மனத்திலு நாட்டிடுவோம். 6

வெற்றிகொள் படையினிலும் — பல
விநயங்க ளறிந்தவர் கடையினிலும்
நற்றவ நடையினிலும் — நல்ல
நாவலர் தேமொழித் தொடையினிலும்
உற்றசெந் திருத்தாயை — நித்தம்
உவகையிற் போற்றியிங் குயர்த்திடுவோம்
கற்ற பல் கலைகளெல்லாம் — அவள்
கருணைநல் லொளிபெறக் கலிதவிர்ப்போம். 7

— சுப்பிரமணிய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷ்மி ப்ரார்த்தனை

## திரு வேட்கை

நாட ராகம் — சதுஸ்ர ஏக தாளம்

மலரின் மேவு திருவே — உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்
நிலவு செய்யு முகமும் — காண்பார்
நினை வழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும் — தெய்வக்
களி துலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும் — கண்டுன்
இன்பம் வேண்டு கின்றேன். 1

கமல மேவு திருவே — நின்மேல்
காதலாகி நின்றேன்
குமரி நின்னை யிங்கே — பெற்றார்
கோடியின்ப முற்றார்
அமரர் போல வாழ்வேன் — என்மேல்
அன்பு கொள்வையாயின்
இமய வெற்பின் மோத — நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன். 2

வாணி தன்னை யென்றும் — நினது
வரிசை பாட வைப்பேன்
நாணி யேகலாமோ? — என்னை
நன்கறிந்தி லாயோ?
பேணி வைய மெல்லாம் — நன்மை
பெருக வைக்கும் விரதம்
பூணு மைந்த ரெல்லாம் — கண்ணன்
பொறிக ளாவ ரன்றோ? 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னு நல்ல மணியும் — சுடர்செய்
பூண்க ளேந்தி வந்தாய்
மின்னு நின்றன் வடிவிற் — பணிகள்
மேவி நிற்கு மழகை
என்னுரைப்ப னேடீ — திருவே
என்னுயிர்க் கொ ரமுதே
நின்னை மார்பு சேரத் — தழுவி
நிக ரிலாது வாழ்வேன். 4

செல்வ மெட்டு மெய்தி — நின்னாற்
செம்மை யேறி வாழ்வேன்.
இல்லை யென்ற கொடுமை — உலகில்
இல்லை யாக வைப்பேன்.
முல்லை போன்ற முறுவல் — காட்டி
மோக வாதை நீக்கி
எல்லை யற்ற சுவையே — எனைநீ
என்றும் வாழ வைப்பாய். 5


*சுப்பிரமணிய பாரதியார்*

## இலக்குமி

**செந்துவர் வாய்க்கருங் கண்ணினை**
**வெண்ணகைத் தேன்மொழியார்**
**வந்து வலஞ்செய்து மாநடம்**
**ஆட மலிந்த செல்வக்**
**கந்தமலி பொழில்சூழ் கடல்**
**நாகைக்கா ரோண மென்றும்**
**சிந்தை செய்வாரைப் பிரியாது**
**இருக்குந் திருமங்கையே.**

— அப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனவிருத்தி மாலை

**1. தன லெக்ஷ்மி:**

பொங்கு தனக்கரத்தாள் பொற்புடைய சக்கரத்தாள்
எங்குநலம் தருகின்ற எழிற்கரத்துத் தாமரையாள்
தங்குகின்ற கமலத்தில் தளிரடிகள் தாம் வைத்தாள்
தங்கரத்தால் தண்மைதரு தனமகளே போற்றியம்மா!

**2. ஆதி லெக்ஷ்மி:**

சோதிமிக வுடையாள் சோம்பரற்ற மனமுடையாள்
தாதியரின் புடைசூழத் தாவிவரும் தார்மிகத்தாள்
பூதிமிகு மலரபய பூரணநல் வரதத்தாள்
ஆதியிலும் ஆதியளே ஆதித்திரு போற்றியம்மா!

**3. தான்ய லெக்ஷ்மி:**

எண்கரத்தில் ஏற்புடைய எழிற்படைகள் ஏற்றவளே
பண்புடைய பகவதியே பலகதையும் பெற்றவளே
கண்படைத்த பயனாகக் களிப்படைய வந்தவளே
மண்செழிக்கத் தானியநல் மணிதந்தாய் போற்றியம்மா!

**4. வீர லெக்ஷ்மி:**

சூலமொடு அபயத்தாள் சூழ்ச்சியற்ற வரதத்தாள்
காலனவன் கால்நடுங்கு கதிர்ஒளியின் சக்கரத்தாள்
நீலத்திரை யமுதத்தாள் நீங்காநற் புகழுடையாள்
மாலவனார் மனமகிழும் வீரத்திரு போற்றியம்மா!

**5. கஜ லெக்ஷ்மி:**

தடாகத் தாமரையாள் தண்மைமிகு தவவடிவாள்
அடாஅத் துயரமதை அழிக்கின்ற அருளடியாள்
விடாநற் றனமழையாள் விளங்கானைத் துதியடியாள்
படாகக் கரியிவர்வாள் பண்ணடிகள் போற்றியம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. சந்தான லெக்ஷ்மி:**

அன்புடையாள் அறுகரத்தாள் அன்னையிலும்
அன்னையவள்
இன்புடையாள் கேடகத்தாள் இடர்நீக்கு
வாளுடையாள்
மன்புகழின் மலர்க்கரத்தே மகவுடனே
யமுதுடையாள்
சந்தனத்தாய் சந்தானப் பெருக்குடையாய்
போற்றியம்மா!

**7. விஜய லெக்ஷ்மி:**

வாளுடனே சாரங்கம் வார்புகழின் சுதர்சனமும்
ஆளுடைய கேடயமும் ஆண்டருளும் எண்கரத்தி;
நாளுடனே நாற்புகழும் நாரணர்க்குத் தாமளித்த
தாள்மலரும் தனிவெற்றித் தாயேநீ போற்றியம்மா!

**8. ஐஸ்வர்ய லெக்ஷ்மி:**

நாற்கரத்து நாயகியாள் நாற்றிசையின் நல்வினையாள்
கார்மேகம் போல்தனத்தைக் காத்திடவே பெய்திடுவாள்
நூற்புலவர் தம்முகத்தாள் நூதனத்தின் ஒருவடிவாள்
பாற்பணியும் அயிசுவரியப் பாவையளே போற்றியம்மா!

**பலன் மொழி:**

அட்டத்திரு மகளாய் அருள்வீசும் அன்னைபுகழ்
இட்டவெள்ளி மங்களத்தில் இருந்தபடி இருந்துரைப்பார்
துட்டத்துயர் தொலைவேகும்; துணிவுபுகழ் அருகாகும்;
முட்டமுட்டப் பொருள் குவித்து முன்னின்
வாழ்ந்திடுவார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரிப் பாட்டு

**பராசக்தி**

(மூன்றும் ஒன்றாகிய மூர்த்தி)

மாதா பராசக்தி வையமெலா நீ நிறைந்தாய்
ஆதார முன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே?
ஏதாயினும் வழி நீ சொல்வாய்; எமதுயிரே,
வேதாவின் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே. 1

**வாணி**

வாணி கலைத்தெய்வம், மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்ப தெல்லாங்
காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே. 2

**ஸ்ரீ தேவி**

பொன்னரசி, நாரணனார் தேவி, புகழரசி
மின்னு நவரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே. 3

**பார்வதி**

மலையிலே தான்பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி யுலகக் கனல் வளர்ப்பாள்
நிலையி லுயர்த்திடுவாள், நேரே யவள் பாதந்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே. 4

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

— *குமரகுருபரர் அருளியது*

**என் உள்ளக் கமலத்தில் உறைவாயாக!**

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்களன் வெள்ளைஉள்ளம்
தண்தாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும்அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே. 1

**பாடும்பணி எனக்கு அருள்வாயாக!**

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்து அருள்வாய் பங்கய ஆசனத்தில்
கூடும் பசும் பொற்கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே. 2

**உன் அருட்கடலில் குளிக்க அருள்புரிவாயாக!**

அளிக்கும் செழுங்தமிழ்த் தெள் அமுது ஆர்ந்து உன்அருட் கடலில்
குளிக்கும்படிக்கு என்று கூடுங் கொலோ உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகலகலாவல்லியே! 3

**கல்வியும் வாக்குவன்மையும் பெருகிட அருள்வாயாக!**

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய் வடநூல் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலாவல்லியே! 4

**என் உள்ளத்தில் மலர அருள்வாயாக!**

பஞ்சப்பு இதம்தரும் செய்யப் பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந்தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்ந்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய் சகலகலாவல்லியே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண்ணும்பொழுது எளிதில் தோன்றச் செய்வாயாக!**

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுதுஎளிது எய்தநல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே! 6

**பாட்டும் பொருளும் பயனும் சேர்ப்பிப்பாயாக!**

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய் உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே சகலகலாவல்லியே! 7

**எல்லாம் எனக்கு அருளி ஆட்கொள்வாயாக!**

சொல்விற் பனமும் அவதானமும் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளி னஆசனம் சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகலகலாவல்லியே. 8

**சொல்லுக்கும் பொருளுக்கும் உயிரான மெய்யறிவே!**

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தில் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலம் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசு அன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே! 9

**மன்னரையும் பணியச் செய்வாயாக!**

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே! 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸரஸ்வதி ஸ்தோத்ரம்

### நொண்டிச் சிந்து

எங்ஙனம் சென்றிருந்தீர் — என
 தின்னுயிரே யென்றன் இசையமுதே.
திங்களைக் கண்டவுடன் — கடல்
 திரையினைக் காற்றினைக் கேட்டவுடன்
கங்குலைப் பார்த்தவுடன் — இங்குக்
 காலையி லிரவியைத் தொழுதவுடன்
பொங்குவீர் அமிழ்தெனவே — அந்தப்
 புதுமையிலே துயர் மறந்திருப்பேன். 1

மாதமொர் நான்காகநீர் — அன்பு
 வறுமையிலே யெனை வீழ்த்திவிட்டீர்.
பாதங்கள் போற்றுகின்றேன் — என்றன்
 பாவமெலாங் கெட்டு ஞான கங்கை
நாதமொ டெப்பொழுதும் — என்றன்
 நாவினிலே பொழிந்திட வேண்டும்
வேதங்க ளாக்கிடுவீர் — அந்த
 விண்ணவர் கண்ணிடை விளங்கிடுவீர். 2

கண்மணி போன்றவரே — இங்குக்
 காலையு மாலையுந் திருமகளாம்
பெண்மணி யின்பத்தையும் — சக்திப்
 பெருமகள் திருவடிப் பெருமையையும்
வண்மையி லோதிடுவீர் — என்றன்
 வாயிலு மதியிலும் வளர்ந்திடுவீர்
அண்மையி லிருந்திடுவீர் — இனி
 அடியனைப் பிரிந்திடல் ஆற்றுவனோ? 3

தானெனும் பேய் கெடவே — பல
 சஞ்சலக் குரங்குகள் தளைப்படவே
வானெனும் ஒளிபெறவே — நல்ல
 வாய்மையிலே மதி நிலைத்திடவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனெனப் பொழிந்திடுவீர் — அந்தத்
திருமகள் சினங்களைத் தீர்த்திடுவீர்
ஊனங்கள் போக்கிடுவீர் — நல்ல
ஊக்கமும் பெருமையும் உதவிடுவீர். 4

தீயினை நிறுத்திடுவீர் — நல்ல
தீரமுந் தெளிவுமிங் கருள்புரிவீர்
மாயையி லறிவிழந்தே — உம்மை
மதிப்பது மறந்தன பிழைகளெல்லாம்
தாயென வுமைப் பணிந்தேன் — பொறை
சார்த்தி நல் லருள்செய வேண்டுகின்றேன்
வாயினிற் சபதமிட்டேன் — இனி
மறக்கிலேன் எனை மறக்கலீர்! 5

## கலைமகள்

காமியஞ் செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமியோடு சரச்சு வதியவள்
கோமியும் உறை யுங்குட மூக்கிலே.

— அப்பர்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை — தூய
உறுப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.
படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற்கையும் — துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

— கம்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி தேவியின் புகழ்

ஆனந்தபைரவி ராகம் — சாப்பு தாளம்

வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
வீணை செய்யு மொலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறுபாவல ருள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
யோதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள். (வெள்ளைத்) 1

மாதர் தீங்குரற் பாட்டி லிருப்பாள்
மக்கள் பேசு மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியி னாவை யிருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழி லுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தி னெழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள். (வெள்ளைத்) 2

வஞ்சமற்ற தொழில் புரிந் துண்டு
வாழு மாந்தர் குல தெய்வ மாவாள்
வெஞ்சமர்க் குயிராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற் பொருள் வாணிகஞ் செய்வோர்
வீரமன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்சமென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம். (வெள்ளைத்) 3

தெய்வம் யாவு முணர்த்திடுந் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடையோர்கள்
உயிரினுக் குயிராகிய தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி யுழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்.(வெள்ளைத்) 4

செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்தனம் இவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி யதன்மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்திரம் இவள் பூசனை யன்றாம். (வெள்ளைத்) 5

வீடு தோறுங் கலையின் விளக்கம்
வீதி தோறு மிரண்டொரு பள்ளி
நாடு முற்றிலு முள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி,
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கு மமுதமெ னன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.(வெள்ளைத்) 6

ஊணர் தேசம், யவனர்தந் தேசம்,
உதய ஞாயிற் றொளிபெறு நாடு,
சேணகன்ற தோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பாரசிகப் பழந் தேசம்
தோணலத்த துருக்க, மிசிரம்,
சூழ்கடற் கப்புறத் தினிலின்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவி னொளிமிகுத் தோங்க(வெள்ளைத்) 7

ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊன மின்று பெரிதிழைக் கின்றீர்
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன தற்கு வருந்துதல் வேண்டா;
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்! (வெள்ளைத்) 8

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிர நாட்டல்
**பின்ன ருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்**
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்.
(வெள்ளைத்) 9

நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்
ஆண்மையாள ருழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவு நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுதும் வாரீர்(வெள்ளைத்) 10

*சுப்பிரமணிய பாரதியார்*

## கலைமகள்

**பொருப்பிலே பிறந்து தென்னன்**
**புகழிலே கிடந்து சங்கத்து**
**இருப்பிலே யிருந்து வைகை ஏட்டிலே**
**தவழ்ந்த பேதை**
**நெருப்பிலே நின்று கற்றோர்**
**நினைவிலே நடந்தோ ரேன**
**மருப்பிலே பயின்ற பாவை**
**மருங்கிலே வளர்கிறாள்.**

— **வரந்தருவார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாசக்திக்கு விண்ணப்பம்

மோகத்தைக் கொன்றுவிடு — அல்லா லென்றன்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு — அல்லா லதில்
சிந்தனை மாய்த்துவிடு
யோகத் திருத்திவிடு — அல்லா லென்றன்
ஊனைச் சிதைத்துவிடு
ஏகத் திருத்துலகம் — இங்குள்ளன
யாவையும் செய்தவளே! 1

பந்தத்தை நீக்கிவிடு — அல்லா லுயிர்ப்
பாரத்தைப் போக்கிவிடு
சிந்தை தெளிவாக்கு — அல்லா லிதைச்
செத்த உடலாக்கு
இந்தப் பதர்களையே — நெல்லா மென
எண்ணி இருப்பேனோ
எந்தப் பொருளினுமே — உள்ளே நின்
றியங்கி இருப்பவளே. 2

கள்ள முருகாதோ? — அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ?
உள்ளந் தெளியாதோ? — பொய்யாணவ
ஊன மொழியாதோ?
வெள்ளக் கருணையிலே — இந்நாய் சிறு
வேட்கை தவிராதோ?
விள்ளற் கரியவளே — அனைத்திலும்
மேவி நிறைந்தவளே. 3

— சுப்பிரமணிய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராசக்தி

கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்
காவியம் பல நீண்டன காட்டென்பார்
வித விதப்படு மக்களின் சித்திரம்
மேவி நாடகச் செய்யுளை மேவென்பார்
இதயமோ வெனிற் காலையு மாலையும்
எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்,
எதையும் வேண்டில தன்னை பராசக்தி
இன்ப மொன்றினைப் பாடுத லின்றியே. 1

நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென் றொரு தெய்வங் கூறுமே
கூட்டி மானுடச் சாதியை யொன்றெனக்
கொண்டு வைய முழுதும் பயனுறப்
பாட்டி லேயறங் காட்டெனு மோர்தெய்வம்
பண்ணி லின்பமுங், கற்பனை விந்தையும்
ஊட்டி யெங்கும் உவகை பெருகிட
ஓங்கு மின்கவி யோதெனும் வேறொன்றே. 2

நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானிலத்தவர் மேனிலை யெய்தவும்
பாட்டிலே தனி யின்பத்தை நாட்டவும்
பண்ணிலே களி கூட்டவும் வேண்டி நான்
மூட்டு மன்புக் கனலொடு வாணியை
முன்னு கின்ற பொழுதிலெல் லாங் குரல்
காட்டி யன்னை பராசக்தி யேழையேன்
கவிதை யாவுந் தனக்கெனக் கேட்கின்றாள். 3

மழை பொழிந்திடும் வண்ணத்தைக் 'கண்டு நான்
வானிருண்டு கரும்புயல் கூடியே
இழையு மின்னல் சரேலென்று பாயவும்
ஈர வாடை யிரைந் தொலி செய்யவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழையெலா மிடையின்றி யிவ் வானநீர்
ஊற்றுஞ் செய்தி யுரைத்திட வேண்டுங்கால்
மழையுங் காற்றும் பராசக்தி செய்கை காண்
வாழ்க தாயென்று பாடுமென் வாணியே. 4

சொல்லினுக் கெளி தாகவு நின்றிடாள்
சொல்லை வேறிடஞ் செல்ல வழிவிடாள்
அல்லினுக்குட் பெருஞ் சுடர் காண்பவர்
அன்னை சக்தியின் மேனி நலங் கண்டார்
கல்லினுக்கு ளறிவொளி காணுங்கால்,
கால வெள்ளத்திலே நிலை காணுங்கால்,
புல்லினில் வயிரப்படை காணுங்கால்,
பூதலத்தில் பராசக்தி தோன்றுமே! 5

— சுப்பிரமணிய பாரதியார்

## நவராத்திரிப் பாட்டு

உஜ்ஜயினீ! நித்ய கல்யாணீ!
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி (உஜ்ஜயினீ!)

உஜ்ஜய காரண சங்கர தேவி
உமா ஸரஸ்வதி ஸ்ரீ மாதா ஸா. (உஜ்ஜயினீ!

வாழி புனைந்து மஹேசுவர தேவன்,
தோழி, பதங்கள் பணிந்து துணிந்தனம்.(உஜ்ஜயினீ!)

ஸத்ய யுகத்தை அகத்தி லிருத்தி
திறத் தைநமக்கருளிச் செய்யும் உத்தமி(உஜ்ஜயினீ!)

— சுப்பிரமணிய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி நிலம்

திஸ்ர ஏகம் — ஆதி தாளம்

காணி நிலம் வேண்டும் — பராசக்தி
காணி நிலம் வேண்டும் — அடி
தூணி லழகியதாய் — நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் — அந்தக்
காணி நிலத்திடையே — யொர் மாளிகை
கட்டித் தரவேண்டும் — அங்கு
கேணி யருகினிலே — தென்னைமரம்
கீற்று மிள நீரும் 1

பத்துப் பனிரண்டு — தென்னைமரம்
பக்கத்திலே வேணும் — நல்ல
முத்துச் சுடர்போலே — நிலாவொளி
முன்பு வர வேணும் — அங்கு
கத்துங் குயிலோசை — சற்றே வந்து
காதிற்பட வேணும் — என்றன்
சித்த மகிழ்ந்திடவே — நன்றாயிளந்
தென்றல் வரவேணும். 2

பாட்டுக் கலந்திடவே — அங்கே யொரு
பத்தினிப் பெண் வேணும் — எங்கள்
கூட்டுக் களியினிலே — கவிதைகள்
கொண்டுதர வேணும் — அந்தக்
காட்டு வெளியினிலே — அம்மா, நின்றன்
காவலுற வேணும் — என்றன்
பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித்திட வேணும். 3

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரங் கேட்டல்

(காளி, சக்தி, மாரி முதலியன உலகத்தின் மூல சக்தியைக்
குறிக்கும் பெயர்களாம்.)

விண்ணும் மண்ணுந் தனியாளும் — எங்கள்
வீரை சக்திநின் தருளே — என்றன்.
கண்ணுங் கருத்து மெனக் கொண்டு — அன்பு
கசிந்து கசிந்து கசிந் துருகி — நான்
பண்ணும் பூசனைக ளெல்லாம் — வெறும்
பாலை வனத்தி லிட்ட நீரோ — உனக்
கெண்ணுஞ் சிந்தை யொன்றிலையோ? — அறி
வில்லா தகில மளிப்பாயோ? 1

நீயே சரண மென்று கூவி — என்றன்
நெஞ்சிற் பேருறுதி கொண்டு — அடி
தாயே யெனக்கு மிக நிதியும் — அறந்
தன்னைக் காக்கு மொரு திறனும் — தரு
வாயே யென்று பணிந் தேத்திப் — பல
வாறா நினது புகழ் பாடி — வாய்
ஓயே னாவ துணராயோ? — நின
துண்மை தவறுவதொ ரழகோ? 2

காளீ வலிய சாமுண்டி — ஓங்
காரத் தலைவி யென் னிராணி — பல
நாளிங் கெனை யலைக்க லாமோ? உள்ளம்
நாடும் பொரு ளடைதற் கன்றோ — மலர்த்
தாளில் விழுந் தபயம் கேட்டேன் — அது
தாரா யெனி லுயிரைத் தீராய் — துன்பம்
நீளி லுயிர் தரிக்க மாட்டேன் — கரு
நீலீ யென் னியல் பறியாயோ? 3

தேடிச் சோறு நிதந் தின்று — பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி — மனம்
வாடித் துன்ப மிக வுழன்று — பிறர்
வாடப் பல செயல்கள் செய்து — நரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிக் கிழப் பருவ மெய்தி — கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் — பல
வேடிக்கை மனிதரைப் போலே — நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ? 4

நின்னைச் சில வரங்கள் கேட்பேன் — அவை
நேரே யின் றெனக்குத் தருவாய் — என்றன்
முன்னைத் தீய வினைப் பயன்கள் — இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும் — இனி
என்னைப் புதிய வுயிராக்கி — எனக்
கேதுங் கவலை யறச் செய்து — மதி
தன்னை மிகத் தெளிவு செய்து — என்றும்
ஸந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய். 5

தோளை வலியுடைய தாக்கி — உடற்
சோர்வும் பிணி பலவும் போக்கி — அரி
வாளைக் கொண்டு பிளந்தாலும் — கட்டு
மாறா வுடலுறுதி தந்து — சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல் — ஒளி
நண்ணித் திகழு முகந் தந்து — மத
வேளை வெல்லு முறை கூறித் — தவ
மேன்மை கொடுத் தருளல் வேண்டும். 6

எண்ணுங் காரியங்க ளெல்லாம் — வெற்றி
யேறப் புரிந்தருளல் வேண்டும் — தொழில்
பண்ணப் பெரு நிதியம் வேண்டும் — அதிற்
பல்லோர் துணை புரிதல் வேண்டும் — சுவை
நண்ணும் பாட்டினொடு தாளம் — மிக
நன்றா யுளத் தழுந்தல் வேண்டும் — பல
பண்ணிற் கோடி வகை யின்பம் — நான்
பாடத் திற னடைதல் வேண்டும். 7

கல்லை வயிரமணி யாக்கல் — செம்பைக்
கட்டித் தங்க மெனச் செய்தல் — வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல் — பன்றிப்
போத்தைச் சிங்க வேறாக்கல் — மண்ணை
வெல்லத் தினிப்பு வரச் செய்தல் — என
விந்தை தோன்றிட விந் நாட்டை — நான்
தொல்லை தீர்த் துயர்வு கல்வி — வெற்றி
சூழும் வீர மறி வாண்மை. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுந் திரவியத்தின் குவைகள் — திறல்
கொள்ளுங் கோடி வகைத் தொழில்கள் — இவை
நாடும் படிக்கு வினை செய்த — இந்த
நாட்டோர் கீர்த்தி யெங்கு மோங்கக் — கலி
சாடுந் திற னெனக்குத் தருவாய், — அடி
தாயே யுனக் கரிய துண்டோ? — மதி
மூடும் பொய்மை யிரு ளெல்லாம் — எனை
முற்றும் விட்டகல வேண்டும். 9

ஐயந் தீர்ந்துவிடல் வேண்டும் — புலை
யச்சம் போயொழிதல் வேண்டும், — பல
பையச் சொல்லுவ திங் கென்னே — முன்னைப்
பார்த்தன் கண்ண னிவர் நேரா — எனை
உய்யக் கொண்டருள வேண்டும் — அடி
உன்னைக் கோடி முறை தொழுதேன் — இனி
வையத் தலைமை யெனக் கருள்வாய் — அன்னை
வாழீ, நின்ன தருள் வாழி. 10

(ஓம்) காளீ வலிய சாமுண்டி — ஓங்
காரத் தலைவி யென் னிராணி

*— சுப்பிரமணிய பாரதியார்*

### காட்சி தந்து என்னை

**காட்சி தந்து என்னை ஆட்சிசெய்வாய் அம்மா**
**கல்யாணியே கற்பகமே — அற்புத (காட்சி)**

**மாட்சி எல்லாம் வாழ்வில் சேர்ந்திட கனிவுடன்**
**மன்றிலே நின்றாடும் அம்பல வாணருடன் (காட்சி)**

**அங்கம் ஒரு பாகமாய் அமைந்த என் தாயே**
**ஆனந்த மாமலையின் தேமதுரக்கனியே**
மங்கலக் குங்குமத்தில் மகிழ்ந்திடும் அம்மையே
**மரகதமயில் உருவாம் தேவியே! தவத்திரு. (காட்சி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேள்விப் பாட்டு

இயற்கை யென்றுனை யுரைப்பார் — சிலர்
இணங்குமைம் பூதங்க ளென்றிசைப்பார்
செயற்கையின் சக்தி யென்பார் — உயிர்த்
தீயென்பர், அறிவென்பர், ஈசனென்பர்
வியப்புறு தாய்நினக்கே — இங்கு
வேள்விசெய் திடுமெங்கள் "ஸோம" மெனும்
நயப்படு மதுவுண்டே — சிவ
நாட்டியங் காட்டிநல் லருள் புரிவாய். 1

அன்புறு சோதி யென்பார் — சிலர்
ஆரிருட் காளியென் றுனைப்புகழ்வார்
இன்பமென் றுரைத்திடுவார் — சிலர்
எண்ணருந் துன்பமென் றுனையிசைப்பார்
புன்பலி கொண்டுவந்தோம் — அருள்
பூண்டெமைத் தேவர்தங் குலத்திடுவாய்
மின்படு சிவசக்தி — எங்கள்
வீரைநின் திருவடி சரண்புகுந்தோம். 2

உண்மையி லமுதாவாய் — புண்க
ளொழித்திடுவாய் களி யுதவிடுவாய்
வண்மைகொ ளுயிர்ச்சுடராய் — இங்கு
வளர்ந்திடு வாயென்று மாய்வதிலாய்
ஒண்மையும் ஊக்கமுந்தான் — என்றும்
ஊறிடுந் திருவருட் சுனையாவாய்
அண்மையி லென்று நின்றே — எம்மை
ஆதரித் தருள்செயும் விரதமுற்றாய். 3

தெளிவுறு மறிவினை நாம் — கொண்டு
சேர்த்தன நினக்கது ஸோமரஸம்
ஒளியுறு முயிர்ச்செடியில் — இதை
ஓங்கிடு மதிவலி தனிற் பிழிந்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களியுறக் குடித்திடுவாய் — நின்றன்
களிநடங் காண்பதற் குளங்கனிந்தோம்
குளிர்சுவைப் பாட்டிசைத்தே — சுரர்
குலத்தினிற் சேர்ந்திடல் விரும்புகின்றோம். 4

அச்சமுந் துயருமென்றே — இரண்
டசுரர்வந் தெமையிங்கு சூழ்ந்துநின்றார்
துச்சமிங் கிவர்படைகள் — பல
தொல்லைகள் கவலைகள் சாவுகளாம்,
இச்சையுற் றிவரடைந்தார் — எங்கள்
இன்னமு தினைக்கவர்ந் தேகிடவே
பிச்சையிங் கெனக்களித்தாய் — ஒரு
பெருநக ருடலெனும் பெயரினதாம். 5

கோடி மண்டபந் திகழும் — திறற்
கோட்டையிங் கிதையவர் பொழுதனைத்தும்
நாடிநின் றிடர்புரிவார் — உயிர்
நதியினைத் தடுத்தெமை நலித்திடுவார்
சாடுபல் குண்டுகளால் — ஒளி
சார்மதிக் கூடங்கள் தகர்த்திடுவார்
பாடிநின் றுனைப்புகழ்வோம் — எங்கள்
பகைவரை யழித்தெமைக் காத்திடுவாய். 6

நின்னருள் வேண்டுகின்றோம் — எங்கள்
நீதியுந் தருமமு நிலைப்பதற்கே
பொன்னவிர் கோயில்களும் — எங்கள்
பொற்புடை மாதரு மதலையரும்
அன்னநல் லணிவயல்கள் — எங்கள்
ஆடுகள் மாடுகள் குதிரைகளும்
இன்னவை காத்திடவே — அன்னை
இணைமலர்த் திருவடி துணைபுகுந்தோம். 7

எம்முயி ராசைகளும் — எங்கள்
இசைகளுஞ் செயல்களுந் துணிவுகளும்
செம்மையுற் றிடவருள்வாய் — நின்றன்
சேவடி யடைக்கலம் புகுந்துவிட்டோம்
மும்மையி னுடைமைகளும் — திரு
முன்னரிட் டஞ்சலி செய்துநிற்போம்
அம்மைநற் சிவசக்தி — எமை
அமரர்தந் நிலையினி லாக்கிடுவாய். 8

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைய முழுதும்

**கண்ணிகள்**

வைய முழுதும் படைத் தளிக்கின்ற
மஹா சக்தி தன்புகழ் வாழ்த்து கின்றோம்;
செய்யும் வினைக ளனைத்திலுமே வெற்றி
சேர்ந்திட நல்லருள் செய்க வென்றே. 1

பூதங்க ளைந்தி லிருந் தெங்குங் கண்ணிற்
புலப்படும் சக்தியைப் போற்று கின்றோம்;
வேதங்கள் சொன்ன படிக்கு மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டு மென்றே. 2

வேகம் கவர்ச்சி முதலிய பல்வினை
மேவிடும் சக்தியை மேவுகின்றோம்;
ஏக நிலையி லிருக்கும் அமிர்தத்தை
யாங்க ளறிந்திட வேண்டு மென்றே. 3

உயிரெனத் தோன்றி யுணவு கொண்டே வளர்ந்
தோங்கிடும் சக்தியை ஓதுகின்றோம்;
பயிரினைக் காக்கும் மழையென எங்களைப்
பாலித்து நித்தம் வளர்க்க வென்றே. 4

சித்தத்திலே நின்று சேர்வ துணரும்
சிவசக்தி தன்புகழ் செப்புகின்றோம்;
இத்தரை மீதினில் இன்பங்கள் யாவும்
எமக்குத் தெரிந்திடல் வேண்டு மென்றே. 5

மாறுத லின்றிப் பராசக்தி தன் புகழ்
வண்ணமுற நித்தம் பாடுகின்றோம்
நூறு வயது புகழுடன் வாழ்ந்துயர்
நோக்கங்கள் பெற்றிட வேண்டு மென்றே. 6

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி யென்றுரை செய்திடுவோம்;
ஓம் சக்தி யென்பவர் உண்மை கண்டார், சுடர்
ஒண்மை கொண்டார், உயிர் வண்மை கொண்டார். 7

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி

உலகத்து நாயகியே — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
உன் பாதம் சரண்புகுந்தோம் — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
கலகத் தரக்கர் பலர் — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
கருத்தி னுள்ளே புகுந்து விட்டார் — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
பல கற்றும் பல கேட்டும் — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
பய னொன்று மில்லையடி — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
நிலை யெங்கும் காணவில்லை — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
நின் பாதம் சரண் புகுந்தோம் — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ 1

துணி வெளுக்க மண்ணுண்டு — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
தோல் வெளுக்கச் சாம்பருண்டு — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
மணி வெளுக்கச் சாணையுண்டு — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
மனம் வெளுக்க வழியில்லை — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
பிணிகளுக்கு மாற்றுண்டு — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
பேதைமைக்கு மாற்றில்லை — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
அணிகளுக்கொ ரெல்லை யில்லாய் — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ
அடைக்கல மிங் குனைப் புகுந்தோம் — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ 2

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்பளம் கோயிலில் எழுந்தருளி யிருக்கும் தேச முத்துமாரி

தேடியுனைச் சரணடைந்தேன்
தேசமுத்து மாரி
கேடதனை நீக்கிடுவாய்
கேட்ட வரந் தருவாய். 1

பாடியுனைச் சரணடைந்தேன்
பாச மெல்லாங் களைவாய்
கோடி நலஞ் செய்திடுவாய்
குறைக ளெல்லாந் தீர்ப்பாய். 2

எப்பொழுதுங் கவலையிலே
இணங்கி நிற்பான் பாவி
ஒப்பி யுன தேவல் செய்வேன்
உன தருளால் வாழ்வேன். 3

சக்தி யென்று நேரமெல்லாந்
தமிழ்க் கவிதை பாடி
பக்தியுடன் போற்றி நின்றால்
பய மனைத்துந் தீரும். 4

ஆதாரம் சக்தி யென்றே
அருமறைகள் கூறும்
யாதானுந் தொழில் புரிவோம்
யாது மவள் தொழிலாம். 5

துன்பமே யியற்கை யெனும்
சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம்
யாவு மவள் தருவாள். 6

நம்பினார் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால்
அதிக வரம் பெறலாம். 7

— *சுப்பிரமணிய பாரதியார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெகத் ஜெனனீ ஜெகன் மாதா!

ஜெகத் ஜனனீ ஜகன் மாதா
வாணி சரஸ்வதி வாக் தேவி அம்மா

காஞ்சியிலே நீ காமாட்சி
காசிதனில் நீ விசாலாட்சி அம்மா

மாமதுராபுரி மீனாட்சி
அகிலம் முழுவதும் உனதாட்சி அம்மா

சைதையிலே நீ கடம் பாடி
மயிலையிலே நீ கற்பகமே அம்மா

மாமலையிலே நீ மஞ்ச மாதா
செங்கனூர் வாழும் பகவதி நீ அம்மா

நெல்லையிலே நீ காந்திமதி
வானத்திலே நீ பூர்ணமதி அம்மா

தில்லையிலே நீ சிவகாமி
திருக்கடவூரில் அபிராமி அம்மா

கொல்லூரிலே நீ மூகாம்பிகை
கூடல் மதுரையிலே மீனாம்பிகை அம்மா

திருவொற்றியூரிலே வடிவாம்பிகை
திருவருள் தருவாய் உமயாம்பிகை அம்மா

ஆனைக் காவலிலே அகிலாண்டீஸ்வரி
திரிசூலத்திலே திரிபுர சுந்தரி அம்மா

நங்க நல்லூரிலே இராஜேஸ்வரி
ஆண்டாள் நகரிலே புவனேஸ்வரி அம்மா

நலம் தரும் நாக முத்துமாரி
நன்மை அளிப்பாள் நாராயணியே அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் தீர்ப்பாள் துர்க்காம்பிகே
துணையாய் வருவாள் கமலாம்பிகே அம்மா

திருக்கோகர்ணம் தனில் ப்ரகதாம்பாள்
திருவருள் புரியும் தேவியும் நீயே அம்மா

பிருந்தாவள் நகர் இமய பார்வதியே
பேரருள் தருவாய் ஆதிசக்தி. அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராசக்தி துணை

எத்தேசங்களிலும் இடை விடாமல் சிந்தித்துவரும்

# மாரியம்மன் தாலாட்டு

## விநாயகர் துதி

### காப்பு

#### சொச்சகக் கலிப்பா

பூதலத்தில் யாவர்களும் போதரவாய் எந்நாளும்
மாதரசி என்று வாழ்த்துகின்ற மாரியம்மன்
சீதரனார் தங்கை சிறப்பான தாலாட்டைக்
காதலுட னோதக் கணபதிதன் காப்பாமே.

#### வெண் செந்துறை

முந்தி முந்தி விநாயகனே முக்கணனார் தன் மகனே
கந்தருக்கு முன் பிறந்த கற்பகமே முன்னடவாய்
வேலவர்க்கு முன்பிறந்த விநாயகரே முன்னடவாய்
வேம்படியிற் பிள்ளையாரே விக்கினரே முன்னடவாய்
பேழை வயிற்றோனே பெருச்சாளி வாகனனே
காரண மால்மருகா கற்பகமே மெய்ப்பொருளே
சீரான நல்மருகா செல்வக் கணபதியே
ஒற்றைக் கொம்போனே உமையாள் திருமகனே
கற்றைச் சடையணிந்த கங்காதரன் மகனே
வித்தைக்கு விநாயகனே வெண்ணையுண்டோன் மருகா
மத்தக் கரிமுகவா மாயோன் மருகோனே
ஐந்து கரத்தோனே யானை முகத்தோனே
தந்திமத வாரணனே தற்பரனே முன்நடவாய்
நெஞ்சிற் குடியிருந்து, நீயெனக்கு முன்னடவாய்
பஞ்சஞ்சு மெல்லடியாள் பார்வதியாள் புத்திரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழ முகத்தோனே விநாயகரே முன்னடவாய்
சடைபுனையுஞ் சங்கரனார் சற்புத்திரர் வாருமையா
முன்னடக்கும் பிள்ளையார்க்கும் கண்ணடக்கம் பொன்னாலே
கண்ணடக்கம் பொன்னாலே காற்சிலம்பு முத்தாலே
முத்தாலே தண்டைகொஞ்ச முன்னடவாய் பிள்ளையாரே
செல்வக் கணபதியே சீர்பாதம் நான்மறவேன்.

## சரஸ்வதி துதி

தாயே சரஸ்வதியே சங்கரியே முன்னடவாய்
என்தாயே கலைவாணி ஏகவல்லி நாயகியே
வாணி சரஸ்வதியே என்வாக்கில் குடியிருந்து
என்நாவில் குடியிருந்து நல்லோசை தாருமம்மா
கமலா சனத்தாளே காரடி பெற்றவளே
என் - குரலிற் குடியிருந்து கொஞ்சடி பெற்றவளே
என் - நாவு தவறாமல் நல்லோசை தாருமம்மா
மாரியம்மன் தன்கதையை மனமகிழ்ந்து நான்பாட
சரியாக என்நாவில் தங்கிக் குடியிரம்மா
கன்னனூர் மாரிமுத்தைக் கைதொழுது நான்பாட
பின்னமொன்று மில்லாமற் புறமிருந்து காருமம்மா.

## மாரியம்மன் துதி

மாயி மகமாயி மணிமந்திர சேகரியே
ஆயி வுமையவளே ஆதிசிவன் தேவியரே
மாரித்தாய் வல்லியரே மகராசி வாருமம்மா
மாயன் சகோதரியே மாரிமுத்தே வாருமம்மா
ஆயன் சகோதரியே ஆஸ்தான மாரிமுத்தே
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா
திக்கெல்லாம் போற்று மெக்கால தேவியரே
எக்கால தேவியரே திக்கெல்லாம் நின்றசக்தி
கன்ன புரத்தாளே காரண சவுந்தரியே
காரண சவுந்தரியே நாரணனார் தங்கையம்மா
நாரணனார் தங்கையம்மா நல்லமுத்து மாரியரே
நல்லமுத்து மாரியரே நாககன்னித் தாயாரே
உன்-கரகம் பிறந்ததம்மா கன்னனூர் மேடையிலே
உன்-வேம்பு பிறந்ததம்மா விஜயநகர்ப் பட்டணமாம்
உன்-சூலம் பிறந்ததம்மா துலங்குமணி மண்டபத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்-அலகு பிறந்ததம்மா அயோத்திநகர் பட்டணமாம்
உன்-சிலம்பு பிறந்ததம்மா சிவலிங்கப் பாறையிலே
உன்-பிரம்பு பிறந்ததம்மா பிச்சாண்டிச் சந்நிதியாம்
உன்-உடுக்கை பிறந்ததம்மா உத்திராக்ஷ பூமியிலே
உன்-பம்பை பிறந்ததம்மா பளிங்குமா மண்டபத்தில்
உன்-கருத்து பிறந்ததம்மா கஞ்சகிரி யிந்திரபுரம்
உன்-மருளர் தழைக்கவம்மா வையகங்க ளீடேற
உன்-குமாரவர்க்கந் தானழைக்க கொம்பனையே மாரிமுத்தே
உனக்கு-மூன்று கரகமம்மா முத்தான நற்கரகம்
உனக்கு-ஐந்து கரகமம்மா அசைந்தாடும் பொற்கரகம்
உனக்கு-ஏழு கரகமம்மா எடுத்தாடும் பொற்கரகம்
உனக்குப்-பத்துகரகமம்மா பதிந்தாடும் பொற்கரகம்
வேப்பிலையும் பொற்கரகம் வீதிவிளை யாடிவர
ஆயிரம் கண்ணுடையாள் அலங்காரி வாருமம்மா
பதினாயிரம் கண்ணுடையாள் பராசக்தி வாருமம்மா
துலுக்காண வெல்லையெல்லாம் குலுக்காட பெண்பிறந்தாய்
துலுக்காணத் தெல்லைவிட்டுத் துரந்தரியே வாருமம்மா
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா
மலையாள தேசமெல்லாம் விளையாடப் பெண்பிறந்தாய்
மலையாள தேசம்விட்டு வாருமம்மா இந்தமுகம்
சமைந்தாய் சமயபுரம் சாதித்தாய் கன்னபுரம்
இருந்தாய் விராடபுரம் இனியிருந்தாய் கன்னபுரம்
சமய புரத்தாளே சாம்பிராணி வாசகியே
சமயபுரத் தெல்லைவிட்டு தாயாரே வாருமம்மா
கன்ன புரத்தாளே காரணி சவுந்தரியே
கன்னபுரத் தெல்லைவிட்டுக் காரணியே வந்தமரும்
கடும்பாடி எல்லையெல்லாங் காவல்கொண்ட மாரிமுத்தே
ஊத்துக்காட் டமர்ந்தவளே உதிரபலி கொண்டவளே
படவேட் டமர்ந்தவளே பரசுராமனைப் பெற்றவளே
படைவேட்டை விட்டுமெள்ள பத்தினியே வாருமம்மா
பெரியபாளை யத்தமர்ந்த பேச்சியெனு மாரியரே
பெரியபாளை யத்தைவிட்டுப் பேரரசி வாருமம்மா
ஆரணிபெரிய பாளையமா மதிலிருக்கும் ஆற்றங்கரை
ஆற்றங்கரை மேடைவிட்டு ஆச்சியரே வாருமம்மா
வீராம் பட்டணமமர்ந்த வேதாந்த மாரிமுத்தே
கோலியனூ ரெல்லையிலே குதிகொண்ட மாரிமுத்தே
அந்தரத்திற் றேரோட அருகே செடிலசைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சியிற் றேரோட உயர்ந்த செடிலசைய
மச்சியிற் றேரோட மகரச் செடிலசைய
பக்கங் கயிறோட பாரச் செடிலசைய
ஆண்ட குருதேசிகரை அறியாத மானிடரைத்
தூண்டிலிட்டு ஆட்டிவைக்கத் தோன்றினாய் நீயொருத்தி
சத்தியாய்நீ அமர்ந்தாய் தனிப்பசுவு காவுகொண்டாய்
எல்லையிலே யமர்ந்தாய் எருமைக்கிடாகாவு கொண்டாய்
உன்னைப்போல் தெய்வம் உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் பிள்ளைகள் தானெங்குமுண்டு வையகத்தில்
கோத்தமுத்து வடமசைய கொங்கைரெண்டும் பாலொழுக
ஏற்றவர்க்கு வரந்தருவாய் எக்காலத் தேவியரே
எக்காலத் தேவியரே திக்கெலா மாண்டவளே
திக்கெல்லா மாண்டவளே திகம்பரியே வாருமம்மா
முக்கோணச் சக்கரத்தில் முதன்மையாய் நின்றசத்தி
அக்கோணந் தனில்வந்து ஆச்சியரே வந்தமரும்
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா
மாயி மருளியரே மணிமந்திர சேகரியே
வல்லாண்மைக் காரியரே வழக்காடும் மாரிமுத்தே
வல்லாரைக் கொன்றாய்நீ வலியவரை மார்பிளந்தாய்
நீலிக பாலியம்மா நிறைந்ததிருச் சூலியரே
நாலுமூலை யோமகுண்டம் நடுவே கனகசபை
கனகசபை வீற்றிருக்கும் காரண சவுந்தரியே
காரண சவுந்தரியே நாரணனார் தங்கையரே
நாரணனார் தங்கையரே நல்லமுத்து மாரியரே
நடலைச் சுடலையம்மா நடுச்சுடலை தில்லைவனம்
தில்லைவனத் தெல்லைவிட்டுத் திரும்புமம் மாயிந்தமுகம்
வார்ப்புச் சிலையாளே வஜ்ஜிரமணித் தேராளே
தூண்டித் துடைபருமன் தூண்டிமுள்ளு கைப்பருமன்
மண்டையிலே தைத்தமுள்ளு மார்புருகிப் போகுதம்மா
பக்கத்திற் றைத்தமுள்ளு பதைத்துத் துடிக்குதம்மா
தொண்டையிலே தைத்தமுள்ளு தோளுருகிப் போகுதம்மா
கத்திபோல் வேப்பிலையைக் கதறவிட்டாய் லோகமெங்கும்
ஈட்டிபோல் வேப்பிலையை யினியனுப்பிக் கொண்டவளே
பத்திரிக் குள்ளிருக்கும் பாவனையை யாரறிவார்
வேப்பிலைக் குள்ளிருக்கும் வித்தைதனை யாரறிவார்
செடிலோ துடைப்பருமன் தூண்டிமுள்ளு கைப்பருமன்
தூண்டிமுள்ளைத் தூக்கித் துடுக்கடக்கு மாரிமுத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைச் செடிலாட ஊரனைத்தும் பொங்கலிட
இரட்டைச் செடிலாட இரண்டனைத்தும் பொங்கலிட
பக்கச் செடிலாடப் படைமன்னர் கொக்கரிக்க
பரமசிவன் வாசலிலே பாற்பசுவு காவுகொண்டாய்
ஏமனிட வாசலிலே எருமைக்கிடா காவுகொண்டாய்
எருமைக்கிடா காவுகொண்டாய் எக்காலத் தேவியரே
எக்காலத் தேவியரே திக்கெலா மாண்டசக்தி
காசிவள நாட்டாளே கன்னியாக் குமரியளே
காசிவள நாட்டைவிட்டுக் கட்டழகி வாருமம்மா
ஊசி வளநாடு உத்தியாக் குமரிதேசம்
அறியாதான் பாடுகிறேன் அம்மைத்திருக்கதையைத்
தெரியாதான் பாடுகிறேன் தேவி திருக்கதையை
எட்டிரண்டு நானறியேன் ஏழையம்மா வுன்னடிமை
பத்தொன்றா லொன்றறியேன் பாலனம்மா வுன்னடிமை
பாட வகையறியேன் பர்ட்டின் பயனறியேன்
வருந்த வகையறியேன் வர்ணிக்கப் பேரறியேன்
பேரு மறியேன் பெற்றவளே யென்தாயே
குழந்தை வருந்துவது கோவிலுக்கும் கேட்கிலையோ
மைந்தன் வருந்துவது மாளிகைக்குக் கேட்கிலையோ
பாலன் வருந்துவது பார்வதியே கேட்கிலையோ
கோயி லடிமையம்மா கொண்டாடும் பாலனம்மா
மாளிகையை விட்டு மாதாவே வாருமம்மா
சந்நிதியை விட்டுத் தர்யாரே வாருமம்மா
அரண்மனையை விட்டு ஆத்தாளே வாருமம்மா
கோயிற் கடிமையம்மா கொண்டாடும் பாலகண்டி
சந்நிதி மைந்தனம்மா சங்கரியே பெற்றவளே
வருந்தியழைக் கின்றேனே வண்ணமுகங் காணாமல்
தேடியழைக் கின்றேனே தேவிமுகங் காணாமல்
ஏழைக் குழந்தையம்மா எடுத்தோர்க்குப் பாலனம்மா
பாலன் குழந்தையம்மா பார்த்தோர்க்குப் பாலனம்மா
மைந்தன் குழந்தையம்மா மகராசி காருமம்மா
கல்லோ உன்மனது கரையலையோ எள்ளளவு
இரும்போ உன்மனது இரங்கலையோ எள்ளளவும்
கல்லுங் கரைந்திடுமுன் மனங்கரையா தென்னவிதம்
இரும்பு முருகிடுமுன் னிருதயமுருகா தென்னவிதம்
முன்செய்த தீவினையோ முற்காலத்துப் பயனோ
பெரியோர்செய் தீவினையோ பெற்றவளே சொல்லுமம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதுமறியேன் நான் ஈஸ்வரியே சொல்லுமம்மா
கடும்பாடி எல்லையிலே கட்டழகி வீற்றிருந்தாய்
கடும்பாடி யெல்லைவிட்டுக்கட்டழகி வாருமம்மா
கரகத் தழகியரே கட்டழகி மாரிமுத்தே
கரகத்து மீதிருந்து கட்டழகி கொஞ்சுமம்மா
கும்பத் தழகியம்மா கோபாலன் தங்கையரே
கும்பத்து மீதிருந்து கொஞ்சுமம்மா பெற்றவளே
கொஞ்சுமம்மா பெற்றவளே குறைகள்ஒன்று வாராமல்
உனக்கு பட்டுபளபளென பாடகக்கால் சேறாட
உனக்கு முத்துமொளமொ ளென்னமோதிரக்கால் சேறாட
உலகமெல்லாம் முத்தெடுப்பாய் உள்ளபடிதான் வந்தாய்
தேசமெல்லாம் முத்தெடுப்பாய் தேவிகன்ன னூராளே
முத்தெடுத்துத் தான்புகுந்தாய் உத்தமியே மாரிமுத்தே
உனக்கு-தாழங்குறக்கூடை தனிக்கட்டும் பொன்னாலே
குறக்கூடை முத்தெடுத்துக் கொம்பனையே நீபுகுந்தாய்
கோவிலின் சந்தடியில் கூப்பிட்டால் கேளாதோ
அரண்மனைச் சந்தடியில் அழைத்தாலுங் கேளாதோ
மாளிகையின் சந்தடியில் மாதாவே கேட்கிலையோ
மக்களிடச் சந்தடியோ மருமக்கள் சந்தடியோ
பிள்ளைகள் சந்தடியோ பேரன்மார் சந்தடியோ
அனந்தல் பெருமையோ ஆசாரச் சந்தடியோ
சந்தடியை நீக்கியம்மா தாயாரு மிங்கேவா
கொல்லிமலை யாண்டவனைக் குமர குருபரனை
காத்தவரா யனைத்தான் கட்டழகி தானழையும்
தொட்டியத்துச் சின்னானெனுந் துரைமகனைத் தானழையும்
மதுரை வீரப்பனையென் மாதாவே தானழையும்
பாவாடை ராயனைத்தான் பத்தினியே தானழையும்
கருப்பண்ண சுவாமியையுங் கட்டழகி தானழையும்
சங்கிலிக் கறுப்பனைத்தான் சடுதியிற் றானழையும்
முத்தா லூராவுத்தன் மூளையுள்ள சேவகனைப்
பெரியபாளைய த்தமர்ந்த பேய்ச்சியெனும் மாதாவே
பாளையக் காரியம்மா பழிகாரி மாரிமுத்தே
கன்னனூர் மாரிமுத்தே கலகலென்று நடனமிடும்
உன்னைப் பணிந்தவர்க்கு உற்றதுணை நீயிரம்மா
ஆபர மேஸ்வரியே அருகே துணையிரம்மா
உன்னைப்போல் தெய்வத்தை உலகத்திற் கண்டதில்லை
என்னைப்போல் மைந்தர்பலர் எங்குமுண்டு வையகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்மகிமை யறிந்தவர்கள் மண்டலத்தில் யாருமில்லை
உன்சேதி யறிவாரோ தேசத்து மானிடர்கள்
உன்மகிமை நானறிந்து மண்டலத்தில் பாடவந்தேன்
மகிமையறி யாதுலகில் மாண்டமனு கோடியுண்டு
சேதியறி யாதுலகில் செத்தமனு கோடியுண்டு
தப்புபிழை வந்தாலும் சங்கரியே நீபொறுத்து
ஆறுதப்பு நூறுபிழை அடியார்கள் செய்ததெல்லாம்
மனமது நீபொறுத்து மனமகிழ்ச்சி யாகவேணும்
தேவி மனம்பொறுத்துத் தீர்க்கமுடன் ரக்ஷியம்மா
கொண்டு மனம்பொறுத்துக் கொம்பனையே காருமம்மா
காக்கக் கடனுனக்குக் காரண சவுந்தரியே
காரடி பெற்றவளே காலுதலை நோகாமல்
வேணுமென்று காரடிநீ வேப்பஞ் சிலையாளே
பக்கத் துணையிருந்து பாலகனைக் காருமம்மா
பொரிபோ லெழும்பிநீ பூரித்து ஆலித்து
ஆலித்து நீயெழும்பி ஆத்தா ளிறங்குமம்மா
சிரசினில் முத்தையம்மா தற்காத்து நீயிறக்கும்
முகத்தினில் முத்தையம்மா முன்னுதாம் நீயிறக்கும்
கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கும்
தோளினில் முத்தையம்மா துரந்தரியே நீயிறக்கும்
மார்பினில் முத்தையம்மா மாதாவே நீயிறக்கும்
வயிற்றினில் முத்தையம்மா மகேஸ்வரியே நீயிறக்கும்
துடையினில் முத்தையம்மா தேவியரே நீயிறக்கும்
முழங்காலில் முத்தையம்மா மீனாட்சி நீயிறக்கும்
கணுக்காலில் முத்தையம்மா காமாட்சி நீயிறக்கும்
பாதத்தில் முத்தையம்மா பாரினி லிறக்கிவிடும்
பூமியி லிறக்கிவிடும் பெற்றவளே காருமம்மா
பெற்றவளே என்தாயே பேரரசி மாரிமுத்தே
உற்றதுணை நீயிருந்து உகந்தரசி காருமம்மா
உன்னைவிடப் பூமிதனி லுறுதிதுணை வேறுமுண்டோ
பக்கத் துணையிருந்து பாதுகாத்து ரட்சியம்மா
செக்கச் சிவந்தவளே செங்கண்ணன் தங்கையரே
மங்கையெனு மாதரசி மகராசி காருமம்மா
திங்கள் வதனியரே தேவிகன்ன னூராளே
எங்கள்குலத் தேவியரே ஈஸ்வரியே கண்பாரும்
மங்கள விநோதி மாதாவே கண்பாரும்
ஏழைக் கிரங்காமல் இப்படியே நீயிருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வது தானெக்காலம் வார்ப்புச் சிலையாளே
ஆயி மகமாயி ஆரணங்கு சொற்காரணியே
மாயி மகமாயி மனிமந்த்ர சேகரியே
இரங்கிரங்குந் தாயாரே எங்களைக் காப்பாற்றுமம்மா
மாரித்தாய் வல்லவியே மகராசி காருமம்மா
வீரணன் சோலையிலே ஆரணம தானசத்தி
நீதிமன்னர் வாசலிலே நேராய்க் கொலுவிருந்தாய்
கொலுவிருந்த சக்தியரே கோத்தமுத்து நீயிறக்கு
கோத்தமுத்து நீயிறக்கும் கொம்பனையே மாரிமுத்தே
போட்டமுத்து நீயிறக்கும் பொய்யாத வாசகியே
பொய்யாத வாசகியே புண்ணியவதி ஈஸ்வரியே
செடிலோ துடைப்பருமன் தூண்டிமுள்ளோ கைப்பருமன்
அடங்காத மானிடரை ஆட்டிவைக்கும் மாரிமுத்தே
துஷ்டர்கள் தெண்டனிடத் துடுக்கடக்கு மாரிமுத்தே
கண்டவர்கள் தெண்டனிடக் கலக்கமிடு மாரிமுத்தே
அண்டாத பேர்களைத்தான் ஆணவத்தைத் தானடக்கி
இராஜாக்கள் எல்லோரும் நலமாகத் தான்பண்ணிய
மகுடமுடிமன்னர் மனோன்மணியைத் தான்பணிய
கிரீட முடிதரித்த கீர்த்தியுள்ள ராஜாக்கள்
மகுடமுடி மந்திரிகள் மன்னித்தெண்ட னிட்டுநிற்க
பட்டத் துறைகள் படைமுகத்து ராஜாக்கள்
வெட்டிக் கெலித்துவரும் வேதாந்த வேதியர்கள்
துஷ்டர்களைத் தானடக்கும் சூலி கபாலியம்மா
அடங்காத மானிடரை அடிமைபல கொண்டசக்தி
மிஞ்சிவரும் இராட்சதரை வெட்டிவிருதுண்ட கண்ணே
தஞ்சமென்ற மானிடரைத் தற்காக்கும் தயாபரியே
அவரவர் தாம்பணிய ஆக்கினையைப் பெற்றவளே
சிவனுடனே வாதாடும் சித்தாந்த மாரிமுதத்தே
அரசனுடன் வாதாடும் ஆஸ்தான மாரிமுத்தே
பிரமனுடன் வாதாடும் பெற்றவளே மாரிமுத்தே
விஷ்ணுவுடன் வாதாடும் வேதாந்த மாரிமுத்தே
எமனுடன் வாதாடும் எக்காலத் தேவியரே
தேவருடன் வாதாடும் தேவிகன்ன னூராளே
கன்ன புரத்தாளே காரண சவுந்தரியே
காரண சவுந்தரியே கர்த்தரிட தேவியரே
நெருப்பம்மா உன்சொரூபம் நிஷ்டூரக் காரிகையே
அனலம்மா உன்சொரூபம் ஆஸ்த்தான மாரிமுத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணலம்மா உன்சொரூபம் தரிக்கமுடி போகாது
அண்டா நெருப்பேயம்மா ஆதிபர மேஸ்வரியே
கர்த்தனைப் பெற்றவளே கட்டழகி மாரிமுத்தே
தொட்டியத்துச் சின்னானைத் தொழுதுவரப் பண்ணசக்தி
கருப்பனையுங் கூடவேதான் கண்டுபணிய வைத்தாய்
பெண்ணரசிக்காகப்பிள்ளையைக் கழுவில் வைத்தா
ஆணழகிக்காக மைந்தனைக் கழுவில் வைத்தாய்
அடங்காத பிள்ளையென ஆண்டவனைக் கழுவில்வைத்தாய்
துஷ்டனென்று சொல்லித் துடுக்கடக்கிக் கழுவில்வைத்தாய்
பாரினில் முத்தையம்மா பத்தினியே தாயாரே
வாரி எடுக்கவொரு வஞ்சியரை உண்டுபண்ணாய்
முத்தெடுக்குந் தாதி மோகனப்பெண் ணேயென்று
தாதியரைத் தானழைத்துத் தாயாரே முத்தெடுப்பாய்
முத்தெடுத்துத் தான்புகுந்து உத்தமியாள் மாரிமுத்தே
மாரி மகமாயி மணிமந்திர சேகரியே
ஆயி யுமையவளே ஆஸ்தான மாரிமுத்தே
பாரமுத்தை நீயிறக்கிப் பாலகனைக் காருமம்மா
காரடி பெற்றவளே காலுதலை நோகாமல்
சொற்கேளாப் பிள்ளையென்று தூண்டிக் கழுவில் வைத்தாய்
கழுகுதனுக்கு மோர்வார்க்கக் கட்டழகி யுண்டுபண்ணாய்
நல்லதங்கை யுண்டுபண்ணாய் நற்கழுகுக்கு மோர்வார்க்க
உறியில் தயிர்வார்க்க உத்தமியே யுண்டுபண்ணாய்
உன்மகனைக் காத்தாற்போ லிவ்வடிமையைக் காருமம்மா
எவ்வளவு நேரமம்மா ஏறெடுத்துப் பாருமம்மா
கடுகளவு நேரமம்மா கண்பார்க்க வேணுமம்மா
கடைக்கண்ணால் நீபார்த்தால் கடைத்தேறிப் போவேனம்மா
பாரளந்தோன் தங்கையரே பாலகனைக் காருமம்மா
பேரரசி மாரிமுத்தே பிள்ளைகளைக் காருமம்மா
மகமாயி மாரிமுத்தே மைந்தர்களைக் காருமம்மா
பெற்றவளே மாரிமுத்தே பிள்ளைகளைக் காருமம்மா
ஆணழகி மாரிமுத்தே அடிமைகளைக் காருமம்மா
பூணாரம் பூண்டசக்தி பிள்ளைகளைக் காருமம்மா
பாரமெடுக்க வேதான் பாலகனா லாகுமோதான்
பூணாரம் தானெடுக்கப் பிள்ளைகளா லாகுமோதான்
வருத்தப் படுத்தாதே மாதாவே கண்பாரும்
பாலன் படுந்துயரம் பாக்கியவதி பார்க்கிலையோ
மைந்தன் படுந்துயரம் மாதாவே பார்க்கிலையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை படுந்துயரம் கொம்பனையே பார்க்கிலையோ
சிற்றடிகள் படுந்துயரம் தேவியரே பார்க்கிலையோ
பூணார முத்திரையைப் பெற்றவளே தானிறக்கு
ஆபரண முத்திரையை ஆத்தா ளிறக்குமம்மா
இறங்கிறங்குந் தாயாரே எங்களைக்காப் பாற்றுமம்மா
அடிமைகளைக் காப்பாற்றி ஆணழகி நீயிறக்கு
கும்பத்து மாரியரே கொலுவிலலங் காரியரே
கொலுவிலலங் காரியரே கோத்தமுத்து நீயிறக்கு
கோத்தமுத்து நீயிறக்கு கொம்பனையே மாரிமுத்தே
மாரியென்றால் மழைபொழியும்தேவியென்றால்தேன்சொரியும்
தேவியென்றால் தேன்சொரியும் திரி புரசுந்தரியே
திரிபுர சுந்தரியே தேசத்து மாரியரே
பொன்னுமுத்து மாரியரே பூரண சவுந்தரியே
தாயாரே பெற்றவளே சத்தகன்னி சுந்தரியே
பேருமறி யேனம்மா பெற்றவளே தாயாரே
குருடன் கைக்கோலென்று கொம்பனையே நீயறிவாய்
கோலைப் பிடுங்கிக் கொண்டால் குருடன்பிழைப்பானோ
இப்படிக்கு நீயிருந்தா லினிப்பிழையோந் தாயாரே
கலிபிறக்கு முன்பிறந்த கனத்ததோர் மாரிமுத்தே
யுகம்பிறக்கு முன்பிறந்த உத்தண்ட மாரிமுத்தே
கலியுகத்தில் தாயே கண்கண்ட தெய்வம்நீ
உன்னைப்போல் தெய்வம் உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் மைந்தர்தா னெங்குமுண்டு வையகத்தில்
அனலை மதியாய்நீ யாவரையுஞ் சட்டைபண்ணாய்
புனலை மதியாய்நீ பூலோகஞ் சட்டைபண்ணாய்
வருந்தி யழைக்கிறேனுன் திருமுகத்தைக் காணாமல்
பாலகனைக் காத்துப் பாதத்தா லுதைத்துவிடு
மைந்தனைக் காத்துநீ மகராசி யுதைத்துவிடு
குழந்தையைக் காத்துநீ கொம்பனையே யுதைத்துவிடு
ஆதி பரஞ்சோதி அங்குகண்ணே வாருமம்மா
வெள்ளிக்கிழமையிலே கொள்ளிக்கண்மாரியரே
வெள்ளியிலும் திங்களிலும் வேண்டியபேர் பூசைசெய்ய
பூசைமுகத்திற்குப் போனேனென்று சொல்லாதே
இந்த மனையிடத்தி லீஸ்வரியே வந்தருள்வாய்
வந்தமனை வாழுமம்மா இருந்தமனை யீடேறும்
இருந்தமனை யீடேற ஈஸ்வரியே வந்தருள்வாய்
கண்பாரும் கண்பாரும் கனகவல்லித் தாயாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பான பிள்ளைகளை நலிந்திடநீ செய்யாதே
உன்னை நம்பினோரை ஓய்ந்துவிடச் செய்யாதே
அந்நீதம் செய்யாதே ஆயி மகமாயி
வேம்பு ரதமேறி வித்தகியே வாருமம்மா
பச்சிலை ரதமேறிப் பார்வதியே வாருமம்மா
கொலுவி லிருந்தசக்தி கோத்தமுத்தை நீயிறக்கு
போட்டமுத்தை நீயிறக்கு பூலோக மாரிமுத்தே
கேளிக்கை யாகக் கிளிமொழியே முத்திறக்கு
அரும்பால கன்றன்னை அவஸ்தைப் படுத்தாதே
வருத்தப் படுத்தாதே மாதாவே கண்பாரும்
அன்ன மிறங்கவம்மா ஆத்தாளே கண்பாரும்
ஊட்டத்தை நீகொடுத்து உத்தமியே காருமம்மா
இறக்கங் கொடுத்துநீ ஈஸ்வரியே காருமம்மா
காருமம்மா பெற்றவளே காலுதலை நோகாமல்
எங்கேயோ பராமுகமா யிருந்தேனென்று சொல்லாதே
அந்திசந்தி பூசையிலே அசதியா யெண்ணாதே
ஒட்டாரம் பண்ணாதே ஓங்கார மாரிமுத்தே
பாவாடம் நேருமம்மா பழிகள்வந்து சேருமம்மா
பாவாடம் நேர்ந்ததென்றால் பாருலகு ஏற்காது
கண்டார் நகைப்பார்கள் கலியுகத்தா ரேசுவார்கள்
கலியுகத்தா ரேசுவார்கள் கட்டழகி மாரிமுத்தே
பார்த்தார் நகைப்பார்கள் பரிகாசம் பண்ணுவார்கள்
உதடு படைத்தவர்கள் உதாசினஞ் சொல்லுவார்கள்
பல்லைப் படைத்தவர்கள் பரிகாசம் பண்ணுவார்கள்
நாவைப் படைத்தவர்கள் நாணயங்கள் சொல்லுவார்கள்
பார்த்தார் நகைக்கவம்மா பரிகாசம் பண்ணாதே
கச்சிப் பதியாளே காமாட்சித் தாயாரே
தாயாரே பெற்றவளே தயவுவைத்துக் காருமம்மா
மாதாவே பெற்றவளே மனம்பொறுத்துக் காருமம்மா
பார்வதியே பெற்றவளே பக்ஷம்வைத்துக் காருமம்மா
ஆயிரங் கண்ணுடைய அலங்காரி வாருமம்மா
பதினாயிரம் முத்தினிலே பார்த்தெடுத்த வாணிமுத்து
நூறாயிரம் முத்தினிலே நூற்றெடுத்த வாணிமுத்து
ஆயிரங்கண் முத்துதனி லாத்தாள் வளர்ந்தெழுந்தாள்
நாகத்தின் கண்ணேயம்மா நல்லவிடைப் பாம்பே
சேஷத்தின் கண்ணேயம்மா சின்ன விடைப்பாம்பே
அஞ்சுதலை நாகமம்மா கொஞ்சிவிளை யாடுதம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துத்தலை நாகமம்மா பதிந்துவிளை யாடுதம்மா
செந்தலை நாகமம்மா சேர்ந்துவிளை யாடுதம்மா
கருந்தலை நாகமம்மா காக்குதம்மா வுன்கொலுவில்
சேஷமென்ற பாம்பையெல்லாம் சேரவே பூண்டசக்தி
நாகமென்ற பாம்பையெல்லாம் நலமாகப் பூண்டசத்தி
அரவமெனும் பாம்பையெல்லா மழகாகப் பூண்டசக்தி
ஆபரணமாய்ப் பூண்டாய் அழகுள்ள பாம்பையெல்லாம்
நாகம் குடைபிடிக்க நற்பாம்பு தாலாட்ட
பூணாரமாய்ப் பூண்டாயுன் பொன்திரு மேனியெல்லாம்
தாலாட்டத் தாலாட்டத் தாயார் மனதிரங்க
சேஷன் குடைகவியச் செந்நாகம் வட்டமிட
வட்டமிட்டு வீற்றிருந்தாய் மாரிகன்ன னூராளே
மார்மேல் நாகமம்மா மடிமேல் புரண்டாடத்
தோள்மேலே நாகமம்மா துடைமேற் புரண்டாட
மார்மேலும் தோள்மேலும் வண்ண மடிமேலும்
கொஞ்சிவிளை யாடுதம்மா கோபாலன் தங்கையரே
ஏழையா லாகுமோதான் ஈஸ்வரியே தோத்தரிக்க
இல்லையென் பார்பங்கில் ஈஸ்வரியே மாரிமுத்தே
குழந்தையா லாகுமோதான் கொம்பனையைத் தோத்தரிக்க
அடியேனா லாகுமோதான் ஆத்தாளைத் தோத்தரிக்க
எந்தனா லாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க
நில்லா யரைநாழி நிஷ்டூரி தாண்டவியே
உண்டென் பார்பங்கில் ஒளிவிளக்காய் நின்றசக்தி
பார்த்தோர்க்குச் செல்வனம்மா பாலன் குழநதையம்மா
உன்னைப் பகைத்தோர்க்கு உறுமார்பி லாணியம்மா
நினைத்தோர்க்குத் தெய்வமம்மா எதிர்த்தார்க்கு மார்பிலாணி
தாயேநீ வாருமம்மா தற்பரையாய் நின்றசக்தி
வாக்கிட்டால் தப்பாது வரங்கொடுத்தால் பொய்யாது
பொய்யாது பொய்யாது பூமலர்தான் பொய்யாது
பூவிரண்டு பூத்தாலுன் நாவிரண்டு பூக்காது
மறவரிட வாசலிலே மல்லிகைப் பூப்பூத்தாலும்
ம்றவ ரறிவாரோ மல்லிகைப்பூ வாசனையை
குறவரிட வாசலிலே குடமல்லி பூத்தாலும்
குறவ ரறிவாரோ குடமல்லி வாசனையை
பன்றி முதுகினிலே பன்னீரைப் பூசினாக்கால்
பன்றியறியு மோதான் பன்னீரின் வாசனையைக்
என்னாலே யாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தனா லாகுமோதான் மாதாவை நமஸ்கரிக்க
பிள்ளையா லாகுமோதான் பெற்றவளை நமஸ்கரிக்க
பாலானா லாகுமோதான் பார்வதியை நமஸ்கரிக்க
எச்சிலொரு கோடி இளந்தீட்டு முக்கோடி
தீட்டு மொருகோடி தெருவெங்குந் தாமுண்டு
கன்னிகைகள் தீட்டு கலந்தோடி வந்தாலும்
ஆறுதப்பு நூறுபிழை அடியார்கள் செய்தாலும்
தாயே மனம்பொறுத்துத் தயவாகக் காருமம்மா
எச்சிற் கலந்ததென்று இடையப்போய் நிற்காதே
தீட்டுக் கலந்தாலும் தேவி மனம்பொறுத்து
எச்சிற் கலந்தாலும் ஈஸ்வரியே மனம்பொறுத்துப்
பட்சம்வைத்துக் காருமம்மா பராபரியே அங்குகண்ணே
விருப்பம்வைத்துக் காருமம்மா விருது படைத்தசக்தி
நீலி கபாலியம்மா நிறைந்தபஞ் சாட்சரியே
நீலி கபாயியம்மா சுதந்தரியே மாரிமுத்தே
நிஷ்டூரக் காரியரே விஸ்தார முள்ளசக்தி
வேப்பிலையால் தான்தடவி விசிறிமுத் தழித்துவிடு
ஆனபரா சக்தியரே யம்மைமுத் தழித்துவிடு
இறங்கிறங்குந் தாயாரே ஈஸ்வரியே நான்பிழைக்க
கன்னபுரத் தெல்லையெல்லாம் காவல்கொண்ட மாரியரே
எக்காலத் தேவியரே ஈஸ்வரியே இறக்குமம்மா
திக்கெல்லாம் பேர்படைத்த தேசமுத்து மாரியரே
அண்ட புவனமெல்லாம் புண்டரீக முள்ளசக்தி
கைலாச லோகமெல்லாம் காவல்கட்டி யாண்டவளே
பாதாள லோகமெல்லாம் பரதவிக்கப் பண்ணசக்தி
காலைக் கொலுவிலம்மா காந்திருந்தா ராயிரம்பேர்
உச்சிக் கொலுவிலம்மா உகந்திருந்தா ராயிரம்பேர்
அந்திக் கொலுவிலம்மா அமர்ந்திருந் தாயிரம்பேர்
கட்டியக் காரரெல்லாம் கலந்தெச் சரிக்கைபண்ணப்
பாடும் புலவரெல்லாம் பண்பிசைந்த பாடல்சொல்ல
வடுகர் துலுக்கரம்மா மராட்டியர் கன்னடியர்
கன்னடியர் காவலுடன் கர்நாட்டுப் பட்டாணியர்
இட்டசட்டை வாங்காத இடும்பரெல்லாம் காத்திருக்க
போட்டசட்டை வாங்காத பொந்திலியர் காத்திருக்க
வடுகர் துலுக்கரம்மா மறுதேசப் பட்டாணியர்
வேடிக்கை பார்த்திருந்தாள் வேப்பஞ் சிலையாளும்
கேளிக்கை பார்த்திருந்தாள் கிளிமொழியாள் மாரிமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயமெலா முன்மாயம் மருளரெல்லா முன்மருளர்
மருளர் தழைக்கவம்மா மருமக்க ளீடேற
பொலிசட்டி தானெடுக்கும் புத்திரர்கள் தான்றழைக்க
வேதங்கள் தாம்தழைக்க விண்ணர்வர்க ளீடேற
குமாரவர்க்கம் தான்தழைக்கக் கொம்பனையே கண்பாரும்
மைந்தர்கள் தான்தழைக்க மாதாவே கண்பாரும்
காஞ்சி புரியிலேதான் கர்த்தரையும் நீநினைத்துக்
கர்த்தரையும் நீநினைத்துக் காமாட்சி பூசைபண்ணாய்
கங்கை முழுகியம்மா கிளிமொழியே தவமிருந்தாய்
வைகை முழுகியம்மா வனமயிலே தவமிருந்தாய்
பொய்கை முழுகியம்மா பெற்றவளே தவமிருந்தாய்
தவத்தி லிருந்தவளே சத்தகன்னித் தாயாரே
ஆற்று மணலெடுத்து அரனாரை யுண்டுபண்ணாய்
சேற்று மணலெடுத்துச் சிவனாரை யுண்டுபண்ணாய்
அம்பைநதிக் கரையில் காமாட்சித்தவ மிருந்தாய்
இருநூற்றுக் காதவழி திருநீற்றால் கோட்டையிட்டாய்
திருநீற்றால் கோட்டையிட்டாய் திகம்பரியே மாரிமுத்தே
அருணாசலம் தனிலே ஈசான்ய மூலையிலே
திருவண்ணா மலையிலேதான் தேவிதவ மிருந்தாய்
அருணாசலந் தனிலே ஆத்தாள் தவமிருந்தாய்
ஈசான்ய மூலையிலே இருத்தாய் பெருந்தவசு
இருந்தாய் பெருந்தவசு இடப்பாகம் பேறுபெற்றாய்
இடப்பாகப் பேறுபெற்ற ஈஸ்வரியே மாதாவே
காக முதுகினில் கதம்பப்பொடி பூசிவைத்தால்
காகமறியு மோதான் கதம்பப்பொடி வாசனையை
கொக்கு முதுகினில் கோமேதகம் கட்டிவைத்தால்
கொக்குமறியு மோதான் கோமேதகத்தி னொளியை
மூலக் கனலதனில் முதன்மையாய் நின்றசக்தி
பாலனுக்கு வந்த பார யெரிச்சல்களில்
காலெரிவு கையெரிவு கட்டழகி காருமம்மா
குத்தல் குடைச்சலோடு குலைமார்பு நோவு
மண்டைக் குடைச்சலோடு மாரடைப்பு தலைநோவு
வாதபித்த சீதசுரம் வல்பிணியை வாங்குமம்மா
இடுப்புக்குடைச் சலைத்தா னீஸ்வரியே வாங்குமம்மா
பித்த யெரிவுகளைப் பெற்றவளே வாங்குமம்மா
கழுத்து வலியதனைக் கட்டழகி வாங்குமம்மா
பத்திரியால் தான்தடவி பாராமுத் தழித்துவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபூதியைப்போட்டு இறக்கிவிடு முத்திரையை
வேப்பிலைபட்டவிடம் வினைகள் பறந்தோடுமம்மா
பத்திரி பட்டவிடம் பாபம்பறந் தோடுமம்மா
விபூதிபட்ட க்ஷணமே வினைகள் பறந்தோடுமம்மா
பஞ்சாக்ஷரம் பட்டால் பாவங்கள் தீர்ந்துவிடும்
பத்தென்றா லிரண்டறியேன் பாலனம்மா வுன்னடிமை
எட்டென்றா லிரண்டறியேன் ஏழையம்மா வுன்னடிமை
நாகத்தின் கண்ணேயம்மா நல்லவிடைப் பாம்பே
சேக்ஷத்தின் கண்ணேயம்மா சின்னவிடைப் பாம்பே
பாம்பேதலைக் கணைத்தான் வேப்பிலையே பஞ்சிமெத்தை
வேப்பம்பா லுண்டவளே வேதாந்த மாரிமுத்தே
ஐந்தாறு பாம்புனக்கு அள்ளியிட்ட வீரசடை
வீரசடை மேலிருந்து விமலியரே கொஞ்சுமம்மா
முந்நூறு சந்தி முதற்சந்தி யுன்னுதென்றாய்
நாநூறுசந்தி நடுச்சத்தி யுன்னுதென்றாய்
சந்திக்குச் சந்தி தனிச்சந்தி யுன்னுதென்றாய்
வீதிக்குவீதி நீ வெளிச்சந்தி யுன்னுதென்றாய்
பட்டத் தழகியம்மா படைமுகத்து ராஜகன்னி
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
திருவிளக்கு நாயகியே தேவிகன்னனூராளே
மணிவிளக்கு மேலிருந்து மாதாவே கொஞ்சுமம்மா
விளக்கிற் குடியிருந்து மெல்லியரே கொஞ்சுமம்மா
திருவிளக்கின் மேலிருந்து தேவியரே கொஞ்சுமம்மா
கொஞ்சுமம்மா பெற்றவளே கோபாலன் தங்கையரே
சிரித்தார் முகத்தையம்மா செல்லரிக்கக் கண்டிடுவாய்
பரிகாசஞ் செய்தவரைப் பல்லைப் பிடுங்கிவைப்பாய்
மூலைவீட்டுப் பெண்களைநீ முற்றத்திலாட்டி வைப்பாய்
அறைமனைப் பெண்களைநீ அம்பலத்தி லாட்டிடுவாய்
பார்ப்பாரப் பெண்களைநீ தோற்பாதங் கட்டிவைப்பாய்
தோற்பாதங் கட்டிடுவாய் துரந்தரியே மாதாவே
நடுவீதியிற் கொள்ளிவைத்து நானறியே னென்றிடுவாம்
கடைவீதியில் கொள்ளிவைத்து கடக்கப்போய் நின்றிடுவாய்
கடியா விஷம்போல் கடிக்கவிட்டுப் பார்த்திடுவாய்
தீண்டா விஷம்போல் தீண்டவிட்டுப் பார்த்திடுவாய்
பாம்புக்கண்ணி நீலியம்மா பழிகாரி மாரிமுத்தே
தாயே துரந்தரியே சர்வலோக மாதாவே
ஆறாத கோபமெல்லாம் ஆச்சியரே விட்டுவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் முழுகியம்மா கடுகநீ வாருமம்மா
காவேரியில் தான்முழுகிக் காமாட்சி வாருமிங்கே
வந்தமனை வாழுமம்மா இருந்தமனை யீடேறும்
கஞ்சா வெறியன் கனவெயன் பாவாடை
பாவாடை ராயனைத்தான் பத்தினியே தானழையும்
தாயாரும் பிள்ளையுமாய்த் தற்காக்க வேணுமம்மா
மாதாவும் பிள்ளையுமாய் மனதுவைத்துக் காருமம்மா
ஆத்தாளும் பிள்ளையுமாய் அன்புவைத்துக் காருமம்மா
காரடி பெற்றவளே காலுதலை நோகாமல்
காசிவள நாட்டைவிட்டுக் காரணியே வந்தருளும்
ஊசிவள நாட்டைவிட்டு உத்தமியே வந்தருளும்
பம்பை முழங்கிவரப் பறமேள மார்ப்பரிக்க
சிற்றுடுக்கை கொஞ்சிவர சிறுமணிக ளோலமிட
வேடிக்கை பார்த்திருந்தாள் வேப்பஞ் சிலையாளும்
கேளிக்கை பார்த்திருந்தாள் கிளிமொழியாள் மாரிமுத்து
சமய புரத்தாளே சாம்பிராணி வாசகியே
முக்கோணத் துள்ளிருக்கும் முதன்மையாய் நின்றசத்தி
நாற்கோணத் துள்ளிருக்கும் நல்லமுத்து மாரியரே
பஞ்சாட்சரப் பொருளே பார்வதியே பெற்றவளே
அறுகோணத் துள்ளிருக்கும் ஆதிபர மேஸ்வரியே
அஷ்டா க்ஷரப்பொருளே ஆனந்த மாரிமுத்தே
நாயகியே மாரிமுத்தே நாரணனார் தங்கையரே
ஐம்பத்தோரட்சரியே ஆதிசிவன் தேவியரே
ஆதிசிவன் தேவியரே அம்மைமுத்து மாரியரே
பேருலக ரக்ஷகப் பெருமாளுடன் பிறப்பே
பெருமா ளுடன்பிறந்து பேருலகை யாண்டவளே
ஆயனுடன் பிறந்து அம்மைமுத்தாய் நின்றவளே
திரிகோணத் துள்ளிருக்கும் திரிபுர சவுந்தரியே
ஆறாதாரப் பொருளே அபிஷேகப் பத்தினியே
மூலாதாரப் பொருளே முன்பிறந்த தேவதையே
தாயே துரந்தரியே சர்வலோ கேஸ்வரியே
பத்திரியால் தான்தடவிப் பாரமுத்தைத் தானிறக்கும்
வேப்பிலையால் தான்தடவி மெல்லியரே முத்திறக்கும்
மேனியெல்லாம் தான்குளிர விளையாடி முத்திறக்கும்
இறங்கிறங்குந் தாயாரே எங்களைக் காப்பாற்றுமம்மா
முத்தினு முத்து முகத்திலிடு மாணிமுத்து
எங்கும் நிறைந்தமுத்து எல்லோர்க்கும் மாரிமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாய்ப் பிறந்துநீ பேருலகை யாளவந்தாய்
பேருலகை யாளவந்தாய் பெண்ணரசி மாரிமுத்தே
நித்தம் பராமரிக்க நிஷ்டூரி நீபிறந்தாய்
தேசம் பராமரிக்கத் தெய்வக்கன்னி நீபிறந்தாய்
கிளியேந்தும் நாயகியே கிளிமொழியே தாயாரே
நித்திய கல்யாணி நீலி பரஞ்சோதி
அம்மணி பார்வதியே ஆணிமுத்துத் தாயாரே
லோகமெல்லாம் முத்தளக்கும் லோகபர மேஸ்வரியே
வெற்றிக்கொடி பறக்க விருதுபம்பை தான்முழங்க
எக்காள மூதிவர எங்குங் கிடுகிடென்ன
பஞ்சவர்ண டால்விருது பக்கமெல்லாஞ் சூழ்ந்துவர
நாதசுர மேளம் நாட்டியங்க ளாடிவர
தப்பட்டை மேளம் தவில்முரசு தான்முழங்க
காளங்க ளூதிவர கவிவாண ரெச்சரிக்க
சின்னங்க ளூதிவர சிறப்பாய்க் கொடிபிடிக்க
ஜண்டா சிலர்பிடிக்கத் தனிமுரசு தானடிக்க
கொடிகள் சிலர்பிடிக்கக் கொக்கரிப்பார் வீரமக்கள்
சாமரைகள் தான்வீச சந்திப்பார் வீரமக்கள்
தாரை பூரிசின்னம் ஆராபாரமாய் முழங்க
தக்கையு டுக்குகளும் தவிலொடு பம்பைகளும்
மிக்க தவுண்டைகளும் மிருதங்கம் தான்முழங்க
நன்குடியுஞ் சுதியும் நன்றாக வூதிவர
தம்பு ருவீணை தககபடி வாசிக்க
பம்பை யடித்துப் பறமேளந் தானதிர
கெண்செட்டு வாத்தியமும் கிளார்நெட்டு வாத்தியமும்
கொடிவாத்தியம் புதிதாய்க் கொண்டுவந்தா ருன்மக்கள்
இத்தனை வாத்தியங்கள் இசைக்கின்றார் பாருமம்மா
பார்த்துக் குளிருமம்மா பாங்கான வுன்மனது
கண்டு குளிருமம்மா கல்லான வுன்மனது
எப்படி யாகிலுந்தா னேழைகளு மீடேற
கண்பாரும் கண்பாரும் காரண சவுந்தரியே
இந்திரனுக் கொப்பா யிலங்குமக மாரியரே
கும்பத் தழகியம்மா கொலுமுகத்து ராஜகன்னி
சகலகுற்றம் சகலபிழை தாயாரே நீபொறுப்பாய்
வணங்குகின்ற மக்களுக்கும் வாழ்வு மிகவளிப்பாய்
ஓங்கார ரூபியென்று உன்னையே தோத்தரிக்க
படவேட்டில் வீற்றிருக்கும் பரஞ்சோதித் தாயாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரறிவா ருன்மகிமை ஆணிமுத்துத் தாயாரே
அண்ட புவனமெல்லாம் அம்மா வுனைத்தொழுவார்
தேசங்க ளெங்குநிதம் தேவியைத் தோத்தரிப்பார்
எள்ளுக்கு ளெண்ணெயைப்போ லெங்கு நிறைந்தசக்தி
எங்கும் நிறைந்தவளே எல்லோர்க்குந் தாயாரே
அஞ்சலென் றவஸ்தமோடு அடியார் தமைக்காக்க
வேப்பிலையுங் கையில் விபூதியெங்குந் தூளிதமும்
கருணா கடாட்சம்வைத்துக் காக்கமக வாயியுந்தன்
காணார விந்தமதைத் தந்தருளும் மாரிமுத்தே
உன்பேர் நினைத்தால் பில்லிபிசாசு பறந்தோடுமம்மா
சூனியமும் வைப்பும் சுழன்றலைந் தோடுமம்மா
பாதாளவஞ்சனமும் பறந்திடுமுன் பேர்நினைத்தால்
சத்தகன்னி மாதாவே சங்கரி மனோன்மணியே
கரகத்தில் வீற்றிருக்கும் கன்னனூர் மாரிமுத்தே
சூலங் கபாலமுடன் துய்ய மரகதமும்
ஓங்கார ரூபமம்மா ஒருவ ரறிவாரோ
மகிமை யறிவாரோ மானிடர்கள் யாவருந்தான்
அடியார் தமைக்காக்கு மந்திர நிரந்தரியே
அடியார்கள் செய்தபிழை ஆச்சியரே நீபொறுப்பாய்
கோயி லடிமையம்மா, கொண்டாடும் பாலகன்றான்
சந்ததி பிள்ளைதான் தற்காரும் பெற்றவளே
உன்னையல்லால் வேறுதுணை ஒருவரையும் காணேனம்மா
வருந்துவார் பங்கில் வளமாய்க் குடியிருப்பாய்
பாவாடைக் காரியம்மா பராபரியே அங்குகண்ணே
உண்ணுகின்ற தேவதைகள் உடுத்துகின்ற தேவதைகள்
கட்டுப்பட்ட தேவதைகள் காக்கின்ற தேவதைகள்
இருந்து மனையிடத்தி லிருந்துண்ணும் தேவதைகள்
சாம்பிராணி தூபத்திற் குட்பட்ட தேவதைகள்
அனைவோரும் வந்திருந்து அடியாரைக் காக்கவேண்டும்
ஓராம் படித்தளமாம் ஓலைப்பூ மண்டபமாம்
ஓலைப்பூ மண்டபத்தில் உகந்து கொலுவிருந்தாள்
இரண்டாம் படித்தளமாம் இரத்தின சிம்மாதனமாம்
இரத்தின சிம்மாதனத்தி லிருந்தரசு தான்புரிவாள்
மூன்றாம் படித்தளமாம் முனைமுகப்புச் சாலைகளாம்
முனைமுகப்புச் சாலைகளில் முந்திக் கொலுவிருந்தாள்
நான்காம் படித்தளமாம் நவரத்தின மண்டபமாம்
நவரத்தின மண்டபத்தில் நாயகியும் வந்தமர்ந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் படித்தளமாம் அழுத்திய சிம்மாதனமாம்
அழுத்திய சிம்மாதனத்தில் ஆயி கொலுவிருந்தாள்
ஆறாம் படித்தளமாம் அலங்காரச் சாவடியாம்
அலங்காரச் சாவடியில் ஆச்சியரும் வந்திருந்தாள்
ஏழாம் படித்தளமாம் எழுதிய சிம்மாதனமாம்
எழுதிய சிம்மாதனத்தி லீஸ்வரியாள் கொலுவிருந்தாள்
எட்டாம் படித்தளமாம் விஸ்தார மேடைகளாம்
விஸ்தார மேடைதனில் விமலியரும் வந்தமர்ந்தாள்
ஒன்பதாம் படித்தளமாம் ஒருமுகமாய் நின்றசத்தி
ஒருமுகமாய் நின்றசத்தி உத்தமியும் கொலுவிருந்தாள்
பத்தாம் படித்தளமாம் பளிங்குமா மண்டபமாம்
பளிங்குமா மண்டபத்தில் பத்தினி கொலுவிருந்தாள்
ஆத்தாள் கொலுவிலதோ னரரார் கொலுவிருந்தார்
ஐங்கரனும் வல்லபையும் அன்பாய்க் கொலுவிருந்தார்
தொந்தி வயிற்றோனும் துந்துபியுங் கொலுவிருந்தார்
குழந்தை வடிவேலன் குமரேசர் தானிருந்தார்
தோகை மயிலேறும் சுப்பிரமணியர் கொலுவிருந்தார்
சிங்கவா கனமேறுந் தேவி கொலுவிருந்தாள்
ஊர்காக்குங் காளி உத்தமியாள் கொ்லுவிருந்தாள்
துர்க்கையொடு காளி தொடர்ந்து கொலுவிருந்தாள்
வள்ளிதெய்வா னையோடு மகிழ்ந்து கொலுவிருந்தாள்
பச்சைமலை நாயகியாள் பைங்கிளியாள் தானிருந்தாள்
பூவை குறத்தியரும் பொருந்திக் கொலுவிருந்தாள்
வாழ்முனியும் செம்முனியும் வந்து கொலுவிருந்தார்
காத்தான் கறுப்பனொடு கட்டழகர் வீற்றிருந்தார்
தொட்டியத்துச் சின்னானும் துரைமகனுந் தாமிருந்தார்
மருமக்க ளெல்லோரும் மகிழ்ந்து கொலுவிருந்தார்
குமாரர்க ளெல்லோரும் கூடிக் கொலுவிருந்தார்
ஆரிய மாலையுட னனைவோரும் வீற்றிருந்தார்
ஆயன் பெருமா ளனந்த சயனனென்னும்
மாயன் பெருமாள் மங்கை மணவாளன்
ஐவரையும் காத்த ஆதி நெடுமாலும்
பஞ்சவரைக் காத்த பாரளந்தோன் தாமிருந்தார்
கொற்றவரைக் காத்த கோபாலர் தாமிருந்தார்
முட்டையிற் குஞ்சு மிகவறியாப் பாலகரைப்
பிட்டு வளர்த்தெடுத்த பெருமான் கொலுவிருந்தார்
செட்டையிற் காத்த ஜெயராமர் சீதையரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலர்மேலு மங்கையம்மா ளரிராமர் சீதையரும்
மங்கையோடு லட்சுமியு மகிழ்ந்து கொலுவிருந்தார்
சீதேவி பூதேவி சேர்ந்து கொலுவிருந்தார்
பாஞ்சால னெக்கியத்தில் பதுமைபோல் வந்துதித்த
பத்தினியாள் துரோபதையும பாரக் கொலுவிருந்தார்
தளரா தனஞ்செயரும் தருமர் கொலுவிருந்தார்
வாயுதேவன் புத்திரனார் மதவீமன் தாமிருந்தார்
தேவேந்திரன் புத்திரனார் தேர்விஜயன் தாமிருந்தார்
நகுலசகா தேவர் நலமாய்க் கொலுவிருந்தார்
கானற் குயிலழகர் கட்டழகர் வீற்றிருந்தார்
ஐவர்களுங் கூடி அன்பாய்க் கொலுவிருந்தார்
பட்டத் தரசியான பைங்கிளி சுபத்திரையும்
ஆயன் சகோதரியா ளாரணங்கு வீற்றிருந்தாள்
நல்லதங்காள் வீரதங்காள் நல்லசங் கோதியம்மாள்
அர்த்தமுள்ள சுந்தரியா ளாரணங்கு வீற்றிருந்தாள்
மலையனூர் தானமர்ந்த மாரி கொலுவிருந்தாள்
கைச்சூலங் கப்பறையுங் கையிற் கபாலமுடன்
பச்செலும்பு தின்றால் பாலொழுகு மென்றுசொல்லிச்
சுட்டெலும்பு தின்றவளே சுடலைவனங் காத்தவளே
அக்காளும் தங்கையரும் ஐந்திரண் டேழுபேரும்
ஐந்திரண் டேழுபேரும் அங்கே கொலுவிருந்தார்
தங்காது பேய்பில்லி தன்பேரைச் சொன்னவுடன்
அங்காள வீஸ்வரியும் அமர்ந்து கொலுவிருந்தாள்
தொல்லைவினை நீங்கச் சுகுணமதை யளிக்கும்
எல்லைப் பிடாரியரும் இங்கே கொலுவிருந்தாள்
காவலர்கள் தான்புகழக் கனக சிம்மாதனத்தில்
காவ லதிகாரி கட்டழகி வீற்றிருந்தாள்
இந்த மனைமுதலா வேழுமனை யுங்காவல்
சந்தத முன்காவல் சாதுகுண மாரியரே
காவல் பதனமம்மா கட்டழகி மாரியரே
காவலுக் குள்ளே களவுவரப் போகுதம்மா
பாரா சவுக்கிட்டுப் பத்திரமாய்க் காருமம்மா
தீராத வினைகளைத் தீர்க்கும் பராபரியே
தாழும் பதிகளைத்தான் தற்காத்து ரட்சியம்மா
ஏழு பிடாரியும் இசைந்து கொலுவிருந்தார்
முத்தாலு ராவுத்தன் முனையுள்ள சேவகனும்
முற்றத்தில் வந்துநிதம் முனைந்து கொலுவிருநதார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவாடை கொங்கையென்று பூரித்துக் காத்திருக்கும்
பாவாடை ராயனும் பக்கங் கொலுவிருந்தார்
தாட்சியில் லாதசிவ சங்கரியாளென்று சொல்லும்
ஆட்சியுடன் கொலுவில் அமர்ந்து கொலுவிருந்தார்
தேவி திருக்கொலுவில் சேர்ந்து கொலுவிருந்தார்
ஆயி திருக்கொலுவில் அமர்ந்தார் அனைவோரும்
மாரிதிருக் கொலுவில் மனமகிழ்ச்சி யாயிருந்தார்
வீரி திருக்கொலுவில் வீற்றிருந்தர ரெல்லோரும்
ஆலித்து தானிருந்தார் அம்மை திருக்கொலுவில்
பாலித்துத் தானிருந்தார் பராபரியாள் தன்கொலுவில்
கூடிக் கொலுவிருந்தார் கொம்பனையாள் தன்கொலுவில்
நாடிக் கொலுவிருந்தார் நாரணியார் தன்கொலுவில்
சந்தேகம் போக்கிச் சாயுச்சிய மடைய
சந்தோஷ மாகத் தாமிருந்தா ரெல்லோரும்
நாடு தழைக்கவம்மா நல்லோர் மிகவாழி
மாடு தழைக்கவம்மா மாநிலத்தோர் மிகவாழி
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும் மங்கையரும்
ஆரியரும் மற்றோரும் யாவர்களுந் தான்படிக்க
முன்னாளில் மூத்தோர் மொழிந்த மாரிதாலாட்டை
இன்னாளில் போற்ற எழுதா எழுத்ததனால்
அச்சுக்கூடத் ததிபர் அனேக ரிதுவரையில்
உச்சிதமா யச்சிலிதை யோங்கிப் பதிப்பித்தார்
கற்றோரும் மற்றோரும் களிப்பாய்ப் படிப்பதற்குச்
சொற்குற்ற மில்லாமல் சுத்தப் பிரதியதாய்ப்
பாரிலுள்ளோ ரிக்கதையைப் படித்துத் தொழுதேத்த
கற்றவரும் மற்றவரும் களிப்படைய வாழி
வாழி மிகவாழி வானவர்கள் தான்வாழி
சங்கரனும் சங்கரியும் அறுமுகனுந் தான்வாழி
செங்கண்மால் ஸ்ரீராமர் சீதையருந் தான்வாழி
பஞ்சவர்க ளைவரும் பைங்கிளியாள் துரோபதையும்
அல்லி சுபத்திரையும் அனைவோரும் தான்வாழி
முப்பத்து முக்கோடி தேவர்களுந் தான்வாழி
சொற்பெரிய சோம சூரியாக்கினி வாழி
நாற்பத் தெண்ணாயிரம் நன்முனிவர் தான்வாழி
காக்கும் கருடசித்தர் வித்தியா தரர்வாழி
சந்திரனுஞ் சூரியனுந் தானவர்கள் தான்வா
இந்திரனுந் தேவர்களும் எல்லோருந் தான்வாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகக் காவும் காமதேனு வும்வாழி
பற்பல தீவுகளும் பஞ்சாக்ஷரமும் வாழி
காத்தானோடு வீரன் கறுப்பன் மிகவாழி
சங்கிலி கறுப்பன் சப்பாணி தான்வாழி
மாட னிருளனுடன் வடுகனுந்தான் வாழி
பாவாடை ராயனுடன் பலதேவரும் வாழி
இந்தக் கதைகேட்டோர் எந்நாளுந் தான்வாழி
பெருமை யுடன்கேட்கும் பெரியோர் மிகவாழி
ஊரெங்கும் கீர்த்திபெற்ற உத்தமருந் தான்வாழி
பாருலகில் இக்கதையைப் படித்தோர் மிகவாழி
நாரணியாள் தன்கதையை நாள்தோறும் வாசிப்போர்
பாரினில் புத்திரபாக்கியம் படைத்துமிக வாழ்வாரே
மாரித் திருக்கதையை மகிழ்ந்துமே கேட்டோரும்
தேவி திருக்கதையைத் தீர்க்கமாய்க் கேட்டோரும்
பாடிப் படித்தோரும் பாக்கியத்தைத் தான்பெறுவார்
நாடித் துதிப்போரும் நற்கதியைத் தான்அடைவார்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்
மங்களம் மங்களம் மாரியம்மன் தன்கதைக்கு
எங்கும் நிறைந்த ஈஸ்வரிக்கு மங்களமாம்.

**மாரியம்மன் தாலாட்டு முற்றிற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லலிதாம்பிகை
# நவரத்தின மாலை

ஞான கணேசா சரணம் சரணம்
ஞான ஸ்கந்தா சரணம் சரணம்
ஞான ஸத்குரு சரணம் சரணம்
ஞானா னந்தா சரணம் சரணம்

### காப்பு

ஆக்கும்தொழில் ஐங்கரனாற்றநலம்
பூக்கும் நகையாள் புவனேஸ் வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கணநா யகவா ரணமே!
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே (மாதா)

### வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்க்
கண்மூடி நெடுங் கனவான தவம்
பெற்றும் தெரியார் நிலையென்னில் அவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க் கெமனாக எடுத் தவளே
வற்றாத அருட் சுனையே வருவாய்.
மாதா ஜெயஓம் லலிதாம் பிகைமே! (மாதா)

### நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக் குவையே சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலத் திருமே னியிலே நினைவாய்
நினை வற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரி வருவாய் வருவாய்!
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

**முத்து**

முத்தே வருமுத் தொழிலாற் றிடவே
முன்னின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவா ஸினியே சரணம்
தத்தே றியநான் தனயன் தாய்நீ
சாகா தவரம் தரவே வருவாய்
மத்தே றுததிக் கிணை வாழ் வடையேன்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

**பவளம்**

அந்தி மயங்கிய வானவி தானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்தமேடை
சிந்தை நிரம்ப வளம்பொழி வாளோ
தேம்பொழி லாமிது செய்தவ ளாரோ
எந்தை யிடத்து மனத்தும் இருப்பாள்
எண்ணுப வர்க்கருள் எண்ணமி குத்தாள்
மந்திர வேத மயப்பொரு ளானாள்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

**மாணிக்கம்**

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாக் கலையா னவளே
பூணக் கிடையாப் பொலிவா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநா மமும் நின் துதியும்
நவிலாதவரை நாடா தவளே!
மாணிக்க ஒளிக் கதிரே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே! (மாதா)

**மரகதம்**

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதி லயமே இசையே சரணம்
அரஹர சிவஎன் றடியவர் குழும
அவரருள் பெற அரு ளமுதே சரணம்
வரநவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

### கோமேதகம்

பூமே வியநான் புரியும் செயல்கள்
பொன்றாது பயனும் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக் தியெனத்
திடமாய் அடியேன் மொழியுந் திறமும்
கோமே தகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே வருவாய் தருவாய்
மாமே ருவிலே வளர்கோ கிலமே
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

### பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கனி பதும
ராகவி காசவி யாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி
சாம்பவி சந்த்ர கலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத சொருபிணி நித்யகல் யாணி
மஞ்சுள மேரு ச்ருங்க நிவாஸினி
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

### வைடூரியம்

வலையொத்த வினை கலையொத்த மனம்
மருளப் பறையாற் றொளியொத் தவிதால்
நிலையற் றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலையற் றசைவற் றநுபூ திபெறும்
அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூற்பயன்**

எவர் எத் தினமும் இசைவாய் லலிதா
நவரத் தினமாலை நவின்றிடுவார்
அவர் அற்புதசக் தியெலாம் அடைவார்
சிவரத் தினமாய்த் திகழ்வா ரவரே. (மாதா)

**லலிதா நவரத்தினமாலை முற்றிற்று**

# கற்பூர நாயகியே!

கற்பூர நாயகியே! கனகவல்லி
காளி மகமாயி! கருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்தவல்லி தெய்வ யானையம்மா
விற்கோல வேதவல்லி! விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நானமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே! (கற்)

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி! (கற்)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே! எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடி வாம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல்கேட்டுன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத்தினம் வழி அனுப்பு! (கற்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிரண்டும் உன்னுருவே காண வேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெலாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடைய தாக வேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளைத் தீருமம்மா! (கற்)

அன்னைக்கு உபசாரம் செய்வ துண்டோ?
அருள்செய்ய இந்நேரம் ஆவ துண்டோ?
கண்ணுக்கு இமையன்றிக் காவ லுண்டோ?
கன்றுக்குப் பசுவன்றி சொந்த முண்டோ?
முள்ளைக்கும் பிள்ளைக்கும் பார்ப்ப துண்டோ?
முழுமைக்கும் நீஎந்தன் அன்னை யன்றோ?
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேத முண்டோ?
என்றைக்கும் நானுந்தன் பிள்ளை யன்றோ? (கற்)

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினுள் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெலாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழ வேண்டும்
சுற்றமெலாம் நீடூழி வாழ வேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆள வேண்டும்
மற்றதெலாம் நானுனக்குச் சொல்ல லாமா
மடிமீது பிள்ளைஎன்னைத் தள்ள லாமா! (கற்)

அன்புக்கே நானடிமை ஆக வேண்டும்
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்னெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நானென்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீஎன்றும் வாழ வேண்டும்! (கற்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவள வாயழகி! உன்னெழிலோ
சின்னஇரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே! உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை! (கற்)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கயிறாகி உயிராகி உடலாகிறாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை.(கற்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கு அர்ச்சனை

பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி
போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி
முற்றறி வொளியாய் மிளிர்ந்தாய் போற்றி
மூவுலகும் நிறைந்தி ருந்தாய் போற்றி
வரம்பி லின்பமாய் வளர்ந்திருந்தாய் போற்றி

இயற்கை அறிவொளி யானாய் போற்றி
ஈரே மூலகம் ஈன்றாய் போற்றி
பிறர்வய மாகாப் பெரியோய் போற்றி
பேரின்பப் பெருக்காய்ப் பொலிந்தோய் போற்றி
பேரருட் கடலாம் பொருளே போற்றி

முடிவி லாற்றல் உடையாய் போற்றி
மூவுல குந்தொழ மூத்தோய் போற்றி
அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி
ஓம்எனும் பொருளாய் உள்ளோய் போற்றி

இருள்கெடுத்து இன்பமருள் எந்தாய் போற்றி
மங்கள நாயகி மாமணி போற்றி
வளமை நல்கும் வல்லியே போற்றி
அறம்வளர் நாயகி அம்மையே போற்றி
மின்ஒளி யம்மையாம் விளக்கே போற்றி

மன்ஒளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
முக்கட் சுடரின் முதல்வி போற்றி
ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி

சூடா மணியே சுடரொளி போற்றி
இருள்ஒழித்து இன்பம் ஈவோய் போற்றி
அருள்பொழிந்து எம்மை ஆள்வாய் போற்றி
அறிவினுக்கு அறிவாய் ஆனாய் போற்றி
இல்லற விளக்காம் இறைவி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடரே விளக்காம் தூயாய் போற்றி
இடரைக் களையும் இயல்பினாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவி போற்றி
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் போற்றி
அருமறைப் பொருளாம் ஆதி போற்றி

தூண்டு சுடரனைய சோதி போற்றி
ஓதும் உள்ஒளி விளக்கே போற்றி
சோதியே போற்றி சுடரே போற்றி
இருள்கெடுக்கும் இல்லக விளக்கே போற்றி
சொல்லக விளக்காம் சோதியே போற்றி

பலர்காண் பல்கலை விளக்கே போற்றி
நல்லக நமச்சிவாய விளக்கே போற்றி
உவப்பிலா ஒளிவளர் விளக்கே போற்றி
உணர்வுசூழ் கடந்ததோர் விளக்கே போற்றி
உடம்பெனும் மனையக விளக்கே போற்றி

உள்ளத் தகளி விளக்கே போற்றி
மடம்படும் உணர்நெய் விளக்கே போற்றி
உயிரெனும் திரிமயக்கு விளக்கே போற்றி
இடம்படும் ஞானத்தீ விளக்கே போற்றி
நோக்குவார்க்கு எரிகொள் விளக்கே போற்றி

ஆதியாய் நடுவுமாகும் விளக்கே போற்றி
அளவிலா அளவுமாகும் விளக்கே போற்றி
சோதியாய் உணர்வுமாகும் விளக்கே போற்றி
தில்லைப் பொதுநட விளக்கே போற்றி
கற்பனை கடந்த சோதியே போற்றி

கருணையே உருவாம் விளக்கே போற்றி
அற்புதக் கோல விளக்கே போற்றி
அருமறைச் சிரத்து விளக்கே போற்றி
சிற்பர வியோம விளக்கே போற்றி
பொற்புடன் நடஞ்செயல் விளக்கே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத் திருளை ஒழிப்பாய் போற்றி
கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
உருகுவோர் உள்ளத்து ஒளியே போற்றி
பெருகு அருள்சுரக்கும் பெருமை போற்றி
இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி

அருவே உருவே அருவுரு போற்றி
நந்தா விளக்கே நாயகியே போற்றி
செந்தா மரைத்தாள் தந்தாய் போற்றி
தீபமங்கள ஜோதி விளக்கே போற்றி
மதிப்பவர் மனமணி விளக்கே போற்றி

பாகம் பிரியா பராபரை போற்றி
ஆகம முடிமேல் அமர்ந்தாய் போற்றி
ஏகமும் நடஞ்செய் எம்மான் போற்றி
ஊழி ஊழி உள்ளோய் போற்றி
ஆழியான் காணா அடியோய் போற்றி

ஆதியும் அந்தமும் அற்றாய் போற்றி
அந்தமிலா இன்பம் அருள்வாய் போற்றி
முந்தைய வினையை முடிப்போய் போற்றி
பொங்கும் கீர்த்தி பூரணி போற்றி
தண்ணருள் சுரக்கும் தாயே போற்றி

அருளே உருவாய் அமைந்தோய் போற்றி
இருநிற மக்கள் இறைவி போற்றி
குருவென ஞானம் கொடுப்பாய் போற்றி
ஆறுதல் எமக்கிங் களிப்பாய் போற்றி
தீதெல்லாம் தீர்க்கும் திருவே போற்றி

பக்தியில் ஆழ்ந்த பரமே போற்றி
எத்திக் குந்துதி ஏய்ந்தாய் போற்றி
அஞ்சே லென்றருளும் அன்பே போற்றி
தஞ்ச மென்றவரைச் சார்வோய் போற்றி
ஓதுவோர் அகத்துறை ஒளியே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்காரத்து உள்ளொளி விளக்கே போற்றி
எல்லா உலகமும் ஆனாய் போற்றி
பொல்லா வினைகள் அறுப்பாய் போற்றி
புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் போற்றி
செல்லாச் செல்வம் தருவாய் போற்றி

பூங்குழல் விளக்கே போற்றி போற்றி
உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
செல்வம் கல்வி சுரப்பருள் போற்றி
நல்லன்பு ஒழுக்கம் நல்குவாய் போற்றி

விளக்கிட்டார்க்கு மெய்ந்நெறி விளக்குவாய் போற்றி
நலம்எல்லாம் உயிர்க்கும் நல்குக போற்றி
தாயே நின்னருள் தந்தாய் போற்றி
தூயநின் திருவடி தொழுதனம் போற்றி
போற்றிஎன்பார் அமரர் விளக்கே போற்றி

போற்றிஎன்பார் மனிதர் விளக்கே போற்றி
போற்றிஎன் அன்பொளி விளக்கே போற்றி
போற்றி போற்றி திருவிளக்கே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளிப் பாட்டு

யாது மாகி நின்றாய் — காளீ!
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் — நின்றன்
செயல்க ளன்றி யில்லை.
போது மிங்கு மாந்தர் — வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதி சக்தி, தாயே — என்மீ
தருள் புரிந்து காப்பாய். 1

எந்த நாளு நின்மேல் — தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
கந்தனைப் பயந்தாய் — தாயே
கருணை வெள்ள மானாய்!
மந்த மாருதத்தில் — வானில்
மலையி னுச்சி மீதில்,
சிந்தை யெங்கு செல்லும் — அங்குன்
செம்மை தோன்று மன்றே! 2

கர்ம யோக மொன்றே — உலகில்
காக்கு மென்னும் வேதம்
தர்ம நீதி சிறிதும் — இங்கே
தவற லென்ப தின்றி —
மர்ம மான பொருளாம் — நின்றன்
மலரடிக் கணெஞ்சம் —
செம்மை யுற்று நாளும் — சேர்ந்தே
தேசு கூட வேண்டும். 3

என்ற னுள்ள வெளியில் — ஞானத்
திரவி யேற வேண்டும்
குன்ற மொத்த தோளும் — மேருக்
கோல மொத்த வடிவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றை நாடு மனமும் — நீயெந்
நாளு மீதல் வேண்டும்
ஒன்றை விட்டு மற்றோர் — துயரில்
உழலு நெஞ்சம் வேண்டா. 4

வானகத்தி னொளியைக் — கண்டே
மன மகிழ்ச்சி பொங்கி
யானெதற்கு மஞ்சேன் — ஆகி
ஞான மொத்த தம்மா — உவமை
நானுரைக் கொணாதாம்.
வானகத்தி லொளியின் — அழகை
வாழ்த்து மாறி யாதோ? 5

ஞாயி றென்ற கோளம் — தருமோர்
நல்லபே ரொளிக் கே
தேய மீதொ ருவமை — எவரே
தேடி யோத வல்லார்?
வாயினிக்கு மம்மா — அழகாம்
மதியி னின்ப ஒளியை
நேயமோ டுரைத்தால் — ஆங்கே
நெஞ் சிளக்க மெய்தும். 6

காளி மீது நெஞ்சம் — என்றும்
கலந்து நிற்க வேண்டும்
வேளை யொத்த விறலும் — பாரில்
வேந்த ரேத்து புகழும்
யாளி யொத்த வலியும் — என்றும்
இன்ப நிற்கு மனமும்
வாழி யீதல் வேண்டும் — அன்னாய்
வாழ்க நின்றன் அருளே. 7

சுப்பிரமணிய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழிக் கூத்து

வெடிபடு மண்டத் திடிபல தாளம் போட — வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம்பாடப் — பாட்டின்
அடிபடு பொருளுன் அடிபடு மொலியிற் கூடக் — களித்
தாடுங் காளீ, சாமுண்டீ, கங்காளீ!
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை. 1

ஐந்துறு பூதம் சிந்திப்போ மொன்றாகப் — பின்னர்
அதுவும் சக்திக் கதியில் மூழ்கிப் போக — அங்கே
முந்துறு மொளியிற் சிந்தை நழுவும் வேகத் — தோடே
முடியா நடனம் புரிவாய், அடு தீ சொரிவாய் —
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை. 2

பாழாம் வெளியும் பதறிப் போய் மெய் குலையச் —
சலனம்
பயிலும் சக்திக் குலமும் வழிகள் கலைய — அங்கே
ஊழாம் பேய்தான் ''ஓஹோ ஹோ'' வென் றலைய
— வெறித்
துறுமித் திரிவாய், செறுவெங்! கூத்தே புரிவாய்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை. 3

சத்திப் பேய்தாந் தலையொடு தலைகள் முட்டிச் —
சட்டச்
சடசட சட்டென் றுடைபடு தாளங் கொட்டி — அங்கே
எத்திக்கினிலும் நின்விழி யனல் போயெட்டித் — தானே
எரியுங் கோலங் கண்டே சாகுங் காலம்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத் தொடு நிர்மூலப் படுமூ வுலகும் — அங்கே
கடவுள் மோனத் தொளியே தனியா யிலகும் — சிவன்
கோலங் கண்டுன் கனல்செய் சினமும் விலகும் —
கையைக்
கொஞ்சித் தொடுவாய், ஆநந்தக் கூத்திடுவாய்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை. 5

— சுப்பிரமணிய பாரதியார்

## அம்மன் அருள்

அகிலமெல்லாம் விளங்கும் அம்மன் அருள் — அது
அடியவர் துயர் தீர்க்கும் ஆயிரம் நலம் சேர்க்கும்
அற்புத விருந்தாகுமே. (அகில)

மதுரையம்பதி வாழும் மீனாட்சியாய் — தொண்டை
மண்டலம் தனையாளும் காமாட்சியாம்
கங்கை நதி பாயும் காசி நகர் தன்னில்
மங்கை விசாலாட்சி தானாகக் கண்ணில் அமுதூட்டி
கருணை நிலை காட்டி நண்ணும் உயிர் காக்கும்
தாயாக (அகில)

திருக்கடவூர் நின்ற அபிராமியாய் — புகழ்
தில்லையிலே அன்னை சிவகாமியாய்
சமய மறிந்துதவ சமயபுரம் மேவி
அமைந்த மகமாயி வடிவாக
அமுத மழை சிந்தும் அழகு விழி கொஞ்ச
ஆனைக் காவில் வளர் சுடராக (அகில)

தென் திசையில் குமரித் திருமேனியாய் — எழில்
திருவேற் காடமர்ந்த கருமாரியாய்
உரிய வரம் தந்து உதவும் மனம் கொண்டு
பெரிய பாளையத்தில் பவானியாய்
உலகமெங்கும் திருத்தலங்கள் தோன்றும் பல
உருவில் நின்றொளிரும் மாதேவியாய் (அகில)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Consorts of the Three Gods

## LAXMI: *The Goddess of Wealth*

Laxmi is the consort of Lord Vishnu. Vishnu represents the power of maintenance. In order to manifest this power Vishnu must necessarily possess wealth. Even in the world a person who is in charge of maintenance needs wealth. A pauper cannot maintain anything. Vishnu is the maintainer of the entire universe. Hence he is married to the Goddess of wealth.

Laxmi is said to be *swarna-hasta* meaning golden-handed. As this name suggests the Goddess pours out riches to the community. Where there is Laxmi there is prosperity. Wealth here also includes moral and ethical values, the nobler aspects of life, the power of the mind and intellect. This kind of wealth has to be acquired by a seeker before his initiation into spiritual knowledge. That explains why Laxmi is worshipped before Saraswati during the *devi-puja.*

Wealth however does not come to a person by merely begging at the feet of Laxmi. Worship of Laxmi, these days has become mere solicitation of material wealth. Man does not realise that when he runs after wealth it moves away from him. The way to command wealth is to leave it alone and to seek the higher values of life. This idea is well-brought out in the allegory of the churning of the milky ocean. The ocean of milk represents a pure *(sattwic)* mind. When man contemplates with a pure mind on the higher ideals of life he evolves spiritually. By gradual evolution he reaches the goal of perfection. A man of perfection gains everything in the world. He commands peace, power and prosperity. Wealth is at his feet. This is the way to gain wealth to win over Laxmi. Laxmi emerging by the churning of the milky ocean symbolises this truth.

Laxmi is described as being seated on the lotus. She holds a lotus in her hand. This is a common symbol amongst most of the Hindu gods and goddess. It only means they are well-rooted in the supreme Reality. By holding a lotus in their hands they only point out to mankind that the goal of their existence is Realisation of the inner wealth.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GODDESS PARVATI

Parvati is also known as Uma. Uma represents *prakriti,* matter. Matter is destructible. The power of destruction can manifest itself only where there is destructible matter. Destruction ceases to have any meaning without destructible objects. Siva being the Lord of destruction has necessarily to wed Uma to manifest his power of destruction.

Parvati is also referred to as *anna poorni* which means 'bestower of food'. *Anna* means 'food', which is to be taken in a wider connotation to mean food for all sense organs i.e. all sense objects.

## GODDES DURGA

The other forms of Parvati are Durga and Kali which are awesome and terrifying. In these forms the goddess rides a lion, wields a number of weapons and wears a garland of skulls, holds a severed head in one hand a lotus in another etc. — all these represent destruction of evil and protection of good (lotus). This goddess is therefore invoked by the seeker to destroy all his desires *(vasanas)* and unveil his supreme Self.

Man at present is riddled with innumerable desires agitations and sufferings. He is tormented by his own negative thoughts and feelings like selfishness, jealously, hatred, greed etc. These are the greatest enemies in man's bosom which loot his inner peace and bliss. They have to be totally annihilated for man to reach the abode of everlasting happiness. Even as he destroys a few of his sins more spring up in the same form. They grow and spread like bacteria and destroy his peace and tranquility. There is no room for persuasion or softness in dealing with these arch enemies of man. They have to be ruthlessly struck and destroyed. By worshipping Durga this idea of ruthless destruction is invoked to annihilate all the desires and unfold divinity.

## SARASWATI: *The Goddess of Knowledge*

The Vedic tradition of India from time immmemorial has given women the highest place of respect and recognition. The Hindu scriptures are referred to as Mother Shruti and the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bhagavad Geeta as Mother Geeta. Knowledge itself has been personified as a feminine deity — the goddess Saraswati. Saraswati literally means "one who gives the essence *(sara)* of our own Self *(swa)*".

The goddess Saraswati is represented as sitting on a lotus. She holds the sacred scripture in one hand and a lotus in the other. With the third and fourth hand she plays the Indian lute *(veena.)*

The seat of the lotus indicates that the Goddess is firmly established in the experience of the supreme Reality. She is rooted in Truth which the lotus represents. By holding the lotus in her hand Saraswati indicates to man the supreme goal that he should reach in his life time, the goal of Self-realisation. The path of that goal is shown by her other hands. There are two distinct paths taking man to the highest experience of godhood — the path of knowledge and the path of devotion.

The path of knowledge is shown by the Goddess holding the sacred book. It is called *gnana marga* in Sanskrit. It expounds Vedanta, the philosophy of the *Vedas.* It is a systematic and scientific presentation of the realities of life. It explains the various layers of matter that man possesses and the core of Reality that lies beneath them. By careful study and reflection the seeker unravels the mystery of his inner life until he reaches the core of his supreme Self. This path is meant for the intellectuals.

The path of devotion is called *bhakti marga.* This path also leads to the goal of Self-realisation. This is meant for those who are predominantly devotional, who use their heart to sing praises of their Lord. Through music, *keertans* or *bhajans* they maintain a single-pointed devotion to the Lord and thereby attain godhood. This is indicated by Saraswati playing the *Veena.*

The four hands of the Goddess represent the four aspects of the inner personality of man namely *manas* (mind), *buddi* (intellect), *ahamkar* (ego) and *chitta* (conditioned-consciousness).

Saraswati is the consort of Brahma. Brahma is the creator. Creation is not possible unless the creator has the knowledge of what and how to create. Knowledge therefore is an essential prerequisite for creation. This idea is symbolised by the marriage of

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Brahma with Saraswati.

During the nine-day festival of devi-puja Goddess Kali (Durga) is Worshipped on the first three days, Goddess Laxmi in the next three days and Saraswati in the last three days. Kali represents the power of destruction. By invoking Kali the devotee is said to draw her mighty power to destroy all his negative tendencies. Thereafter the worship of Laxmi the Goddess of wealth is meant to cultivate and preserve his noble qualities like self-control, tolerence, love etc. These are his inner wealth. Having cleansed the inner personality of the negativities and substituting them with positive qualities the devotee is qualified to receive the knowledge of the Self. The study of the scriptures is futile if one approaches it with an unclean mind. An unclean mind is ever agitated. Such a mind is not fit for study and reflection upon the highest truths of life. A pure mind and an enquiring intellect directed to research of the Self together bring about spiritual awakening. This is symbolised by the devotee worshipping Goddess Sarawati in the last three days. On the tenth day an effigy is burn or thrown into the sea to indicate the destruction of the ego, the annihilation of the lower nature of man. That day is the day of enlightenment Vidyarambha.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org